293

# சோமசுந்தரம்

15 FEB 1946
MADRAS

வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார், B.A.

...ர் ராமுலு கம்பெனி
...ஸ் :: எஸ்பிளனேட், மதராஸ்

O,3MDS,S
N46
103303

ரூபா 1—8—0

# சோமசுந்தரம்

அல்லது

# தோலிருக்கச் சுளை முழுங்கி!

5 FEB 1946
MADRAS

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார், B.A.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

286, அப்பா பில்டிங்ஸ் : : எஸ்பிளனேட், மதராஸ்

[*All Rights Reserved by the Publishers*]

N46
103303

# ராமுலு புதிய ஸங்கீத பிரசுரங்கள்

## கே. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களால்

அநேக சீர்திருத்தங்களுடன் தயாரித்த அரிய புத்தகங்கள்

**1. ராமுலு ஸங்கீத சிந்தாமணி ... ரூ. 3-0-0**

இதில் மகான்களாகிய ஜயதேவர், புரந்தர விட்டலர், தியாகராஜ ஸ்வாமிகள் முத்துஸ்வாமி தீக்ஷிதர் முதலிய வித்வான்களால் இயற்றப்பட்டுப் பிரசித்தி பெற்றிருக்கிற கீர்த்தனைகளும், ராக மாலிகைகளும், பற்பல அரிய ராகங்களை வாசிப்பதற்குரிய அனேக குறிப்புக்களும் மற்றும் ஸ்வர தாளங்களுடன் அடங்கியிருக்கின்றன.

**2. ராமுலு திராவிட கானம் ... ரூ. 3-0-0**

இதில் அடங்கி யிருக்கிற எல்லாப் பாட்டுக்களும் தமிழே. தமிழ் நாட்டில பிரசித்திபெற்ற அனேக வித்வான்களுடைய கீர்த்தனங்களும், மற்றும் ஸ்வர தாளங்களுடன், இதில் அகப்படுமென்றால், இப் புத்தகத்தைப் பற்றி வேறென்ன சொல்வது? தமிழ் இசைச் சங்கம் வித்வான்களுக்கு இது ஒரு அரிய பொக்கிஷமாகும்.

**3. ராமுலு ஸங்கீத சில்லரைக் கோவை ... ரூ. 3-0-0**

இதில் பல்லோர் கீர்த்தனங்கள், சிந்துக்கள், தெம்மாங்குகள், திருப்புகழ், சித்தர் பாட்டுகள், அருட்பா, முத்துவீராயிப் பாட்டு, பரிகாசப் பாட்டு, பூசாரிப் பாட்டு முதலிய பற்பல சில்லரைப் பாட்டுகள் ஸ்வர தாளங்களுடனும் ராகக் குறிப்புகளுடனும் அடங்கியிருக்கின்றன.

கவனிப்பு :—முழு விபரமான கீர்த்தனங்களின் அட்டவணையுடன்கூடிய கேட்லாக்கு வேண்டுபவர்க்கு இனமாய் அனுப்பப்படும். முன் பணமாக ரூ. 8-0-0 மணி ஆர்டர் செய்தால் மேற்சொன்ன மூன்று ஸங்கிதப் புத்தகங்களும் வேறு எவ்விதச் செலவின்றி அனுப்பி வைக்கப்படும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதருஸ்

ஸ்ரீ

# சோமசுந்தரம்

அல்லது

# தோலிருக்கச் சுளை முழுங்கி!

## 1. கள்வன் காட்டிய கண்கட்டு வித்தை

**மா**லை ஆறு மணி. திருச்சினாப்பள்ளி ஜில்லாவி லுள்ள நரியூர் ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றது. பிர யாணிகள் இறங்குவதும், ஏறுவதுமா யிருந்தனர். மூன்ரு வது வகுப்பு வண்டிகள் ஒன்றில் வந்திறங்கிய ஒரு யௌ வனப் புருஷன் தன் இடது கையில் ஒரு சிறிய டிரங்க் பெட்டியைத் தொங்க விட்டுக்கொண்டு வெளியில் நடந் தான். அவனுக்கு சுமார் 25 வயதிருக்கலாம். வாசற்படி யில் நின்றுகொண்டிருந்த டிக்கெட் வசூலிப்பவரிடம் அந்த யௌவனப் புருஷன் தனது டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு வெளியில் சென்ருன்.

ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் வாடகை மோட்டார் வண்டிகளும், ஜட்கா வண்டிகளும், ஒற்றை மாட்டு வண்டி களும் தாறுமாருய் நின்றுகொண் டிருந்தன. சாட்டை வாரும் கையுமாய் நின்ற வண்டிக்காரர்கள் அந்த யௌ வனப் புருஷனைச் சூழ்ந்துகொண்டு, “இந்த வண்டிலே சாமி, ஏறுங்கோ, இந்த வண்டிலே ஏறுங்கோ சாமி” என்று ஒவ்வொருவரும் தம் தம் வண்டிப்பக்கம் அவனைப் பிடித்திழுக்க, அவன் எந்த வண்டிக்குத் தாம் போவ

தென்பதை நிச்சயிக்கமாட்டாமல் பிரமித்து நிற்க, அப்போது ஒருவன் துளரிந்து அவனுடைய கையிலிருந்த டிரங்குப் பெட்டியை வெடுக்கென்று பிடுங்கி எடுத்துக் கொண்டுபோய் சுமார் பத்து கஜ தூரத்திலிருந்த தனது வண்டிக்குள் வைத்து, "இதுலே ஏறுங்கோ சாமீ" என்றான்.

உடனே அந்த யௌவனப் புருஷன் மற்றவர்களுடைய கும்பலை விலக்கிக்கொண்டு அந்த வண்டிக்குப் போய், "பேட்டைக்குப் போகவேண்டும்; என்ன கேட்கிறாய்?" என்றான்.

வண்டிக்காரன், "அல்லாரும் குடுக்கரத்தை நீங்களும் குடுக்கப்போறீங்க. ஏறிக் குந்துங்க சாமீ, மத்தவங்க வாங்கறத்துக்கு அதியம் நம்புளுக்கு வாணும் சாமீ. அப்படியெல்லாம் நாம்ப பொய்பெரட்டு பண்ணறவன் அல்ல சாமீ, ஏறிக் குந்துங்க" என்றான்.

யௌவனப் புருஷன் உடனே ஏறி உட்கார்ந்து கொண்டான்.

வண்டிக்காரனும் ஏறி உட்கார்ந்துகொண்டு, "பேட்டைக்கு ஓராள், ஓராள்; வண்டி போகப்போவுது" என்று கூச்சலிட்டபடி வண்டியை அங்குமிங்கும் ஓட்டத் தொடங்கினான்.

வண்டியிலிருந்த யௌவனப் புருஷன், "என்னப்பா, வண்டியை நான் பேசி இருக்கும்போது, இன்னும் ஆள்களைக் கூப்பிடுகிறாயே! நீ வேறே யாரையாவது ஏற்றுவதானால் நான் இறங்கிவிடுகிறேன்" என்றான்.

வண்டிக்காரன்:—தனி வண்டியானா, எட்டணா குடுக்கணும் சாமீ; குடுக்கறீங்களா?

யௌவனப் புருஷன்:—பேட்டை இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது, ஆளுக்கு முக்கால் அணா கொடுப்பது வழக்கம். நாலுபேருக்கு மொத்தம் மூன்றணா

தான் ஆகிறது. அப்படி இருக்க எட்டணு கேட்கிருயே. நீ பேசுவது பெரிய அக்கிரமமா யிருக்கிறதே!

வண்டிக்காரன் :—அப்படியாணு, தனி வண்டிலேபோணு, என்னுதான் குடுப்பே சாமி.

யௌவனப் புருஷன் :—மூன்றணு கொடுப்பேன்; இஷ்டமானுல் ஒட்டு; இஷ்டமில்லையானுல், நிறுத்து; நான் இறங்கிவிடுகிறேன்.

வண்டிக்காரன் :—எப்ப சாமீ மூணணு! அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சு சாமீ; இப்ப தனிவண்டிக்கு எட்டணுதான் சாமீ; ஒங்கிளுக்காவ ஏளணு வாங்கிக்கறேன். ஈஷ்டமானுச் சொல்லுங்க, உட்றேன்.

யௌவனப் புருஷன் :—அதெல்லாம் ஆகாத காரியம். நாலணுவுக்கு மேல் ஒரு பைசாகூடக் கொடுக்க மாட்டேன். சம்மதமில்லாவிட்டால் நிறுத்து.

வண்டிக்காரன் :— என்ன எசமானே; இப்பிடிக் கோவிச்சுக்கிட்டா, ஏளெங்க என்னு பன்றது. போணுப் போவுது ஆறணுக் குடுத்துடு சாமீ. வேறே ஆளெ ஏத்தப் தில்லெ. தனியாவே கொண்டுபோறேன்.

யௌவனப் புருஷன்:—அது முடியாதப்பா; நாலணுவே அதிகம்; நான் இறங்கிவிடுகிறேன்—என்று கூறியபடி பின் புறத்திலிருந்த கம்பியைக் கழற்ற, அவர் இறங்காமல் தடுக்கும்பொருட்டு வண்டிக்காரன் குதிரையைக் காலால் இடித்து ஓட்டத் தொடங்க, அதுவரையில் ரஸ்தாவின் இடது பக்கமாகவே சென்ற குதிரை வண்டி ரஸ்தாவின் குறுக்காக நடுமத்தியிலும், வலது பக்கத்திலுமாய்ப்போகத் தொடங்கியது. வண்டிக்காரனுடைய பார்வை பின்புறத்திலேயே சென்றது.

அவன் மறுபடி தகராறு செய்யத் தொடங்கி, "போணுப் போவுது அஞ்சணுவாக் குடுத்துடு சாமீ! இம்பிட்டுத் தூரம் ஓட்டியாந்துட்டு ஆராச்சும் சும்மா வுடுவாங்களா! நானு பேட்டேலேகொண்டெ வுட்டப்பறம்

அஞ்சணுவுக்கு மேலே நீங்க என்னு குடுத்தாலும் குடுங்க"
என்ருன்.

அவ்வாறு வண்டிக்காரன் பிரயாணியுடன் வாக்கு வாதம் செய்துகொண்டே, ரஸ்தாவின் இடது பக்கத்தை விட்டுத் தவருன பக்கங்களில் போய்க்கொண்டே இருக்க, அடுத்த நிமிஷம் படாரென்று இடியோசைபோல் ஒரு ஓசை யுண்டாயிற்று, எதிர்த் திசையிலிருந்து வந்த ஒரு மோட்டார் வண்டி குதிரை வண்டியின் ஒரு சக்கரத்தில் விசையாக மோதிய தாகையால், சக்கரம் தூளாய்நொறுங்கிப் போய்விட்டது. மோட்டார் வண்டி கனமான பெரிய வண்டியாகையாலும், ரயிலிலிருந்து இறங்கிய சிலரை ஏற்றிக்கொண்டு வரவேண்டிய அவசரத்தைக்கருதி அதன் சொந்தக்காரர் மோட்டார் வண்டியை அமிதமான விசையோடு ஓட்டிக்கொண்டு வந்தமையாலும், அது மோதிய விசையில் குதிரை வண்டி சுமார் பத்தடி தூரத்திற்கப்பால் போய் விழுந்தது. ஜட்கா வண்டிக்காரன் விசையாகத் தூக்கி எறியப்படவே, அவன் சமீபத்திலிருந்த ஓர் ஆலமரத்தின் அடிக்கட்டையில் போய்விழ, அவனுடைய முகம் கட்டையில் தாக்கியது. அதனுல் அவனுடைய மூக்கு, உதடுகள் முதலியவை கிழிந்துபோயின வாகையால், சரேலென்று இரத்தம் பீரிட்டடித்தது. அவன் ஸ்மரணையற்று பிணம்போல் வீழ்ந்து விட்டான்.

ஒரு பக்கத்து ஏர்க்காலின்மேல் குதிரை விழ, அதன் மேல் இன்னெரு பக்கத்து ஏர்க்கால், உடைந்துபோன சக்கரம் முதலிய ஏறி அழுத்திக்கொள்ளவே, அது தன்னை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு கால்களை உதைத்துக் கொண்டு தத்தளிக்கத் தொடங்கியது.

மோட்டார் வண்டி மோதப்போன சமயத்தில், அதை உணர்ந்து திடீரென்று கீழே இறங்க முயன்ற பிரயாணியின் கால்கள் வண்டிக் கூண்டிற்கும் இன்னெரு சக்கரத்திற்கும் அடியில் மாட்டிக்கொண்டன. அவன் தரையில்

கிடந்து, "ஐயோ, அப்பா" என்று அலறத் தொடங்கி ஞன்.

அதே விநாடியில் மோட்டார் வண்டியும் நின்று விட்டது. அதை ஓட்டிக்கொண்டு வந்த மனிதரைத் தவிர வேறு எவரும் வண்டியில் இல்லை. அதை ஓட்டிக்கொண்டு வந்த மனிதர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் என்பது அவருடைய உடைகளால் தெரிந்தது. வெளியூரிலிருந்து வருவதாக எழுதி இருந்த அவருடைய மனைவி முதலியோரை அழைத்து வரும்பொருட்டு அவர் ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்த நிலைமையில், அவர் எதிர்பாராதபடி குதிரைவண்டி ரஸ்தாவின் வலது பக்கத்தில் அதிகமாய் திடீரென்று வந்துவிடவே, அவர் பிரேக்கைப் போட்டு வண்டியை நிறுத்துமுன், அது ஒரு சக்கரத்தில் மோதிவிட்டதாகையால், அந்த அபாயம் நேர்ந்துவிட்டது.

அவர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கீழே குதித்து, அப்போது ரஸ்தாவில் சென்ற பிரயாணிகளின் உதவியைக்கொண்டு, கீழே சாய்ந்து கிடந்த கூண்டைத் தூக்கி, அதன் கீழ் அகப்பட்டுக்கொண்டு கதறிய யௌவனப் புருஷனை விடுவித்து அவனைத் தூக்கி ஒரு பக்கத்தில் உட்கார வைத்துவிட்டு, உடனே குதிரையண்டை ஓடி, கத்தியால் வார் முதலியவற்றை அறுத்து, குதிரையை விடுவித்துக் கிளப்பி நிறுத்திஞர்.

அதற்குள் அந்த இடத்தில் பல வண்டிகள் வந்து சேர்ந்துபோயின. போலீஸ் ஜெவான்கள் இருவரும், சுமார் இருபது ஜனங்களும் வந்து கூடிவிட்டனர். எல்லோரும் சென்று ஜட்கா வண்டிக்காரனைப் பார்க்க, அவன் கிடந்த இடத்தில் தரையில் இரத்தம் குளம்போலத் தேங்கி இருந்தது. முகம் உருப்படி தெரியாதபடி நசுங்கிப்போயிருந்தது. அவனை அப்போது ரயில் ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்த ஒரு காலி ஜட்கா வண்டியில், தூக்கிப்

படுக்க வைக்கும்படி செய்து, அந்த ஊர் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு ஜெவானையும் அனுப்ப, ஜெவான் அந்த வண்டியோடு ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

அதற்குப் பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் யௌவனப் புருஷனைப் பார்த்து, "யாரையா நீர்? எங்கே போக வேண்டும்? நான் என்னுடைய மோட்டார் வண்டியில் உம்மைக் கொண்டுபோய் விட்டுவிட்டுப் பிறகு நான் போக வேண்டிய இடத்திற்குப் போகிறேன்" என்று நிரம்பவும் பொறுப்பாகக் கூறினர்.

யௌவனப் புருஷன் :—என் சொந்த ஊர் பெருச்சாளிப் பட்டி; இங்கே பேட்டையில் என் அண்ணன் இருக்கிறர். அவருடைய வீட்டிற்குப் போகிறேன்.

இன்ஸ்பெக்டர் :—உம்முடைய பெயர் என்ன?

யௌவனப்புருஷன் :—பாலசுந்தரம்.

இன்ஸ்பெக்டர் :—உம்முடைய அண்ணன் இந்த ஊரில் என்ன வேலையாயிருக்கிறர்?

பாலசுந்தரம் :—அவர் ஏதோ தரகு வியாபாரம் செய்கிறதாகச் சொன்னர்.

இன்ஸ்பெக்டர் :—ஏதோ தரகு வியாபாரம் என்றல் நிச்சயமாய் இன்னதென்பது தெரியாதுபோ லிருக்கிறது?

பாலசுந்தரம் :—தெரியாது. நான் என் அண்ணனைப் பார்த்து பத்து வருஷகால மாகிறது.

இன்ஸ்பெக்டர் :—அண்ணன் என்றல், ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளா?

பாலசுந்தரம் :—அவர் என் சொந்த அண்ணன் இல்லை; என் பெரிய தகப்பனருடைய மகன்.

இன்ஸ்பெக்டர் :—அவருடைய பெயர் என்ன?

பாலசுந்தரம் :—சோமசுந்தரம்—என்றன்.

அந்தப் பெயரைக் கேட்டவுடன் இன்ஸ்பெக்டருடைய முகம் விகார மடைந்தது. அவர் பாலசுந்தரத்தை

சம்சயப் பார்வையாகத் தலைமுதல் கால் வரையில் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஓகோ! சோமசுந்தரத்தினிடம் போக வேண்டுமா! சரி; பேட்டைக்குப் போகும் எந்த வண்டியிலாவது இடம் காலியாயிருந்தால், அதில் ஏறிக் கொண்டு போம். நான் அவசரமாய் ரயில் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். நான் இதைப்பற்றி விசாரணை செய்ய, சேவகனை அனுப்புவேன். அப்போது நீர் வந்து வாக்கு மூலம் கொடுக்கவேண்டும்" என்று கூறியபடி, வண்டியை விட முயன்றார்.

அதைக் கேட்டவுடன் பாலசுந்தரத்தின் முகம் வாட்டமடைந்தது; முதலில் தன்னை மோட்டார் வண்டியில் வைத்துக்கொண்டுபோய் தான் போகவேண்டிய இடத்தில் விடுவதாகச் சொன்ன இன்ஸ்பெக்டர் தனது அண்ணனுடைய பெயரைக் கேட்டவுடன் ஏன் அந்த உத்தேசத்தை மாற்றிக்கொண்டார் என்ற எண்ணத்தைக் கொண்டவனாய்த் திகைத்து நின்றான். ஆனால் அதைப்பற்றி அவரிடம் கேட்பதும் யுக்தமாகப் படவில்லையாதலால், அவன் தனது பார்வையை ரஸ்தாவின் இரண்டு திசைகளிலும் திருப்பி, காலி வண்டி ஏதேனும் வருகிறதாவென்று பார்த்தான்.

அப்போது ரயில் ஸ்டேஷனிலிருந்து ஒரு மோட்டார் வண்டி வந்தது. முன்னாலிருந்த சாரதியைத் தவிர உள் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். ஒரு குதிரைவண்டி நொறுங்கி விழுந்து கிடந்ததையும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு மோட்டார் வண்டியில் இருந்ததையும் காணவே, உள்ளே இருந்தவர் வண்டியை நிறுத்தும்படி சாரதிக்கு உத்தரவுகொடுக்க, வண்டி உடனே நிறுத்தப்பட்டது. வண்டிக்குள்ளிருந்த மனிதர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "என்ன ஸார், ஏதாவது ஆக்ஸிடெண்டா" என்றார்.

இன்ஸ்பெக்டர் அவரைப் பார்த்து முகத் தெளிவும், மகிழ்ச்சியும் அடைந்தவராய், "ஓகோ! மீனாட்சிசுந்த

ரம் பிள்ளையா! வரவேண்டும். ரயிலில் இறங்கி வருகிறீர்களா?'' என்றார்.

மீனாட்சிசுந்தரம் :—ஆம்.

இன்ஸ்பெக்டர் :—போலீஸ் ஸ்டேஷனில்தானே தங்கப் போகிறீர்கள்?

மீனாட்சிசுந்தரம் :—ஆம்.

இன்ஸ்பெக்டர் :—சரி; வாருங்கள் போவோம்; நானும் வருகிறேன். இந்த அபாயத்தைப்பற்றிய வரலாற்றை அங்கே போனவுடன் சொல்லுகிறேன். (பாலசுந்திரத்தின் பக்கம் திரும்பி) நீர் உம்முடைய பெட்டியை எடுத்துக்கொண்டு போகலாம்—என்றார்.

அதுவரையில் காலி வண்டி எதுவும் வரவில்லையாதலால், பாலசுந்தரம் தனது பெட்டியை எடுத்துக்கொண்டு தட்டித் தடுமாறி பேட்டையை நோக்கி மெல்ல நடந்து சென்றான்.

மீனாட்சிசுந்தரம் :—(இன்ஸ்பெக்டரை நோக்கி) யார் இந்த ஆசாமீ?

இன்ஸ்பெக்டர் :—இந்த ஊரில் சோமசுந்தரம் என்னும் பெயருடைய ஒரு காலாடி இருக்கிறான். அவனுடைய சிறிய தகப்பன் மகனும் இவன். அவனுடைய ஜாகைக்கு இவன் போகிறானும். இவன் இந்த ஜட்கா வண்டியில் வந்தான். வண்டிக்காரன் பின்புறம் பார்த்துக்கொண்டே வண்டியை வலது பக்கம் கொண்டு வந்து என்னுடைய மோட்டாரில் முட்டவிட்டான். அதனால், இந்த மாதிரி அபாயம் நேர்ந்துவிட்டது. வண்டிக்காரனுக்கு பலமான அடி. அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டேன். இந்த ஆசாமியை என் மோட்டாரில் வைத்துக் கொண்டு போய் ஊரில் விடலாமென்று பார்த்தேன். இவன் இன்னானுடன் சம்பந்தப்பட்டவன் என்பதைக் கேட்டவுடன், இவனை வேறு வண்டி வைத்துக்கொண்டு போகச் சொல்லி விட்டேன்.

மீனுட்சிசுந்தரம் :—காலாடி என்ருல் எனக்கு விஷயம் விளங்கவில்லை.

இன்ஸ்பெக்டர் :—அவன் பல திருட்டுகளில் சம்பந்தப் பட்டதாக சந்தேகிக்கக் காரணம் இருக்கிறது. சில மாத காலமாய், அவனைக் கண்காணித்து வருகிருேம்.

மீனுட்சிசுந்தரம் :—நீங்கள் எதற்காக ஸ்டேஷனுக்கு வந்தீர்கள் ?

இன்ஸ்பெக்டர் :—எங்கள் மனிதர்கள் வருவதாக எழுதி இருந்தார்கள். அதற்காக முன்னுல் ஒரு ஜெவானை அனுப்பிவிட்டு, பின்னுல் நான் வந்தேன். அவர்கள் வரவில்லையாம். ஜெவான் மாத்திரம் திரும்பி வந்தான். ஆகையால் நான் ஊருக்குத் திரும்ப வேண்டியவன் தான்.

மீனுட்சிசுந்தரம் :—நான் அனுப்பிய தந்தி வந்ததல்லவா?

இன்ஸ்பெக்டர் :—தந்தியும் வந்தது. நீங்கள் குறித்த அடையாளமுள்ள கே. டி யும் இந்த ஊருக்கு வந்துவிட்ட தாகத் தகவல் வந்தது. அவனையும் கண்காணிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அவன் உண்மையில் பயங் கரமான செய்கைகளைச் செய்யக் கூடியவனே ?

மீனுட்சிசுந்தரம் :—கேடி நடேசன் என்ருல் வேதாரணியம் பக்கத்தில் எவருக்கும் கதி கலக்கந்தான். அவன் ஏதோ துன்மார்க்கமான எண்ணத்தோடு, இந்த நரியூர்ப்பட்ட ணத்திற்கு வரப்போவதாய் எங்களுக்குச் செய்தி எட்டிய வுடன், உங்களுக்குத் தந்தி யனுப்பினேன்—என்ருர்.

அவ்வாறு இருவரும் சம்பாஷித்தபடி மோட்டார் வண்டிகளை முன்னும் பின்னுமாய் மெதுவாக விடுத்துக் கொண்டு பேட்டையை நோக்கிச் சென்றனர்.

அது நிற்க, நரியூரை நோக்கிச் சென்ற பாலசுந்தரம் மெல்ல மெல்ல நடந்து ஒரு மணி காலத்தில் ஊரை அடைந்தான். ஊரின் ஆரம்பத்திலேயே, சில ஆபீஸ் களும், அந்த ஊர்ப் பெரிய கடைத் தெருவும் இருந்தன-

அந்த இடத்தை அடைந்த பாலசுந்தரம் எதிர்ப்படுவோரிடம் விசாரித்து, அம்மன் கோவில் சந்தை அடைந்து, 15-வது நம்பர் வீட்டைக் கண்டுபிடித்தான்.

அந்த சந்து மிகக் குறுகலான சந்து; வீடு சாதாரணமான ஒரு சிறிய ஓட்டு வீடு. அதன் கதவு மூடப்பட்டிருந்தது. பாலசுந்தரம் கதவண்டை போய் நின்று அதை இரண்டு மூன்று தடவைகள் தட்டினன்.

சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. சுமார் முப்பது வயது மதிக்கக்கூடிய ஒரு மனிதன் கதவிற்குப் பக்கத்தில் நின்று வியப்போடு பார்த்து, "யாரப்பா நீ?" என்ருன்.

பாலசுந்தரம்:—உள்ளே சோமசுந்தரம் இருக்கிருரா?

மற்றவன்:—நீ யாரப்பா?

பாலசுந்தரம்:—நான் அவருடைய தம்பி.

மற்றவன்:—ஓ, அவருடைய தம்பியா? சரி; நான் போய் அவரை அனுப்புகிறேன். நீ இப்படியே இரு—என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டான்.

அதற்குப் பிறகு ஐந்து நிமிஷ காலம் கழிந்தது. அப்போது உள்ளே இருந்து ஒரு யௌவனப் புருஷன் வெளியில் வந்து, பாலசுந்தரத்தை உற்றுப் பார்த்து, "ஓகோ நீயா! யாரோ என்றல்லவா நினைத்துவிட்டேன். ஏது திடீரென்று வந்து விட்டாய்! வரப்போவதாக முன்னல் ஒரு கடிதம் அனுப்பி யிருக்கலாமே!

பாலசுந்தரம்:—நான் இரண்டு தினங்களுக்குமுன் ஒரு கடிதம் அனுப்பினேனே!

சோமசுந்தரம்:—கடிதம் அனுப்பினயா! எனக்கு இது வரையில் கடிதமே வரவில்லையே!

பாலசுந்தரம்:—நான் நிச்சயமாய்க் கடிதம் அனுப்பினேன். அது தபாலில் தவறிப் போய்விட்டதோ என்னவோ!

சோமசுந்தரம் :—அப்படித்தான் இருக்கவேண்டும். வீட்டில் யாரை வைத்துவிட்டு வந்திருக்கிருய்?

பாலசுந்தரம் :—வீட்டை விற்றுவிட்டேன்.

சோமசுந்தரம் :—(வியப்போடு) ஏன் விற்றுவிட்டாய்?

பாலசுந்நரம் :—அதன்மேல் அப்பா காலத்தில் ஏற்பட்ட கடனுக்கு இதுவரையில் வட்டி கொடுத்துக் கொடுத்து என் தாவு தீர்ந்து போய்விட்டது. என்னல் வட்டி கொடுக்க முடியவில்லை. அதனுல் அதை விற்றுவிட்டேன்.

சோமசுந்தரம் :—வீட்டை விற்றுவிட்டு எங்கே இருக்கப் போகிருய்?

பாலசுந்தரம் :—இந்த ஊரில் ஏதாவது உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ளலாமென்று இங்கே வந்தேன்.

சோமசுந்தரம் :—இந்த ஊரில் உனக்கு என்ன உத்தியோகம் கிடைக்கப் போகிறது? உத்தியோகம் என்ருல், உடனே கிடைத்துவிடுமா! இங்கே என் நிலைமையும் மிக சங்கடமானதா யிருக்கிறது. இங்கே எனக்கே தர்மத்திற்கு இடங் கொடுத்திருக்கிருர்கள்.

பாலசுந்தரம் :—ஏதோ வந்துவிட்டேன்; நான் இந்த ஊருக்குப் புதியவன். நீ இருக்குமிடத்தில் எனக்கும் கொஞ்சம் இடம் கொடு. நாலைந்து தினங்கள் இருந்து, ஏதாவது உத்தியோகத்திற்கு முயற்சி செய்து பார்க்கிறேன். அதற்குள் வேறு எங்கேயாவது நான் இடம் அமர்த்திக் கொண்டு போய்விடுகிறேன்.

சோமசுந்தரம் :—(சிறிது யோசனை செய்தபிறகு) சரி; அப்படியே செய்; நான் இந்த வீட்டில் ஒரே ஓர் அறை தான் வைத்துக்கொண் டிருக்கிறேன். அது மிக நெருக்கமானது. இப்போது கதவைத் திறந்தவர் மற்ற பாகம் முழுதையும் வைத்துக்கொண் டிருக்கிருர். அவரிடம் சொல்லிப் பார்க்கிறேன். வா; உள்ளே போவோம்— என்ருர்.

உடனே இருவரும் உள்ளே சென்று ஓர் அறையை அடைந்தனர். பாலசுந்தரம் தம் பெட்டியை அங்கு ஓர் மூலையில் வைத்தான். அதற்குமேல் அவர்கள் ஊர் வியவகாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க, சுமார் எட்டு மணிக்கு ஓட்டலிலிருந்து சோமசுந்தரத்திற்கு சாப்பாடு வந்தது. அதை இருவரும் உண்டனர்.

அவ்வாறு அவர்களுடைய சாப்பாடு முடிந்த பின் சோமசுந்தரம் மற்றவனைப் பார்த்து, ''தம்பீ, நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டுமே'' என்ருன்.

பாலசுந்தரம் :—என்ன உதவி? சொன்னுல், செய்கிறேன்.

சோமசுந்தரம் :—இதே சந்தோடு மேற்கே போனுல் இது ஒரு பெரிய தெருவில் போய்ச் சேருகிறது. சந்து முனையில் ஒருவர் வந்து நிற்பார். நீ போனவுடன் அவர் 'சுந்தரம்' என்பார். நீ உடனே "இதோ" என்ற ஒரே ஒரு வார்த்தை சொல்வதே போதுமானது. அவர் கையை நீட்டுவார். நான் உன்னிடம் ஒரு சிறிய பெட்டியைத் தருகிறேன். அதை நீ உடனே அவரிடம் கொடுத்துவிட்டு, வேறு பேச்சு பேசாமல் வந்துவிடு.

பாலசுந்தரம் :—அவர் யார்?

சோமசுந்தரம் :—(தணிவான குரலில்) அது ஒரு பெரிய பாரத கதை. இந்த வீட்டில் இருக்கிருரே, இவருக்கு ஒரு தம்பி இருக்கிருர். இவருக்கும் அவருக்கும் பகை. என்ன பகை என்ருல், ஸ்திரீ விஷயமான பகை. இதற்குமுன் அண்ணன் தம்பி ஆகிய இருவரும் இந்த வீட்டில் ஒன்ருயிருந்தார்கள். அண்ணனுடைய சம்சாரமும் இருந்தாள். அந்த அம்மாளுக்கும் தம்பிக்கும் ஏதோ அந்தரங்கமான சிநேகம் ஏற்பட்டுப் போனதாக அண்ணனுக்கு ஒரு சந்தேகம் உண்டாய்விட்டது. அதனுல் அண்ணன் தம்முடைய சம்சாரத்தை அவளுடைய தாயார் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்; தம்பியையும் வீட்டிற்கு வரக்கூடா

தென்று உத்தரவிட்டார். நான் பழகிய வரையில் தம்பி மிகவும் நல்ல மனிதர். அவர் சாப்பாட்டுக்குப் பணம் இல்லாமல் அவஸ்தைப்படுகிறார். அதற்காக அவர் அண்ணிக்கு கடிதம் எழுதினார்போல் இருக்கிறது. அந்த அம்மாள் ஓராளிடம் இந்தப் பெட்டியைக் கொடுத்து இதை என்னிடம் கொடுக்கச் சொன்னார்களாம்; நான் இதைத் தம்பியிடம் சேர்த்துவிட வேண்டுமென்று வாய்மூலம் அந்த ஆளிடம் சொல்லி அனுப்பினார்கள். இதில் ஏதோ நகையோ, பணமோ இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு அவர் தமது செலவுகளைச் செய்து கொள்ளட்டும் என்பது அந்த அம்மாளுடைய எண்ணம். இதில் நமக்கென்ன பிரயாசை. இந்தக் கையால் வாங்கி அந்தக் கையால கொடுத்துவிடப் போகிறோம். அவ்வளவே. நானே போவேன். எனக்கு தலை நோவா யிருக்கிறது, அதனால், நான் வெளியில் போக முடியவில்லை. அதற்காகத்தான் உன் உதவியை நாடுகிறேன்.

பாலசுந்தரம் :—இந்த சங்கதி அந்த அம்மாளுடைய புருஷருக்குத் தெரிந்தால், உனக்கும் அவருக்கும் மனஸ்தாபம் உண்டாய்விடாதா? நீ ஏன் இதில் தலையிடுகிறாய்?

சோமசுந்தரம் :—நீ சொல்வது உண்மைதான். ஏதோ நம்மிடம் வந்துவிட்ட பொருளை நாம் எடுத்துக்கொள்வது ஒழுங்கல்ல. இதை நாம் மறுபடி அந்த அம்மாள் இருக்குமிடத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதைவிட அந்த மனிதனிடம் கொடுத்துவிடுவது சுலபமானது. இதை மாத்திரம் நாம் ரகசியமாய்ச் செய்துவிடுவோம். இனி நாம் தலையிட வேண்டாம். நீயும் இதில் கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும்.

பாலசுந்தரம் ;—எப்படி?

சோமசுந்தரம் :—இந்த மாதிரி நீ கொண்டுபோய்க் கொடுத்த சங்கதியை எவரிடத்திலும் வெளியிடக் கூடாது. நீ யாரென்று யாராவது உன்னிடம் கேட்டால்கூட நீ உன்

பெயரையும் சொல்ல வேண்டாம்; என் பெயரையோ எனக்கு உனக்கும் சம்பந்த மிருக்கிற தென்பதையோ சொல்லவே கூடாது. நீ மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்.

பாலசுந்தரம்:—உன் விருப்பம்போலவே நான் நடந்து கொள்ளத் தடை இல்லை—என்றான்.

சோமசுந்தரம் உடனே அவனிடம் ஒரு பெட்டியைக் கொடுத்தான். பாலசுந்தரம் அதை வாங்கித் தனது மேல் துணியில் மறைத்துக்கொண்டு வெளிப்பட்டு சந்தோடு நடந்து சென்று, அது பெரிய தெருவில் கூடுமிடத்தை அடைந்து நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தான். அங்கு சுமார் நாற்பது வயது மதிக்கத் தக்க ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். அவர் தானு அல்லவா என்பதை நிச்சயிக்க மாட்டாமல், பாலசுந்தரம் தயங்கி நிற்க, சுமார் ஐந்து நிமிஷ காலம் கழிந்தது. பாலசுந்தரம் அந்த மனிதரை நோக்கி, "நீங்கள் யாருக்காகக் காத்திருக்கிறீர்கள்?" என்றான்.

அந்த மனிதர், "நான் சுந்தரத்திற்காகக் காத்திருக்கிறேன்" என்றார்.

பாலசுந்தரம், "அப்படியானால், இதோ" என்று கூறி தனது மேல் துணியில் மறைத்து வைத்துக்கொண்டிருந்த பெட்டியை அவரிடம் நீட்ட, அவர் உடனே அதைப் பெற்றுக்கொண்டார்.

அந்த சமயத்தில், "நில்லுங்கள் அப்படியே" என்று ஒருவர் அதட்டிக் கூறிய குரலோசை கேட்டது. உடனே நமது போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்குப் பக்கத்தில் வந்து குபீரென்று பாய்ந்து பெட்டியைப் பிடுங்கிக்கொண்டார். பெட்டியைப் பறிகொடுத்த மனிதன் உடனே ஓடத் தொடங்கினான். இன்ஸ்பெக்டர் சிறிது தூரத்தில் ஒளித்து வைத்திருந்த இரண்டு ஜெவான்களைப் பார்த்து, "பிடி,

பிடி, விடாதே, திருடன் ஓடுகிருன்" என்று கூச்சலிட்டுக் கூற, ஓடிய மனிதனைத் துரத்திக்கொண்டு ஜெவான்களும் பின் துடர்ந்து ஓடத் தொடங்கினர். அதற்குள் அவ்விடத்தில் ஜனங்கள் வந்து கூடிவிட்டனர். பாலசுந்தரம் திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டான்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனிடம் வந்து அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, "ஓகோ! பாலசுந்தரமா! அண்ணனுக்கு உதவி செய்வதற்காகத்தான் ஊரிலிருந்து வந்தாயா? வந்தபோதே வழியில் அபசகுனம் ஏற்பட்டதே. அதிலிருந்தாவது நீ எச்சரிக்கை யடைய வேண்டாமா?" என்ருர்.

பாலசுந்தரம் :—யார் பாலசுந்தரமா! என் பெயர் பாலசுந்தரம் அல்லவே! எனக்கு அண்ணனும் இல்லையே!

இன்ஸ்பெக்டர் :—(பெட்டியைத் திறந்து பார்த்து) ஓகோ! இதிலே திருட்டு நகைகள் இருக்கின்றன.

பாலசுந்தரம் :—நான் இவைகளை யார் வீட்டில் திருடினேன்?

இன்ஸ்பெக்டர் :—இந்த ஊரில் சில தினங்களுக்குமுன் ஒரு பெரிய மனிதர் வீட்டில் திருட்டு நடந்தது. அங்கே களவாடப்பட்ட நகைகளில் சில இதில் இருக்கின்றன. நிஜத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால், உனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும். இதை உன்னிடம் கொடுத்தவன் சோமசுந்தரம்தானே?

பாலசுந்தரம் :—(சிறிது நேரம் கலங்கி நின்று) எனக்கு ஒரு சங்கதியும் தெரியாது. சோமசுந்தரத்தையும் எனக்குத் தெரியாது, என் பெயரும் பாலசுந்தரம் அல்ல.

இன்ஸ்பெக்டர் :—அப்படியாளுல், இன்று சாயங்காலம் நீ ரஸ்தாவில் சொன்னதெல்லாம் பொய்யா? நீ வண்டியின்கீழ் அகப்பட்டுக்கொண்டு தவித்தாயே! அதுகூட நிஜமா பொய்யா?

பாலசுந்தரம் :—நான் வண்டி. அபாயத்தில், வண்டிக்குக் கீழ் அகப்பட்டுக் கொண்டது நிஜமான விஷயந்தான். அப்போது எனக்கு ஏற்பட்டிருந்த கலக்கத்தில் நான் என்ன சொன்னேனென்பது எனக்கு இப்போது நினைவிற்கு வரவில்லை.

இன்ஸ்பெக்டர் :—சரி, நீ உண்மையைச் சொல்லவேண்டாம். நட ஸ்டேஷனுக்கு—என்று கூறி அதட்ட, பாலசுந்தரம் அவருக்கு முன்னால் நடக்கத் தொடங்கினான்.

இவ்வாறு பாலசுந்தரத்தை இன்ஸ்பெக்டர் அழைத்துக்கொண்டு போன காலத்தில், தாம் சோமசுந்தரத்தையும் கைதி செய்துகொண்டு, அவனுடைய அறையையும் சோதனை போட்டுப் பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்ற எண்ணம் உண்டானதாகையால், அவர் பாலசுந்தரத்தை அம்மன் கோவில் சந்தின் வழியாக அழைத்துக் கொண்டு சென்று, 15-வது நம்பர் வீட்டை யடைந்தார்.

அப்போது அந்த வீட்டின் முன் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. சோமசுந்தரம் நடையில் நின்றுகொண்டிருந்தான். திடீரென்று போலீஸ் இன்ஸ்பெக்டரும், பாலசுந்தரமும் வந்ததைக் காணவே, சோமசுந்தரம் உடனே விஷயத்தை அநுமானித்துக் கொண்டானானாலும், எதையும் அறியாதவன்போல் முற்றிலும் வியப்பாக மாறி முறைத்து முறைத்து அவர்களைப் பார்த்து, “ ஏன் ஸார், யாரைப் பார்க்கிறீர்கள் !” என்றான்.

இன்ஸ்பெக்டர் ;—இந்த மனிதர் இன்று சாயங்காலம் இங்கே எத்தனை மணிக்கு வந்தார் ?

சோமசுந்தரம் :—(பாலசுந்தரத்தை அப்போதே தனது ஆயுட்காலத்தில் முதன் முதல் பார்க்கிறவன்போல் நடித்து) யாரைப் பற்றிக் கேட்கிறீர்கள் ? இந்த மனிதரைப் பற்றியா ?

இன்ஸ்பெக்டர் :—அடாடா ! என்ன சாமர்த்தியம். இரண்டு பேரும் இரண்டு ரத்னங்களாய்த்தானிருக்கிறீர்

கள். ஏனய்யா, இந்த மனிதர் யாரென்பது உமக்குத் தெரியாது? இவர் உம்முடைய சிறிய தகப்பனுருடைய மகன் பாலசுந்தரம் என்பது உமக்குத் தெரியாதோ?

சோமசுந்தரம் :—(முற்றிலும் வியப்பும் திகைப்பும் அடைந்தவன்போல் நடித்து) யார் யார்! என் சிறிய தகப்பனுர் பிள்ளையா? இந்த மனிதரா? அந்த மாதிரி சொன்னுரா இவர்? இந்த மனிதரை நான் இப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன். இவர் இன்னுர் என்பதே எனக்குத் தெரியவில்லை. நான் சொல்வதை நீங்கள் நிச்சயமாய் நம்பலாம்.

இன்ஸ்பெக்டர் :—ஓ அவசியம் நம்புகிறேன். இவர் உம்முடைய சிறிய தகப்பனுர் மகன் அல்லவென்றுல், அவர் இப்போது எங்கே இருக்கிருர்?

சோமசுந்தரம் :—எனக்கு சிறிய தகப்பனுரும், அவருக்கு ஒரு பிள்ளையும் இருக்கிருர்கள் என்று நான் உங்களிடம் எப்போது சொன்னேன்?

இன்ஸ்பெகடர் :—நீர் சொல்லத்தான் எனக்கு எந்த விஷயமும் தெரிய வேண்டுமா? உம்முடைய தம்பி சொல்லி யிருக்கக் கூடாதா?

சோமசுந்தரம் :—எனக்கு, ஒரு சிறிய தகப்பனுர் எப்போதோ இருந்து இறந்துபோய்விட்டதாக நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அவரை பார்த்ததாக எனக்கே நினைவுண்டாகவில்லை. ஆனுல் எனக்குத் தெரிந்தவரையில் அவருக்கு மகனே இல்லை.

இன்ஸ்பெக்டர் :—உம்முடைய சிறிய தகப்பனுர் எந்த ஊரில் இருந்தார்?

சோமசுந்தரம் :—அவருக்கு நிலைப்பான இடம் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர் சாமியாராக மாறி ஊரூராய் அலைந்து கொண்டிருந்தாராம்.

இன்ஸ்பெக்டர் :—கடைசியாக அவர் எந்த ஊரில் இறந்துபோனுர்?

சோமசுந்தரம் :—அவர் எங்கே போனல் என்ன? எங்கே மாண்டாலென்ன? அதைப்பற்றி யெல்லாம் நீங்கள் இப்போது கேட்க வேண்டிய காரண மென்ன?

இன்ஸ்பெக்டர் :—நான் கேட்பதற்கு நீர் ஜெவாப்பு சொல்ல வேண்டும். நீர் கேட்பதற்கு நான் ஜெவாப்பு சொல்ல முடியாது.

சோமசுந்தரம் :—இது கோர்ட்டுமல்ல; உங்களுடைய ஸ்டேஷனுமல்ல. அந்த இடங்களா யிருந்தால், நீங்கள் கேட்பதற்கு மற்றவர் ஜெவாப்பு சொல்லவேண்டும். இது என்னுடைய வீடு. இங்கே வந்து எதைப்பற்றியாவது கேட்கிறவர்கள் எங்களுடைய கேள்விகளுக்கு சரியான ஜெவாப்பு சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் தங்களுடைய கேள்விகளுக்கு உத்தரத்தை எதிர் பார்க்க முடியாது.

இன்ஸ்பெக்டர் :—ஓகோ! நீர் அவ்வளவு அபார சாமர்த்தியம் வாய்ந்த புலியா? உம்மை நான் கைதி செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போக வந்திருக்கிறேன். வாரும் இப்படி வெளியில்.

சோமசுந்தரம் :—யாரைக் கைதி செய்ய? என்னையா? எந்தக் குற்றத்திற்காக?

இன்ஸ்பெக்டர் :—நான்கு தினங்களுக்கு முன் இரவில் வக்கீல் சுப்பிரமண்யத்தின் வீட்டில் என்ன நடந்த தென்பது தெரியுமல்லவா?

சோமசுந்தரம் :—(வியப்போடு) என்ன நடந்தது? அவர் யாருக்காவது டீ பார்ட்டி நடத்தினரா?

இன்ஸ்பெக்டர் :—அடே போதுமய்யா உம்முடைய குறும்பு! அவருடைய வீட்டில் அன்றிரவு கொள்ளை நடத்தியவர்கள் யார் யார் என்பது உமக்குத் தெரிந்த விஷயந்தானே!

சோமசுந்தரம் :—நீங்கள் பேசுவது வேடிக்கையா யிருக்கிறதே! அந்த வீட்டில் கொள்ளை அடித்தவர்கள் என்னிடம் வந்து, 'போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து, நாங்கள்

யார் யார் என்று கேட்பார். இன்னின்னர் என்று சொல்' என்று சொல்லிவிட்டுப் போயிருப்பார்கள் என்பது உங்கள் எண்ணமா? அல்லது, எனக்கு ஜோசியம் தெரியுமென்று யாராவது உங்களிடம் சொன்னர்களா? உங்கள் மனதில் இருப்பது எனக்கு சரியானபடி விளங்கவில்லையே!

இன்ஸ்பெக்டர் :—கொள்ளை நடந்த சமயத்தில் நீர்தான் அங்கே இருந்தீரே. எல்லாம் உமக்கு நேருக்கு நேர் தெரிந்த விஷயந்தானே. இதற்கு ஜோசியம் எதற்கு?

சோமசுந்தரம் :—நீங்கள் பேசுவது பெரிய அக்கிரமமாயிருக்கிறதே, திருட்டு நடந்த சமயத்தில் நான் வேறிடத்தில் இருந்ததாக நான் மறுநாள் ருஜுப்படுத்திவிட்டு வந்திருக்கிறேன். மறுபடி நீங்கள் புதிதாய் ஏதோ ஆரம்பிக்கிறீர்கள்.

இன்ஸ்பெக்டர் :—அப்படியே வைத்துக்கொள்ளுவோம். வக்கீல் சுப்பிரமணியத்தின் வீட்டில் திருடப்பட்ட சொத்துகளில் சேர்ந்த ஒரு ஜதை தங்கக் காப்புகள் இந்தப் பெட்டியில் இருக்கின்றனவே. இதை நீர்தானே இந்த பாலசுந்தரத்தினிடம் கொடுத்தீர்?

சோமசுந்தரம் :—பெட்டியில் என்ன இருக்கிறதோ என்ன இல்லையோ; பெட்டிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம். நான் இந்த மனிதரிடம் இதைக் கொடுத்ததை நீங்கள் பார்த்தீர்களா, அல்லது, அதற்கு வேறே யாராவது சாட்சிகள் இருக்கிறார்களா?—என்றார்.

அதைக் கேட்டவுடன் இன்ஸ்பெக்டர் தம்மிடமிருந்த ஊது குழலை எடுத்து இரண்டு மூன்று தடவை ஊதிவிட்டு அதை சட்டைப்பையில் வைத்துக்கொண்டார்.

உடனே சோமசுந்தரம், "ஏன் ஸார் இங்கேவந்து இப்படி அமர்க்களப் படுத்துகிறீர்கள்! அக்கம் பக்கத்திலிருக்கிறவர்கள் இந்த வீட்டாரைப்பற்றி இளப்பமாய் நினைத்துக்கொள்ள மாட்டார்களா?

இன்ஸ்பெக்டர் :—நீர் எதற்கோ ருஜு வேண்டுமென்று கேட்டீரே; அதற்காகத்தான் சில மனிதரைக் கூப்பிடு கிறேன். இதற்குள் ஆத்திரப்படுகிறீரே. ஐந்து நிமிஷ காலம் பொறும். அதுவரையில் நாம் பேசிக்கொண்டிருப் போம். உம்முடைய சிறிய தகப்பனர் எந்த ஊரில் இறந்து போனர் என்பதையாவது சொல்ல முடியுமா முடியாதா?

சோமசுந்தரம் :—அவர் காசியில் இறந்துபோனர்.

இன்ஸ்பெக்டர் :—அது உமக்கு எப்படித் தெரிந்தது?

சோமசுந்தரம் :—அவரும் இன்னொருவரும் காஷாயம் வாங்கிக்கொண்டு சாமியார்களாய் மாறி, காசிக்குப் போனர்கள். என் சிறிய தகப்பனர் காசியில் இறந்த போது மற்றவர் கூட இருந்தார்; அவர் அதைப்பற்றி எனக்குக் கடிதம் எழுதினர்.

இன்ஸ்பெக்டர் :-அந்தக் கடிதத்தை எடும்; பார்ப்போம்.

சோமசுந்தரம் :—கடிதம் இப்போதுதான் தபாலில் வந்த மாதிரி கேட்கிறீர்களே; அது வந்தது எத்தனையோ வரு ஷங்களுக்குமுன். சாவு கடிதத்தை யாராவது பத்திரப் படுத்தி வைப்பார்களா!

இன்ஸ்பெக்டர் :—சரி; நீர் வழிக்கு வருகிறவராய் இல்லை —என்று கூறி வாய்மூடுமுன் அவ்விடத்திற்கு இரண்டு ஜெவான்கள் வந்துசேர்ந்தனர். பாலசுந்தரத்தினிடம் பெட் டியை வாங்கிக்கொண்ட மனிதரை அவர்களே துரத்திக் கொண்டு ஓடினவர்கள். அந்த மனிதர் தப்பி ஓடிவிட்டா ராதலால், அவர்கள் திரும்பி வந்தபோது ஊது குழலோ சையைக் கேட்டு அங்கே வந்தனர்.

அவர்கள் மாத்திரம் வந்ததைக் கண்ட இன்ஸ்பெக் டர், ஆள் ஓடிப்போய்விட்டான் என்று தமக்குள் அநு மானித்துக்கொண்டு, அவர்களைப் பார்த்து, "ஓடினதுதான் மிகுந்ததோ?" என்ருர்.

ஒருவன், "ஆம்" என்ருன்.

அதுவரையில் அங்கு நடந்த வாக்கு வாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த பாலசுந்தரத்திற்கு உண்மை விளங்கிவிட்டது. சோமசுந்தரம் தன்னிடம் சொன்னது கட்டுக் கதை யென்றும், ஏதோ திருட்டு நகையை அவன் தன்னிடம் கொடுத் தனுப்பியிருக்க வேண்டுமென்றும், அவன் பேச்சை நம்பி தான் அபாயத்தில் மாட்டிக்கொண்ட தாகவும் நினைத்து, தனக்கு என்ன கெடுதல் நேருமோ என்று கவலையும் அச்சமும் கொண்டு நின்ருன். அந்த சமயத்தில் ஜெவான்களும் வரவே, அவனுடைய திகில் அதிகரித்தது.

அப்போது இன்ஸ்பெக்டர் இரண்டு ஜெவான்களையும் நோக்கி, "இவர்கள் இருவரையும் பிடித்துக்கொள்ளுங்கள். நான் இந்த வீட்டை சோதனை போட்டுப் பார்க்கவேண் டும்" என்ருர்.

ஜெவான்கள் இருவரையும் ஆளுக்கு ஒருவனைப் பிடித்துக்கொண்டனர். அப்போது பாலசுந்தரம் கனைத் துத் தன் தொண்டையின் கம்மலை விலக்கிக்கொண்டு, சோமசுந்தரத்தை நோக்கி, "சோமசுந்தரம், உன் பேச்சை நம்பி நான் வீண் துன்பத்தில் மாட்டிக்கொண்டேன். பேசா மல் நிஜத்தை ஒப்புக்கொள். இல்லாவிட்டால், திருட்டுக் குற்றம் வந்து சுமரும். இந்த நகைப் பெட்டியை உன்னிடம் கொடுத்தது இன்னுர் என்பதைச் சொல்லிவிடு. இனி நாம் அந்த அம்மாள் விஷயத்தை மறைக்க முடியாது" என்ருன்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் சந்தோஷ முக மலர்ச்சியோடு அவர்கள் இருவரையும் பார்த்து, "அப்படி வாருங்கள் வழிக்கு. ஏன் ஐயா, சோமசுந்தரம், இப்போது என்ன சொல்லுகிறீர்? இதில் யாரோ ஓர் அம்மாளும் வந்து சம்பந்தப்படுகிற மாதிரி இருக்கிறதே!" என்ருர்.

அதைக் கேட்ட சோமசுந்தரம் கோபப் பார்வையாக பாலசுந்தரத்தை முறைத்துப் பார்த்து, "இவன் பக்காப் பேர்வழியா யிருக்கிருனே! வக்கீல் சுப்பிரமணியத்தின்

வீட்டில் இவன்தான் திருடினுன்போல் இருக்கிறது. இவனை நீங்கள் பிடித்துக்கொண்டவுடன், பழியை என் மேல் சுமத்தப் பார்க்கிருன்" என்ருன்.

உடனே பாலசுந்தரம் தான் வந்தபின் தனக்கும் சோமசுந்தரத்திற்கும் நடந்த சம்பாஷணையின் வரலாற்றை அப்படியே இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தான்.

அதைக் கேட்ட சோமசுந்தரம் ஏளனமாக நகைத்து, "இது பெரிய அண்டப்புரட்டாயிருக்கிறது. இந்த வீட்டில் இருப்பவருக்கு மனைவியுமில்லை; தம்பியுமில்லை. நான் இவனை இதுவரையில் பார்த்ததே இல்லை. இவனேதான் திருடன். இவன் சொல்வதைக் கேட்டு, எவ்வித ஆதாரமுமில்லாமல் நீங்கள் என்னை வதைப்பதில் உபயோகமே இல்லை" என்ருன்.

இன்ஸ்பெக்டர், "எல்லாவற்றிற்கும் நான் இந்த வீட்டிற்குள் நுழைந்து பார்த்துவிடுகிறேன். இவர்கள் இங்கேயே இருக்கட்டும்" என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தார்.

நுழைந்தவர் சோமசுந்தரத்தின் அறைக்குள் புகுந்தார். அதற்குள் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் அவர் அறை முழுதையும் நன்ருக ஆராய்ந்து பார்த்தார். சந்தேகாஸ்பதமான பொருள் எதுவும் காணப்படவில்லை. அவர் அதை விட்டு அதற்கப்பால் இருந்த கூடத்தைக் கடந்து அதற்கு அடுத்தாற்போல் இருந்த அறைக்குள் நுழைய, சுமார் 40 வயது மதிக்கத் தக்க ஒருவர் பாயில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர், "யார் ஐயா படுத்திருக்கிறது?" என்று அதட்டிக் கேட்க, படுத்திருந்தவர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, "யார் நீங்கள்?" என்ருர்.

இன்ஸ்பெக்டர்:—நான் போலீஸ் இன்ஸ்பெக்டர். ஒரு காரணத்திற்காக நான் இந்த வீட்டை சோதனை போடுகிறேன். நீ யார்?

மற்றவர் :—நான் இந்த வீட்டின் சொந்தக்காரன்.

இன்ஸ்பெக்டர் :—நாங்கள் சில தினங்களுக்கு முன் இந்த வீட்டிற்குள் வந்தோம். அப்போது நீர் இங்கே இல்லையே.

மற்றவர் :—நான் வெளியூருக்குப் போயிருந்தேன்; இன்று மத்தியானம்தான் வந்தேன்.

இன்ஸ்பெக்டர் :—இந்த வீட்டில் உம்மைத் தவிர இன்னம் யார் யார் குடி இருக்கிறார்கள் ?

மற்றவர் :—சோமசுந்தரம் என்பவர் ஒருவர் மாத்திரம் இருக்கிறார்.

இன்ஸ்பெக்டர் :—அவருக்கு பந்துக்கள் யாராவது இருக்கிறார்களா ?

மற்றவர் —எனக்குத் தெரிந்தவரையில் யாருமில்லை.

இன்ஸ்பெக்டர் :—அவருக்கு சிறிய தகப்பனார் ஒருவர் இருக்கிறாரா ?

மற்றவர் :—எப்போதோ இருந்தாராம். அவர் சாமியாராய் மாறி, காசிக்குப் போய் அங்கே இறந்துபோய் விட்டாராம்?

இன்ஸ்பெக்டர் :—அந்த சங்கதி இவருக்கு எப்படித் தெரிந்தது.

மற்றவர் :—அவரோடிருந்த இன்னொரு சாமியார் கடிதம் எழுதி அனுப்பினாராம். இதையெல்லாம் சோமசுந்தரம் ஒரு சமயத்தில் என்னிடம் சொன்னார்.

இன்ஸ்பெக்டர் :—இறந்துபோனவருக்கு மகன் மகள் முதலியவர்கள் யாராவது இருக்கிறார்களா ?

மற்றவர் :—யாரும் இல்லை என்று சோமசுந்தரம் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இன்ஸ்பெக்டர் :—இறந்துபோனவருக்கு பாலசுந்தரம் என்னும் பெயருடைய பிள்ளை ஒருவர் இருப்பதாக சோமசுந்தரம் எப்போதாவது சொன்னதுண்டா ?

மற்றவர் :—இல்லை, நீங்கள் இப்போது பாலசுந்தரம் என்ற பெயரைச் சொன்னவுடன், எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது.

இன்ஸ்பெக்டர் :—என்ன விஷயம்?

மற்றவர் :—என் தம்பியோடு பள்ளிக்கூடத்தில் ஒருவன் படித்தான். அவனுடைய பெயர் பாலசுந்தரம். அவன் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே மற்ற பையன்களுடைய புஸ்தகங்கள், சிலேட்டு, பென்சில், செருப்பு, குடை முதலியவைகளை எடுத்துக் கொள்வதில் மிக சாமர்த்திய சாலியாயிருந்தான். அவனைப் பள்ளிக்கூடத்தில் இருந்து துரத்திவிட்டார்கள். பிறகு அவன் ஜனக்கும்பலாய் இருக்குமிடத்தில் புகுந்து, பெண் பிள்ளைகளின் கழுத்து நகைகளை அறுப்பதிலும் அயலாருடைய சட்டைப் பைகளைக் காலி செய்வதிலும் அசாத்திய நிபுணனாய் விட்டான்; ஆனால் சில வருஷங்களுக்கு முன் என்ன காரணத்தினாலோ இந்த ஊரைவிட்டு மறைந்து போனான். அதன் பிறகு அவன் இங்கே வரவே இல்லை.

இன்ஸ்பெக்டர் :—இப்போது உமமுடைய தம்பி எங்கே?

மற்றவர் :—அவன் இறந்துபோய் நான்கு வருஷ காலமாகிறது.

இன்ஸ்பெக்டர் :—அவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தார்கள்?

மற்றவர் :—இந்த ஊரில் உள்ள இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் விசாரித்தால் உடனே சங்கதி தெரியும்.

இன்ஸ்பெக்டர் :—அந்த பாலசுந்தரத்தைப் பார்த்தால், உமக்கு இப்போது அடையாளம் தெரியுமா?

மற்றவர் :—அவனைப் பார்த்துப் பலவருஷங்கள் ஆகின்றன. அவன் வளர்ந்து உருமாறிப்போயிருக்கலாம். ஆளைப்பார்த்தால் தான், நான் அதை நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இன்ஸ்பெக்டர் —இந்த வீட்டில் இருக்கும் சோமசுந்தரம் எப்படிப்பட்ட மனிதர்.

மற்றவர் :—தங்கக் கம்பி யென்ருல் அவருக்கே தகும்; அவர் ஒருவருடைய ஜோலிக்குப் போவதில்லை; மகா சத்திய சந்தர்.

இன்ஸ்பெக்டர் :—அவருக்கு ஜீவனம் எப்படி நடக்கிறது?

மற்றவர் :—பத்திரம் எழுதிக் கொடுப்பதால், தினம் 12 அணு முதல் ஒரு ரூபா வரையில் வரும். அதை வைத்துக்கொண்டு அவர் மானமாயும் நாணயமாயும் காலக்ஷேபம் நடத்துகிருர்,

இன்ஸ்பெக்டர் :—(நிரம்பவும் கலக்க மடைந்தவராய்) சரி; நீர் இப்படிக் கொஞ்சம் வெளியில் வாரும்—என்ருர்.

உடனே வீட்டுக்காரர் அவரோடு வர, இருவரும் நடைக்கு வந்தனர். அவ்விடத்தில் சோமசுந்தரமும், பாலசுந்தரமும் இரண்டு ஜெவான்களுடைய வசத்தில் இருந்ததைக் கண்ட வீட்டுக்காரர் வியப்போடு, "அடடா! சோமசுந்தரத்தை ஏன் ஜெவான்கள் பிடித்துக்கொண்டிருக்கிருர்கள்?" என்ருர்.

இன்ஸ்பெக்டர், "சோமசுந்தரம் இருக்கட்டும். இன்ெருருவர் இருக்கிருரே அவரைப் பார்த்து, அடையாளம் கண்டுபிடிக்க முடியுமாளுல் கண்டுபிடியும்" என்ருர்.

உடனே வீட்டுக்காரர் பாலசுந்தரத்தைப் பார்த்து, தலைமுதல் கால்வரையில் இரண்டு தடவை ஏற இறங்க நோக்கி, "அடேடே! நம்முடைய பழைய பாலசுந்தரமல்லவா! என்னப்பா பாலசுந்தரம்! எப்போது வந்தாய்? நீ ஊரைவிட்டுப்போய் ஐந்தாறு வருஷகால மாகிறதே; இது வரையில் எந்த ஊரில் இருந்தாய்?

பாலசுந்தரம் :—நான் சாயங்காலம் வந்தபோது, நீர் தானே முதலில் என்னைப் பார்த்து, பிறகு சோமசுந்தரத்தை வெளியில் அனுப்பினீர்! இப்போது எதையும்

அறியாதவர்போல் ஆச்சரியமாகப் பேசுகிறீரே! நீர் இந்த வீட்டுக்காரர்தானே?

மற்றவர் :—ஆமப்பா, நான் இந்த வீட்டின் சொந்தக்காரனான பொன்னுசாமி. என் தம்பி கண்ணப்பன் அநியாயமாய் இறந்துபோய் விட்டானப்பா! நீ சாயங்காலமா இங்கே வந்தாய்! நான் உன்னைப்பார்க்கவில்லையே? சோமசுந்தரத்துக்கும் உனக்கும் சிநேகமா?

பாலசுந்தரம் :—என்ன ஐயா நீர் பெரிய ஜெகஜாலப் புரட்டரா யிருக்கிறீர்! என்னை இதற்குமுன் பார்க்காதவர்போல் நடிக்கிறீரே!

வீட்டுக்காரர் :—என்னப்பா பாலசுந்தரம் ஆள் புது மாதிரி ஆய்விட்டாயே! நீ இதற்குமுன் இன்னொரு இலாகாவில் கெட்டிக்காரனாய் இருந்தாய்! இப்போது வாய்ப் பேச்சிலும் நிபுணன் ஆய்விட்டாய்போல் இருக்கிறதே! என் தம்பி கண்ணப்பன் இப்போது இருந்தால், நீ பள்ளிக்கூடத்தில் நடத்திய திருவிளையாடல்களை யெல்லாம் சொல்லுவான். அவன் இல்லை. இனி உன் உபாத்தியாயரைத்தான் கூப்பிடவேண்டும்.

இன்ஸ்பெக்டர் :—(வீட்டுக்காரரைப் பார்த்து) சரி! போதும் வாக்குவாதம். உமக்கு சம்சாரம் உண்டா?

வீட்டுக்காரர் :—நான் ஏகாங்கி, இனிமேல்தான் எனக்குக் கலியாணம் ஆகவேண்டும்.

பாலசுந்தரம் :—ஏன் ஐயா படுமோசமாய்ப் பொய் பேசுகிறீர்! உம்முடைய தம்பியும் உம்முடைய சம்சாரமும் ஏதோ தப்பான காரியத்தைச் செய்ததாக நீர் இருவரையும் துரத்திவிடவில்லையா?

வீட்டுக்காரர் :—(ஏளனமாகச் சிரித்து) அடே பைத்தியக்காரா போ; எனக்கு இன்னம் கலியாணமே ஆகவில்லை என்பது இந்த ஊரார் எல்லோருக்கும் தெரியும். என் தம்பி இறந்துபோனது மரணப் பதிவு ரிஜிஸ்டரில் இருக்கிறது. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்

டும். நீ நேற்று முளைத்த பையன்; இதற்குள் பொய்யும் பித்தலாட்டமும் சொல்லிக்கொண்டு அலைந்து ஏன் வீணில் அழிந்துபோகிறாய். எத்தனையோ ஜனங்கள் இந்த உலகத்தில் மானமாய் ஜீவனம் நடத்துகிறார்களே, உனக்கு மாத்திரந்தானா, அதற்கு இடம் இல்லாமல்போய்விட்டது! —என்று கூறிவிட்டு (இன்ஸ்பெக்டரைக் பார்த்து) "ஸார், இவன்தான் நான் குறித்த பாலசுந்தரம் என்னும் காலாடிப் பயல். சந்தேகமே இல்லை. நான் இனி இங்கே இருந்தால், வீண் சண்டை வளரும். நான் போகலாமல்லவா?

இன்ஸ்பெக்டர் :—சரி; நீர் போகலாம். இந்த பாலசுந்தரம் திருட்டு நகையை இந்தப் பெட்டியில் வைத்து இன்னொருவனிடம் கொடுத்தபோது இவனைப்பிடித்துக்கொண்டோம். இவன் அப்போது முதல் பலவிதமாக விஷயங்களைப் புரட்டுகிறான்; சோமசுந்தரத்தை சம்பந்தப்படுத்துகிறான்! உம்முடைய சம்சாரத்தையும், தம்பியையும் பிணைக்கிறான். இப்போது நீரும் சோமசுந்தரமும் சொன்னதையெல்லாம் கேட்டதில், எனக்கு உண்மை விளங்கி விட்டது. நீரும் சோமசுந்தரமும் போகலாம.

வீட்டுக்காரர் :—சுத்த தறுதலைப் பையன். மானமாய் இருக்கிறவர்களை யெல்லாம் சந்தியில் இழுத்துவிட்டு கேப்மாறித்தனம் செய்கிறான். இவனைக் கொண்டுபோய் ஸ்டேஷனில் வைத்துக்கொண்டு திருடும் கைகளையும், ஓடும் கால்களையும் முறித்து, பொய் சொல்லும் வாயிலுள்ள பற்களை உடைத்து விடுங்கள். நீங்கள் மறந்து போகாமல் பள்ளிக்கூடத்திற்குப் போய் இவனுடைய பழைய வரலாற்றை விசாரியுங்கள்—என்றார்.

அதைக் கேட்டுக்கொண்ட இன்ஸ்பெக்டர், "சரி; நடத்துங்கள் கைதியை" என்று ஜெவான்களிடம் கூற, அவர்கள் பாலசுந்தரத்தைப் பார்த்து "நட" என்றார்கள். அவன் இன்ஸ்பெக்டரை நோக்கி, "ஐயா, நான் ஒரு பாவத்தையு மறியேன். இவர்கள் சொல்வதை நம்பி நீங்கள்

என்னை உபத்திரவிக்கிறீர்கள்! நான் சாயங்காலம் கையில் வைத்திருந்த டிரங்க் பெட்டி இந்த சோமசுந்தரத்தின் அறையில் இருக்கிறது. அதைப் பார்த்தால், இவர்கள் சொல்வது புரட்டு என்பது விளங்கிப்போகும்" என்றான்.

இன்ஸ்பெக்டர்:—அதை நான் இன்னமும் பார்க்கவில்லை என்று நினைத்தாயா? நான் முக்கியமாய் உள்ளே போனது அதைப் பார்ப்பதற்குத்தான். உள்ளே எந்த இடத்திலும் உன் பெட்டி இல்லை. நீ சொல்வதெல்லாம் பொய்யென்பதற்கு அதுவே போதுமான சாட்சி. நட ஸ்டேஷனுக்கு—என்றார்.

ஜெவான்கள் அவனைப் பிடித்துபலவந்தமாய் இழுக்க ஆரம்பிக்கவே, அவனுடைய கண்களில் கண்ணீர் பொங்கி வழியத் தொடங்கியது. ஆத்திரம் நெஞ்சை அடைத்தது. அவன் சோமசுந்தரத்தைப் பார்த்து, "அடெ பாவி, உன் பேச்சை நம்பினதற்கு என் தலையில் கல்லைப் போட்டாயெடா, சதிகாரா! சண்டாளா! நீ வெகு சீக்கிரத்தில் அழிந்து நாசமாய்ப் போய்விடுவாய்! என் வயிறு பற்றி எரிகிறதடா படுபாவி. உன் தலையில் இடி விழுந்துவிடப் போகிறது. பார்" என்று கூறிப் பதற, சோமசுந்தரம் புன்னகை செய்தபடி, "அடெ முடிச்சுமாறி நாயே, நீ பெரிய மகரிஷி என்று நினைத்துக்கொண்டு என்னை சபிக்கிறாயா! நீ உண்மையில் குற்றமற்றவனாயிருந்து, ஒரு குற்றவாளியை சபித்தால், ஒருவேளை அது பலித்தாலும் பலிக்கும். நீ அயோக்கிய சிகாமணி; குற்றமற்ற ஒருவனை நீ சபித்தால், அது என்னடா செய்யும். இதுவரையில் கெட்டது கெட்டாய். இனியாவது ஒழுங்காய்ப் பிழை" என்று கூறினான்.

அப்போது தயங்கித் தயங்கி நின்ற பாலசுந்தரத்தை ஜெவான்கள் கழுத்தில் கையை கொடுத்து நெட்டித்தள்ள, அவன் அரை மனதோடு நடக்கலானான். போலீஸ் இன்ஸ்

பெக்டர் அவர்களுக்குப் பின்னால் சென்றார். அவர்கள் சொற்ப நேரத்தில் ஸ்டேஷனை அடைய, பாலசுந்தரம் லாக்கப்பில் அடைக்கப்பட்டான்.

இது நிற்க, கேடி நடேசன் அந்த ஊருக்கு வந்திருக்கும் சம்பந்தமாய் அவனுடைய நடவடிக்கைகளை கவனிக்கும் பொருட்டு வந்ததாகச் சொல்லிக்கொண்ட மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஸ்டேஷனில் தங்காமல் வேறிடத்தில் ஜாகை வைத்துக் கொண்டார். அங்கு அவர் அன்றைய இரவைக் கழித்து மறுநாட் காலையில் சுமார் பத்து மணி சமயத்தில் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் அவரை வரவேற்று ஒரு நாற்காலியில் உட்காரச்செய்ய, இருவரும் லோகாபிராமமாய் சம்பாஷிக்கலாயினர்.

இன்ஸ்பெக்டர் :—இந்த ஊருக்கு வந்திருக்கும் கேடி நடேசன் உங்கள் கண்ணில் பட்டானா? அவனுடைய அடையாளம இந்த ஊரில் உள்ள எங்களுக்குத் தெரியாமையால், நாங்கள் எதையும் செய்யமுடியாமல் இருக்கிறோம். அவனுடைய போட்டோப் படம் ஒன்று இருந்தால், அதை வைத்துக் கொண்டு நாங்கள் அடையாளம் கண்டு கொள்வோம்.

மீனாட்சிசுந்தரம் :—அவனுடைய போட்டோப் படம் எங்கள் ஊரில் இருக்கிறது. கடிதம் எழுதி வரவழைத்துத் தருகிறேன். அவன் நேற்று இரவு ஒன்பது மணிக்கு இந்த ஊர் சத்திரத்தில் காணப்பட்டானாம். அதற்கு மேல் எங்கே போனான் என்பது தெரியவில்லை. அதுவன்றி இன்னொரு முக்கிய சங்கதி எனக்கு எட்டி இருக்கிறது.

இன்ஸ்பெக்டர் :—என்ன அது?

மீனாட்சிசுந்தரம் :—இந்த ஊரில் உள்ள செட்டியார்களுடைய வீடுகள் எல்லாம் உங்களுக்குத் தெரியுமா?

இன்ஸ்பெக்டர் :—இந்த ஊரில் எத்தனையோ செட்டியார்கள் இருக்கிறார்கள். எல்லாருடைய வீடுகளும் எனக்

கெப்படித் தெரியும்! முக்கியமான சிலருடைய வீடுகள் தான் தெரியும்.

மீனுட்சிசுந்தரம்:—காசுக்கடை வைத்திருக்கும் கந்தசாமி செட்டியாரை உங்களுக்குத் தெரியுமோ! அவர் பெரிய லக்ஷப் பிரபுவாமே!

இன்ஸ்பெக்டர் :—ஓ அவரா! அவரைத் தெரியும். அவர் கொழுத்த பணக்காரர்தான்; ஆனல் எச்சில் கையால் காக்கை ஓட்டமாட்டார்; தரித்திர சிகாமணிக்கு முதல் தாம்பூலம் அவருக்குத்தான் கொடுக்கவேண்டும்.

மீனுட்சிசுந்தரம் :—அவர் எப்படியாவது இருக்கட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. இன்றிரவு 11 மணிக்கு அவருடைய வீட்டில் திருட்டு நடக்கப் போவதாக சங்கதி எட்டி இருக்கிறது.

இன்ஸ்பெக்டர் :—ஓகோ! அப்படியா! திருடர்கள் செய்யப்போகும் சங்கதி உங்களுக்குத் தெரிவதென்ருல், உங்களுக்கு வேண்டிய உள்ளாள்கள் திருடர்களிடம் நுழைந்து பழகுகிற மாதிரி இருக்கிறது. இந்தத் திருட்டு கேடி நடேசனுடைய வேலைதானே?

மீனுட்சிசுந்தரம் :—அப்படித்தான் இருக்க வேண்டும்.

இன்ஸ்பெக்டர் :—அவன் மாத்திரம் வந்திருக்கிருனு? அவனேடு பல ஆள்களும் வந்திருக்கிருர்களா?

மீனுட்சிசுந்தரம் :—அது திட்டமாய்த் தெரியவில்லை.

இன்ஸ்பெக்டர் :—இந்த விஷயம் முன்னுகவே எனக்கு எட்டியது பெரிய அநுகூலம். நான் ஆள்களோடு போய் மறைந்திருந்து திருடனைப் பிடித்துவிடுகிறேன். கேடி நடேசனே வருவானு, அவனுடைய ஆள்கள் வருவார்களோ என்பது தெரியவில்லை.

மீனுட்சிசுந்தரம் :—கேடி நடேசனுடைய வேலைத் திறம் ஒரு மாதிரியானது. அவன் அதிகமாய் ஆள்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, பயங்கரமாக வேலை செய்கிறதில்லை. பெரும்பாலும் அவன் ஒருவனே வருவான்; இல்லையானல்

தன்னோடு ஒருவன், அல்லது, இருவரை அழைத்துக் கொண்டு வருவான். சிறிதும் பிரயாசையின்றி மிக சுலபத்தில் தந்திரமாய்க் காரியத்தை முடித்துக்கொண்டு போய் விடுவான்.

இன்ஸ்பெக்டர் :—அப்படியானால் நம்முடைய வேலை சுலபமானதாய் விட்டது. அவர்கள் பயங்கரமான ஆயுதங்களை உபயோகிப்பார்களோ? இந்த விஷயம் உங்களுக்கு எப்படி எட்டியது?

மீனாட்சிசுந்தரம் :—எப்படியோ எட்டியது. அதிலெல்லாம் நாம் இப்போது நமது கவனத்தைச் செலுத்துவதை விட, இனி ஆக வேண்டியதில் கவனத்தைச் செலுத்துவது நல்லதென்று நினைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர் :—திருடர்கள் நடேசனைச் சேர்ந்தவர்களா யில்லாவிட்டால், ஏற்கனவே, இந்த ஊரில் உள்ள இரகஸியக் கூட்டத்தாரா என்பது உங்களுக்குத் தெரிந்ததா?

மீனாட்சிசுந்தரம் :—அதையெல்லாம் நான் நிச்சயமாய் எப்படிச் சொல்லுகிறது. நானும் திருடரோடு சம்பந்தப் பட்டிருந்தால்தான் நீங்கள் கேட்பதற்கெல்லாம் நான் நிச்சயமான தகவல் தெரிவிக்க முடியும், இன்றிரவு 11 மணி சமயத்தில் கந்தசாமி செட்டி வீட்டில் திருட்டு நடக்கப் போகிறது என்ற தகவல் ஒன்றைத் தவிர, அதிகம் எதுவும் எனக்குத் தெரியாது.

இன்ஸ்பெக்டர் :—ஆனால் ஒரு விஷயம் எனக்கு நிச்சயப் பட்டுவிட்டது. இந்த ஊரில் கொஞ்ச காலமாய் நடக்கும் விநோதத் திருட்டுகள் சம்பந்தமாய் சோமசுந்தரம் என்னும் ஒரு போக்கிரியின்மேல் நாங்கள் சம்சயம் கொண்டிருப்பதாக நான் நேற்று உங்களிடம் சொன்னேனல்லவா. அந்த சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. அவன் யோக்கியன் என்பது நிச்சயப்பட்டது. நேற்று வண்டி மோதிக் கொண்டபோது ஒரு மனிதன் டிரங்க் பெட்டியுடன் வந்

தானே. அவன் பெரிய திருடன் என்பது தெரிந்து விட்டது. அவனைப் பிடித்து லாக்கப்பில் வைத்திருக்கிறோம்.

மீனுட்சிசுந்தரம் :—அவன் மேல் சம்சயம் ஏற்பட என்ன விதமான ருஜூ கிடைத்தது?

இன்ஸ்பெக்டர் :—சில தினங்களுக்கு முன் வக்கீல் சுப்பிரமணியத்தின் வீட்டில் திருட்டு நடந்ததல்லவா. அதில் சம்பந்தப்பட்ட சில தங்க நகைகளை ஒரு பெட்டியில் வைத்து, அவன் கொண்டுவந்து வேருருவனிடம் கொடுத்தபோது, நாங்கள் அவனைப் பிடித்துக்கொண்டோம்— என்று கூறி முதல்நாள் நிகழ்ந்த சம்பவத்தை விரிவாகக் கூறினுர்.

மீனுட்சிசுந்தரம் :—அப்படியானுல், பள்ளிக்கூடத்திற்குப் போய் பாலசுந்தரத்தைப்பற்றி விசாரித்தீர்களா?

இன்ஸ்பெக்டர் :—இல்லை. இனிமேல்தான் போகவேண்டும்.

மீனுட்சிசுந்தரம் :—அப்படியானுல் நானும் வருகிறேன். இப்போது போய் அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு வருவோமே—என்ருர்.

உடனே இருவரும் வெளியில் சென்று, சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருந்த அந்த ஊர் பள்ளிக்கூடத்தை யடைந்தனர். அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயர் போலீஸ் இன்ஸ்பெக்டரை நன்ருகத் தெரிந்துகொண் டிருந்தவராதலால், அவரும் இன்ஞெரு பெரிய மனிதரும் வந்ததைக் கண்டு, “ஓ! இன்ஸ்பெக்டர் ஸாரா! வாருங்கள்” என்று கூறி, பையன்களை ஏவி இரண்டு நாற்காலிகளை எடுத்து வரச்செய்து, அவற்றில் உட்கார்ந்து கொள்ளும்படி கூறி உபசரிக்க, அவ்வாறே இருவரும் உட்கார்ந்துகொண்டனர்.

உபாத்தியாயர், “எங்கே இவ்வளவு தூரம் தயவு செய்தது?” என்று இன்ஸ்பெக்டரை நோக்கி வினவ,

அவர், "சில வருஷங்களுக்கு முன்னர் இந்தப் பள்ளிக் கூடத்தில் படித்த ஒரு பையனைப்பற்றிய தகவல் தெரிய வேண்டும். அது மிக முக்கியமான ஒரு வழக்கு சம்பந்த மாய்த் தேவை. அதற்காக வந்தோம். உங்களுக்கு அசௌகரிய மில்லாவிட்டால், கொஞ்சம் அதைப் பார்த்துச் சொல்லவேண்டும்" என்றார்.

உபா:—நாங்கள் இருபது வருஷங்களுக்கு மேற்பட்ட ரிஜிஸ்டர்களைக் கொளுத்திவிடுவது வழக்கம். அதற்குள் உங்களுக்கு என்ன தகவல் தேவையோ அதைக்கொடுக்கத் தடையில்லை. அந்தப் பையன் கடைசியாய் எத்தனை வருஷங்களுக்கு முன் இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுப் போனான்?

இன்ஸ்பெக்டர்:—சுமார் பத்து வருஷ காலத்திற்கு முன் அவன் ஐந்தாவது வகுப்பில் படித்தானும். அவன் பெயர் பாலசுந்தரம்.

உபா:—எழுந்துபோய் ஒரு பீரோவில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருந்த புஸ்தகங்களைப் புரட்டி அதிலிருந்து ஒரு புஸ்தகத்தைத் தூக்கிக்கொண்டு வந்து பக்கங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "ஸார், பாலசுந்தரம் என்று பெயருடையவர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். ஒருவன் பி. பாலசுந்தரம், இன்னொருவன் எம். பாலசுந்தரம். இவர்களில் யாரைப்பற்றி நீங்கள் விசாரிக்கிறீர்கள்?" என்றார்.

இன்ஸ்பெக்டர், "இருவரைப்பற்றியும் சொல்லுங்கள்" என்றார்.

உபாத்தியாயர் தமக்குள் படித்துவிட்டு, "பி. பாலசுந்தர அநேகமாய் எல்லாப் பரீட்சைகளிலும் சுன்னமே மார்க்கமாக வாங்கி இருக்கிறான். ஆகையால் அவன் ஐந்தாவது வகுப்பில் மூன்று வருஷங்கள் இருந்தான். அவனுடைய நடத்தை சரியானதல்ல. எல்லோருடைய சாமான்களையும், திருடுவதே அவனுடைய

வேலை. கடைசியாக நடந்த ஐந்தாவது வகுப்பு பரீட்சையில் அவன் புஸ்தகத்தை மறைத்து வைத்துக்கொண்டு அதைப் பார்த்து விடைக் காகிதத்தில் எழுதினான். ஆகையால் அவனைப் பள்ளிக்கூடத்தில் இருந்து விலக்கி அனுப்பிவிட்டோம். இன்னொருவனான எம். பாலசுந்தரம் யோக்கியமான நடத்தை யுடையவன். அவன் எல்லாப் பரீட்சைகளிலும் அதிகமான மார்க்குகள் வாங்கி கடைசிப் பரீட்சையில் தேறி இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுப் போயிருக்கிறான்'' என்று சொல்லி புஸ்தகத்தை தூர வைத்தார்.

இன்ஸ்பெக்டர், "இவர்கள் இருவருடைய வீட்டு விலாசங்கள் தெரியவேண்டும்'' என்றார்.

உடனே உபாத்தியாயர் பையன்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த காலத்தில் எழுதிக் கொடுத்த மனுக்களைத் தேடினார். பி. பாலசுந்தரத்தின் மனு அகப்படவில்லை. இன்னொருவனுடையது அகப்பட்டது. "எம். பாலசுந்தரத்தின் தகப்பனார் பெயர் மாணிக்கம் செட்டியார். அவருடைய விலாசம் செட்டித் தெருவு 99-ம் நம்பர் வீடு'' என்றார் உபாத்தியாயர்.

இன்ஸ்பெக்டர், "இதே காலத்தில் ஐந்தாவது வகுப்பில் கண்ணப்பன் என்று ஒருவன் படித்தானா என்று பாருங்கள்'' என்றார்.

உபாத்தியாயர் மறுபடி ஷை கணக்குப் புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்து, "ஆம். இருந்திருக்கிறான்; அவன் அம்மன் கோவில் சந்து 15-வது நம்பர் வீட்டிலுள்ள தமயன் பொன்னுசாமியின் ஆதரவில் படித்தவன்'' என்றார்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் சந்தோஷ முக மலர்ச்சியோடு மீனாட்சிசுந்தரம் பிள்ளையை ஒரு முறை பார்த்தபிறகு உபாத்தியாயரை நோக்கி, "பி. பாலசுந்தரம் என்பவனை நீங்கள் இப்போது பார்த்தால் அவனுடைய அடையாளம் உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

உபாத்தியாயர், "ஒவ்வொரு வருஷத்திலும் எத்தனையோ பையன்கள் வருகிருர்கள் போகிருர்கள். பத்து வருஷ காலத்திற்குமுன் படித்து விட்ட பையனுடைய அடையாளம் எனக்கு இப்போது எப்படித் தெரியும். ஆகையால், அதை நான் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்வது கூடாத காரியம். நீங்கள் எதற்காக இந்தத் தகவலைக் கேட்கிறீர்கள் ?" என்ருர்.

இன்ஸ்பெக்டர், "ஒரு திருட்டில் பாலசுந்தரம் என்னும் ஒரு பையன் சம்பந்தப்படுகிருன். அவன் சுமார் பத்து வருஷங்களுக்குமுன் இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தான் என்றும், அவன் அப்போதே கெட்ட நடவடிக்கை உடையவனுயிருந்தான் என்றும் எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது மெய்யா பொய்யா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகக் கேட்டோம்" என்று கூறி உபாத்தியாயருக்கு வந்தனம் கூறிவிட்டு எழுந்தார். மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் வந்தனம் கூறிவிட்டு எழுந்தார்.

இருவரும் உடனே வெளியில் வந்தனர். அப்போது இன்ஸ்பெக்டர், "இந்த பாலசுந்தரம் தன்னுடைய ஊர் பெருச்சாளிப்பட்டி என்று சொன்னுன். ஆகையால், பி. பாலசுந்தரம் என்பவனே இவன் என்பது நிச்சயமாகிறது. கண்ணப்பன் என்பவனும் அதே காலத்தில் படித்திருக்கிருன். சோமசுந்தரம் இருக்கும் வீட்டின் சொந்தக்காரன் சொன்னதெல்லாம் நிஜமான தகவல் என்பது இப்போது நிச்சயமாய் விட்டது. அவன் சோமசுந்தரத்தைப் பற்றிச் சொன்னதும் அநேகமாய் நம்பிக்கையான தகவலாய்த்தா னிருக்கவேண்டும். நான் பெருச்சாளிப் பட்டியிலுள்ள சிலருக்குத் தந்தி அனுப்பி இருக்கிறேன். அதற்கு மறுமொழி வந்தவுடன் விஷயம் இன்னம் நன்ருக நிச்சயப்பட்டுவிடும். அதற்குமேல் நாம் நடவடிக்கை நடத்துவோம்" என்ருர்.

மீனுட்சிசுந்தரம் பிள்ளை மறுமொழி கூருமல் மௌன மாயிருந்த பின், "சரி; இதிருக்கட்டும், இன்றைய இரவில் நடக்கப்போகும் திருட்டு விஷயமாய் என்ன ஏற்பாடு செய்யப்போகிறீர்கள்?" என்ருர்.

இன்ஸ்பெக்டர், "இன்னம் கொஞ்சநேரத்தில் செட்டியாரிடம் போய் அவரிடத்தில் விஷயத்தைத் தெரியப் படுத்தப் போகிறேன். மாலை ஏழு மணிக்கே நானும் அரை டஜன் ஜெவான்களும் அவருடைய வீட்டிற்குப் போய் ஒளிந்துகொண்டிருக்கப் போகிருேம். திருடன் எங்களிடம் அகப்படாமல் எப்படித் தப்புகிருன் என்று பார்க்கிறேன்" என்ருர்.

மீனுட்சிசுந்தரம் பிள்ளை, "சரி, எனக்குக் கொஞ்சம் அலுவல் இருக்கிறது. நான் போகிறேன். நீங்கள் ஸ்டேஷனுக்குப் போங்கள். நான் மத்தியானம் வந்து உங்களை சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு, இன்ஸ்பெக்டரை விட்டுப் பிரிந்து வேறு திசையில் போய்விட்டார்.

இன்ஸ்பெக்டர் தாம் முதல்நாள் மாலையிலிருந்து செய்த அரிய வேலைகளைக் குறித்து தமக்குத் தாமே சந்தோஷத்திஞல் பூரித்துப்போனவராய், ஆநந்த வெள்ளத்தில் மிதந்துகொண்டே நடந்து செட்டித் தெருவையடைந்து, 99-ம் நம்பர் வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தார். அந்த வீட்டிலிருந்த மாணிக்கம் செட்டியாரைக் கண்டு, அவருடைய மகனை எம். பாலசுந்தரத்தைப்பற்றி விசாரித்து, அவனைப்பற்றி கிடைக்கக்கூடிய தகவல்களையும் தெரிந்துகொண்டு போகவேண்டுமென்று கருதி அந்த வீட்டை அடைந்தார்.

அது மேன்மாடத்தோடு கூடிய ஓர் உப்பரிகை வீடு. அந்த வீட்டின் முன் பக்கத்தில் இருந்த வாசற்கதவும், ஜன்னல் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. எனவே இன்ஸ்பெக்டர் வாசற்கதவண்டை சென்று அதைத் தட்டினர்.

ஐந்து நிமிஷகாலத்தில் ஒருவர் கதவைத் திறந்தார். உடனே இன்ஸ்பெக்டர், "மாணிக்கம் செட்டியார் என்பது யார்?" என்ருர்.

கதவைத் திறந்தவர் :—அந்தப் பெயருடையவர் இங்கே யாருமில்லையே.

இன்ஸ்பெக்டர் :—இந்த வீட்டுக்காரர் எங்கே இருக்கிருர்?

கதவைத் திறந்தவர் :—நான் தான் இந்த வீட்டுக்காரன்.

இன்ஸ்பெக்டர் :—உங்கள் பெயர் என்ன?

கதவைத் திறந்தவர் :— என் பெயர் ராமநாதம் செட்டியார்.

இன்ஸ்பெக்டர் :—இந்த வீட்டை நீங்கள் எப்போது வாங்கினீர்கள்?

ராமநாதம் :—நான் வாங்கி பத்து வருஷகாலமாகிறது.

இன்ஸ்பெக்டர் :—உங்களுக்கு இதை விற்றவர் யார்?

ராமநாதம் :—அவருடைய பெயர் கதிரேசன் செட்டியார்.

இன்ஸ்பெக்டர்—அவர் இப்போது எங்கே இருக்கிருர்?

ராமநாதம் :— அவர் ரெங்கூனுக்குப் போய் விட்டார்.

இன்ஸ்பெக்டர் :—சுமார் பத்து வருஷ காலத்திற்குமுன் இந்த வீட்டில் மாணிக்கம் செட்டியார் என்று ஒருவர் இருந்தாராம். அவரை உங்களுக்குத் தெரியுமா?

ராமநாதம் ;—தெரியாது—என்ருர்.

அவ்வளவோடு இன்ஸ்பெக்டர் தமது விசாரணையை நிறுத்திக்கொண்டு அங்கிருந்து காசுக்கடைக்காரக் கந்தசாமி செட்டியாரிடம் போய் இரவில் திருட்டு நடக்கப் போவதைத் தெரிவித்துவிட்டுத் தமது வீட்டை யடைந்

தார். அங்கு தமது ஸ்நானம், சாப்பாடு முதலிய காரியங்களை முடித்துக்கொண்டு, அவர் பிற்பகலில் மறுபடி ஸ்டேஷனுக்குப் போய்ச்சேர்ந்தார்.

அங்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆயத்தமாய்க் காத்திருந்தார். அவரிடம் இன்ஸ்பெக்டர் எம். பாலசுந்தரத்தைப் பற்றி தாம் செய்த முயற்சியின் விவரத்தைத் தெரிவித்தார்.

அப்போது ஸ்டேஷன் ரைட்டர் இன்ஸ்பெக்டருக்குக் கெதிரில் வந்து நின்று அவருக்கு சலாம் வைத்து, "நீங்கள் வெளியில் போயிருந்தபோது டெலிபோன் வழியாக ஒரு செய்தி வந்தது ஸார்" என்றார்.

இன்ஸ்பெக்டர் :—என்ன செய்தி ?

ரைடர் :—அம்மன் கோவில் சந்தில் உள்ள 15-வது நம்பர் வீட்டில் இன்றிரவு பத்துமணிக்கு மேல் திருட்டு நடக்கப்போகிறதாம். நாம் கைதி செய்து லாக்கப்பில் அடைத்திருக்கும் பாலசுந்தரத்தின் கூட்டாளிகள், பழி வாங்கும் பொருட்டு, 15-வது நம்பர் வீட்டில் உள்ள அதன் சொந்தக்காரர், சோமசுந்தரம் ஆகியோரைக் கொன்று போட்டுவிட்டு, வீட்டிலுள்ள சொத்துகளையெல்லாம் கொண்டுபோக உத்தேசித் திருக்கிறார்களாம். இந்த சங்கதியை டெலிபோன் வழியாக யாரோ ஒருவர் கூறினார். நான் எக்ஸ்சேஞ்ச் ஆபீஸரைக் கேட்டு, அதில் பேசியவர் அதே தெருவில் 14-வது நம்பர் வீட்டில் உள்ள டெலிபோனிலிருந்து பேசினதாகத் தெரிந்துகொண்டு உடனே நான் அங்கே போனேன். வீட்டுக்காரர் மாடியில் இருந்தார். கீழ்பாகத்தில் டெலிபோன் இருக்கிறது. கீழ்பாகம் திறந்துகிடந்ததாகையால், தமக்குத் தெரியாமல் யாராவது வந்து பேசி இருக்க வேண்டுமென்றும், தமக்கு எந்த சங்கதி தெரியாதென்றும் வீட்டுக்காரர் சொன்னார். அதைத் தெரிந்து

கொண்டு அங்கிருந்துதான் இப்போது நான் வருகிறேன்—என்றார்.

இன்ஸ்பெக்டர் :—இதென்ன பெரிய இழவாய்ப் போய் விட்டதே. ஊரில் திருடர்கள் அதிகமாய் விட்டார்களே! திருடர்கள் இவ்வளவு அசட்டுத்தனமாகவா காரியம் செய்வார்கள். அவர்கள் திருட உத்தேசிப்பதை யெல்லாம் யாரோ உடனுக்குடன் நமக்குச் சொல்லிவிடுகிறார்களே!

மீனாட்சிசுந்தரம் :—அதுவும் நல்ல அதிர்ஷ்டந்தானே! அதைப்பற்றி நாம் சந்தோஷப்பட வேண்டும்.

இன்ஸ்பெக்டர் :—ஆம், மெய்தான். இன்றிரவு நமக்கு இரண்டிடங்களில் வேலை இருக்கிறது. ஓரிடத்தில் பத்து மணிக்குமேல் திருட்டு நடக்கப்போகிறது. இன்னொரிடத்தில் 11-மணி சுமாருக்கு நடக்கப்போகிறது. இரண்டிடங்களிலும் நாம் எப்படி இருக்கிறது.

மீனாட்சிசுந்தரம் :—அதெப்படி முடியும். இரண்டிடங்களிலும், நாம் ஆள்களைப் பிரித்துத்தான் வைக்க வேண்டும். நானும் வருகிறேன். நீங்களும் நானும் கந்தசாமி செட்டியாருடைய வீட்டிற்குப் போவோம், உங்கள் ஸப்-இன்ஸ்பெக்டரும், சில தலைமை ஜெவான்களும் சோமசுந்தரத்தின் வீட்டிற்குப் போகட்டுமே.

இன்ஸ்பெக்டர் :— அப்படித்தான் செய்யவேண்டும். ஸப்-இன்ஸ்பெக்டர் ஏதோ மருந்து சாப்பிடுவதாகச் சொல்லி ஒரு வாரத்திற்கு ரஜா வாங்கிக் கொண்டார். அவர் நாளையதினம் வரவேண்டும். இன்றிரவு கொஞ்ச நேரம் வரும்படி சொல்லியனுப்புகிறேன். நீங்கள் ஏழு மணிக்குள் இங்கேயே வந்துவிடுங்கள்—என்றார்.

"சரி, அப்படியே வருகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டார் பிள்ளை. மாலைப்பொழுது நெருங்கியது. ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர், இரண்டு தலைமை ஜெவான்கள், சுமார் பத்து ஜெவான்கள் ஆகியோர் ஸ்டேஷனில் வந்து ஆயத்தமா யிருந்தனர். இன்ஸ்பெக்டரும்

மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் சரியா ஏழு மணிக்கு வந்து சேர்ந்தனர்.

ஸப்-இன்ஸ்பெக்டர், இரண்டு தலைமை ஜெவான்கள் ஆறு சாதாரண ஜெவான்கள் ஆகியோர் சோமசுந்தரத்தின் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். இன்ஸ்பெக்டர், மீனுட்சிசுந்தரம் பிள்ளை, நான்கு ஜெவான்கள் ஆகியோர் கந்தசாமி செட்டியாருடைய வீட்டை யடைந்தனர்.

இரவில் திருட்டு நடக்கப்போவதாய்ச் செய்தி வந்திருக்கிறதென்று இன்ஸ்பெக்டர் சொன்னதைக் கேட்டவுடன் கந்தசாமி செட்டியார் தமது வயோதிகத் தந்தையையும், மனைவி மக்களையும், எதிர்த்த வீட்டிலிருந்த தமது மைத்துனர் அருணசலத்தின் வீட்டிற்கு அனுப்பிவிட்டு தாம் மாத்திரம் இருந்தார். அருணசலம் செட்டியார் தமது குமாரர்களை அவர்களுக்குத் துணையாக வைத்துவிட்டு கந்தசாமி செட்டியாருக்குத் துணையாக அவருடைய வீட்டில் வந்திருந்தார்.

மாலை ஏழரை மணிக்கு போலீஸாரும் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையும் ஒருவர்பின் ஒருவராய் அங்கே வந்து சேர்ந்தனர். இன்ஸ்பெக்டருடன் நான்கு ஜெவான்கள் கத்தி துப்பாக்கிகளுடன் வந்திருந்தனர். அப்போது அந்த வீட்டில் இரண்டு செட்டியார்கள் உள்பட எட்டு மனிதர்கள் இருந்தனர்.

எட்டு மனிதர்களைத் தவிர, வீட்டில் அன்னியர் எவரும் இல்லை என்பதை நிச்சயித்துக்கொண்ட இன்ஸ்பெக்டரும் மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் முன் பக்கத்தில் கிராதிக் கதவு, அதற்கடுத்த தோட்டக் கதவு ஆகியவற்றை மூடித் தாளிடச்செய்து, நடையில் ஒரு ஜெவானையும், தோட்டத்துக் கதவின் உள்புறத்தில் ஒரு ஜெவானையும் நிறுத்திவிட்டு மற்ற ஜொவான்களுடன் இரண்டாவது கட்டை யடைந்தனர்.

அப்போது மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "இரும்புப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும் அறையைத் திறந்து பார்த்து திருப்தி செய்துகொள்வது நல்லது. ஏனென்றால் உள்புறத்தில் ஒருவேளை ஏற்கனவே ஆள் வந்து ஒளிந்து கொண்டிருந்தாலும் இருக்கலாம்" என்றார்.

உடனே செட்டியார் அந்த அறையின் கதவைத் திறந்து நன்றாகப் பார்த்துவிட்டு, "யாரும் இல்லை" என்று கூறியபடி கதவை மூடி இரட்டைப் பூட்டுகள் போட்டு அதைப் பூட்டினார்.

உடனே இன்ஸ்பெக்டர், "சிலர் மெத்தையின்மேல் இருப்பது நல்லது" என்றார். இரண்டு ஜெவான்கள் மேலே அனுப்பப்பட்டனர்; அவர்கள் மாடியின் ஹாலில் இருந்தனர். இன்ஸ்பெக்டர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, இரண்டு செட்டியார்கள் ஆகியோர் இரண்டாவது கட்டில் இருந்தனர்.

மீனாட்சிசுந்தரம் :—நான் பின்பக்கத்தில் போய் ஜெவான் என்ன செய்கிறான் என்று பார்த்துவிட்டு வருகிறேன்— என்று கூறிவிட்டு தோட்டத்தின் பக்கத்திலிருந்த கதவண்டை சென்றார். அங்கே ஜெவான் எச்சரிப்பாக நின்று கொண்டிருந்தான்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவனைப் பார்த்து, "நீ உன் ஊதுகுழலை எடுத்து வந்திருக்கிறாயல்லவா?" என்றார்.

ஜெவான், "இருக்கிறது" என்றான்.

மீனாட்சிசுந்தரம் :—சரி; ஜாக்கிரதையாயிரு. கதவிற்கு அப்பால் மனிதர் வந்து நடமாடும் ஓசை உண்டானால், ஊதுகுழலை உபயோகிக்காதே. ஓசை செய்யாமல் உடனே உள்ளே வந்து எங்களுக்குத் தெரிவி" என்றார்.

அவன் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான். உடனே அவர் அங்கிருந்து முன்பக்கம் போய் அங்கிருந்த ஜெவானையும் எச்சரித்துவிட்டு வந்து சேர்ந்தார். வந்தவர்

கந்தசாமி செட்டியாரை அழைத்துக்கொண்டு தாம்மேலே போய்ப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

அவ்வாறு சென்றவர் சுமார் அரைமணிகாலம் வரையில் திரும்பிவர வில்லை. மாடியில் மனிதர்கள் அங்குமிங்கும் நடந்துசென்ற காலடியோசை கேட்டபடி இருந்தது. மேலே சென்றவர்கள் கீழே வராமல் இருக்க, இன்ஸ்பெக்டருடைய மனது சஞ்சல மடையத் தொடங்கியது. அப்போது யாரோ படிக்கட்டிலிருந்தபடி, "ஸார்" என்று கூப்பிட, அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் மேன்மாடியில் ஏதோ விசேஷம் நடந்திருக்கவேண்டுமென்று நினைத்துக் கொண்டு பெரிதும் திகிலும் மனக்குழப்பமும் அடைந்தவராய், அறைக்குள் இருந்த படிக்கட்டின் வழியாக மேலே போய்விட்டார்.

அப்போது கீழ்ப்பாகம் இரண்டாங் கட்டில் அருணாசலம் செட்டியார் மாத்திரம் இருந்தா ராதலால், அவருடைய உடம்பு கிடுகிடென்று ஆடத்தொடங்கியது. மேலே போனவர்கள் எவரும் திரும்பி வராமல் மேலேயே இருந்துவிட்டது அவருடைய மனதில் பலவிதமான சம்சயங்களை உண்டாக்கிய தாகையால், அப்போது தாம் அங்கே இருப்பதா, மேலே போவதா என்பதை நிச்சயிக்கமாட்டாமல் தவித்திருக்க, அப்போது பின்புறத்திலிருந்த ஜெவான் அங்கே வந்து, "என்ன செட்டியார், இப்போது யாரோ 'ஸார்' என்று கூப்பிட்ட மாதிரி இருந்ததே! யார் அது?" என்றான்.

அருணாசலம் செட்டியார், "எல்லாரும் மேலே போனார்கள்; எவரும் திரும்பி வரவில்லை. 'ஸார்' என்று யாரோ கூப்பிட்டது என் காதிலும் பட்டது. ஆனால் யார் கூப்பிட்டது என்பது தெரியவில்லை" என்றார்.

ஜெவான், "அப்படியானால், நாம் கீழேயே இருப்பது சரியல்ல; நான் மேலே போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான்.

அப்போது எவரோ படிக்கட்டின் வழியாக இறங்கி வந்த ஓசை கேட்டது. செட்டியாரும் ஜெவானும் ஒய்ந்து ஆவலே வடிவாக இருந்தனர். அடுத்த நிமிஷம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அங்கேவந்து செட்டியாரை நோக்கி, "திருடர்கள் மாடியின் வழியாக உள்ளே வருவார்கள் போல் இருக்கிறது. நாம் சாயங்காலம் பார்த்தபோது சம்சயத்திற்கு இடம் இல்லாதிருந்தது. இப்போது மேலண்டைப் பக்கத்து ஜன்னலைப் பார்த்தால், இரண்டு கம்பிகள் வளைக்கப்பட்டுப் போயிருக்கின்றன. கூரையில் வெளிச்சத்திற்காகப் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி காணப் படவில்லை ; நீர் இந்த இடத்தை விட்டு எங்கேயும் போக வேண்டாம். இரண்டு ஜெவான்களும் இரண்டு படிக் கட்டுகளின் பக்கத்திலும் நிற்கட்டும்" என்று கூறிவிட்டு மேலே போய்விட்டார்.

அதற்கு மேலும் ஒரு மணி காலம் கழிந்தது. திருடர் எவரும் உள்ளே வரவில்லை. மீனாட்சிசுந்தரம் பிள்ளையும், இன்ஸ்பெக்டரும் மேலும் கீழுமாய்ப் போய் வந்துகொண்டிருந்தனர். மணி பதினொன்றேகால் ஆயிற்று. அப்போது முன்பக்கத்தில் தெருவுக்கதவை யாரோ இடித்து, "செட்டியாரே, செட்டியாரே," என்று கூப்பிட்ட ஓசை கேட்டது.

மெத்தைப் படிக்கட்டண்டை நின்ற ஜெவான் உடனே வெளியில் போய்க் கதவின் இடுக்கால் பார்க்க, இரும்புக் கிராதிக்கு வெளியில் ஒருவன் நின்றுகொண்டு கூப்பிட்டது தெரிந்தது.

ஜெவான் உடனே மெதுவாய்த் தாளை விலக்கி, கதவை சிறிதளவு திறந்து வைத்துக்கொண்டு, "யாரப்பா நீ?" என்றான்.

அவன், "என்னுடைய அடையாளம் உனக்குத் தெரியவில்லையா? நான் அம்மன் கோவில் சந்து 15-வது நம்பர் வீட்டில் இருக்கும் சோமசுந்தரம்" என்றான்.

அப்போது ரஸ்தாவில் சற்று தூரத்தில் முனிசிபல் விளக்கு எரிந்துகொண் டிருந்ததாகையால் வெளியில் நின்ற மனிதனுடைய வடிவம் நன்ருகத் தெரிந்தது. அந்த ஜெவான் ஏற்கனவே சோமசுந்தரத்தைப் பார்த்திருந்தவ னுதலால், அவன் அவனை சோமசுந்தரம் என்றே நிச்சயித்துக்கொண்டு, "என்ன ஐயா விசேஷம்? உங்கள் வீட்டில் திருட்டு நடந்ததா? ஸப்-இன்ஸ்பெக்டர் அங்கே தானே இருக்கிருர்?" என்ருன்.

சோமசுந்தரம், "ஆம். இந்தக் கடிதத்தை மீனுட்சி சுந்தரம் பிள்ளையிடம் கொடுத்துவிட்டு வரும்படி அவர் என்னை அனுப்பினுர்" என்று கூறி ஒரு கடிதத்தை நீட்டினுன்.

ஜெவான், "அவரையே அழைத்துக்கொண்டு வருகிறேனே. விஷயத்தை அவரிடமே நேரில் சொல்லலாமே" என்ருன்.

சோமசுந்தரம், "எனக்கு விஷயம் இன்னதென்பது தெரியாது. இதை சீக்கிரமாய்க் கொடுத்துவிட்டு ஓடி வரும்படி ஸப்-இன்ஸ்பெக்டர் சொன்னுர். இதை நீயே கொண்டுபோய் அவரிடம் கொடுத்துவிடு" என்று கூறி, ஒரு கடிதத்தை உள்ளே எறிந்துவிட்டு, ரஸ்தாவோடு போய்விட்டான்.

ஜெவான் கடிதத்தை எடுத்துக்கொண்டு, கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு விரைவாக மேன் மாடத்திற்கு ஓடி, மீனுட்சிசுந்தரம் பிள்ளையிடம் கடிதத்தை நீட்டி, "ஸார், அந்த வீட்டிலிருந்து சோமசுந்தரம் வந்திருந்தார். ஸப்-இன்ஸ்பெக்டர் உங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வரும்படி அவனை அனுப்பினுராம்; இதை உள்ளே போட்டுவிட்டு வேகமாய்ப் போய்விட்டான்" என்ருன்.

மீனுட்சி சுந்தரம் பிள்ளையின் உடம்பும் கைகால்களும் ஆவேசத்தினுல் பதறின. அவர் கடிதத்தின் உறை

யைக் கிழித்துப் படிக்கலானார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

துப்பறியும் வெண்ணெய் வெட்டிக்கு அம்மன் கோயில் சந்து 15-வது நெம்பர் வீட்டில் வசிக்கும் சோமசுந்தரம் எழுதுவது.

என்னுடைய கூட்டத்தார் இன்று கந்தசாமி செட்டியாருடைய வீட்டில் திருட வரப் போகிறார்கள் என்பதை எப்படியோ நீங்கள் தெரிந்துகொண்டு, சாயங்காலத்திலிருந்தே எல்லாரும் மிக்க ஜபர்தஸ்துடன் காவல் இருந்து வருகிறீர்கள். அப்படி இருந்தும் செட்டியாருடைய இரும்புப் பெட்டிகள் இரண்டையும் என் கூட்டத்தார் இப்போதுதான் காலி செய்துவிட்டுப் போகிறார்கள். உங்களுடைய அபார சமார்த்தியத்திற்கு குயவனிடம் மெடல்கள் செய்துதான் உங்களுக்குப் போட வேண்டும். அதற்கு உடனே ஏற்பாடு செய்கிறேன். இனியும் வீணாய்ப் பாராக் கொடுத்து, காலிப் பெட்டிகளை அநாவசியமாய்க் காத்து, செட்டியாருடைய தூக்கத்தை ஏன் கெடுக்கிறீர்கள். நீங்கள் இனி உங்கள் ஜாகைக்குப் போய் கரியை அரைத்து தாராளமாய் முகத்தில் பூசிக் கொள்ளலாம். அதற்கு நீங்கள் பெரிதும் அருகமானவர்கள் என்பதை எவரும் மறுக்கவே முடியாது. இப்படிக்கு, **சோமசுந்தரம்.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் முகம் அப்படியே வீழ்ந்து போயிற்று. அபாரமான அவமானத்தினால் அவருடைய சர்வாங்கமும் குன்றிப் போயிற்று. அவர் வாயைத் திறந்து பேசாமல் கடிதத்தை இன்ஸ்பெக்டரிடம் கொடுக்க, அவரும் அதைப் படித்துவிட்டு, அவமானத்தினால் குன்றிப் போனவராய், மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் முகத்தைப் பார்த்தார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை கடிதத்தைக் கொணர்ந்த ஜவானை நோக்கி, "இதைக் கொடுத்தவன் உண்மையி

லேயே சோமசுந்தரமா, அல்லது, அவனைப்போல் காணப் பட்ட வேறே ஆசாமியா?'' என்றார்.

ஜெவான், ''சோமசுந்தரமேதான் வந்தார். வேறே யாருமில்லை. அவரை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்'' என்றான்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ''இன்ஸ்பெக்டர் ஸார், வாருங்கள் கந்தசாமி செட்டியாருடன் நாம் கீழே போய், இரும்புப் பெட்டிகள் இருக்கும் அறையைத் திறந்து பார்ப் போம்'' என்று கூறியபடி பின்புறப் படிக்கட்டின் வழி யாய்க் கீழே இறங்க, இன்ஸ்பெக்டரும், செட்டியாரும் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

சென்றவர்கள் இரும்புப் பெட்டிகள் இருந்த அறை யண்டை நெருங்க, கந்தசாமி செட்டியார் தமது மடியில் இருந்த திறவுகோல்களை எடுத்து பூட்டுகளைத் திறந்துவிட் டார், ஜெவானொருவன் விளக்குப் பிடித்தான். இரண்டு செட்டியார்களும், இன்ஸ்பெக்டரும், மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் உள்ளே நுழைந்து பார்க்க, இரும்புப் பெட்டி களின் கதவுகள் திறந்து கிடந்தன. இரண்டு பெட்டிகளுக் குள்ளும் இருந்த நகைகள், ரொக்கம் தஸ்தாவேஜுகள் ஆகிய எதுவும் காணப்படவில்லை. எல்லோரும் பிரமித்துப் போய்த் தமது கண்களை நம்பாமல் கற்சிலைகள்போல் நின் றனர். அவர்களுடைய உடம்புகள் தாமாகவே திடுக்கிட்டு நடுங்கின. செட்டியார்கள் இருவரும், ''ஐயோ, சொத்தெல் லாம் போய்விட்டதே!'' என்று வீறிட்டலறினர்.

கிழக்குப் பக்கத்து சுவரில் ஓர் ஆள் தாராளமாக நுழையத் தகுந்த ஒரு துவாரம் காணப்பட்டது. இன்ஸ் பெக்டர், ''அடாடா! கிழண்டைப் பக்கத்து வீட்டிற்குள் ளிருந்தல்லவா ஆள் கன்னம் வைத்துக்கொண்டு உள்ளே நுழைந்திருக்கிறான்! நாம் முட்டாள் காரியம் செய்து விட் டோமே. இந்த அறையின் கதவைப் பூட்டியது தப்பான

காரியம். இது திறந்திருந்தால், சுவரில் கன்னமிட்டபோது ஓசை நமக்கு எட்டி இருக்கும்'' என்றார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "திருடன் சாமர்த்தியமாய்த் தான் வேலை செய்திருக்கிறான். உப்பரிகையில், மேலண்டைப் பக்கமாய் வருவதுபோலக் காட்டி, நம்முடைய கவனத்தை அந்தப் பக்கம் திருப்பி விட்டுவிட்டு, கீழண்டைப் பக்கமாய்க் குடைந்துகொண்டு கீழே நுழைந்திருக்கிறான். நீங்கள் சொல்வதுபோல, நாம் ஏமாறிப் போனோம்'' என்றார்.

அதற்குள் செட்டியார்கள் இருவரும் கீழே விழுந்து புரண்டு வயிற்றிலும் வாயிலும் லபோ லபோ வென்று அடித்துக்கொண்டு ஓலமிட்டுக் கதறத் தொடங்கினர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "நாம் வெளியில் போய் பக்கத்து வீடுகளைப் பார்ப்போம்'' என்றார்.

உடனே இன்ஸ்பெக்டரும், மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் இரண்டு ஜெவான்களோடு வெளியில் சென்று கீழண்டைப் பக்கத்திலிருந்த வீட்டிற்குச் சென்றனர். அதன் வாசற்கதவு திறந்து வைக்கப்பட்டிருக்கவே, அவர்கள் உள்ளே நுழைந்து கடைசிவரையில் போய்ப் பார்க்க, அது காலியாயிருப்பதாய்த் தெரிந்தது. ஜனங்கள் எவரும் காணப்படவில்லை.

உடனே அவர்கள் அந்த வீட்டின் முன்புறக் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு, வெளியில் வந்து, செட்டியாருடைய வீட்டிற்கு மேலண்டைப் பக்கத்தில் இருந்த வீட்டை அடைந்து, கதவைத் தட்ட, உள்ளே இருந்தவர்கள் விழித்துக்கொண்டு கதவைத் திறந்துவிட்டனர்.

இன்ஸ்பெக்டர் அவர்களிடம் விஷயத்தைத் தெரிவித்து விட்டு, அந்த வீட்டிற்குள்ளும் புகுந்து ஆராய்ந்து பார்த்து, திருடர்கள் அந்த வீட்டின் வழியாய் வரவில்லை

யென்று நிச்சயப் படுத்திக்கொண்டு திரும்பிவந்து சேர்ந்தனர்.

அப்போது மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "நாம் உடனே சோமசுந்தரத்தின் வீட்டிற்குப் போய், அவன் என்ன நிலைமையி லிருக்கிறான் என்று தெரிந்துகொண்டு, அவசியமானால், அவனை உடனே கைதியாக்க வேண்டும்" என்றார்.

இன்ஸ்பெக்டர்:—நானும் இரண்டு ஜெவான்களும் அங்கே போய்ப்பார்த்து ஆகவேண்டியதைச் செய்துவிட்டு மறுபடி இங்கே வருகிறோம். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருக்கிறீர்களா? மற்ற இரண்டு ஜெவான்களும் பொழுதுவிடிகிற வரையில் இங்கேயே காவலாய் இருக்கட்டும்—என்றார்.

அதற்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளை இணங்க, இன்ஸ்பெக்டர் இரண்டு ஜெவான்களுடன் அவ்வீடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் சென்று, சுமார் ஐந்து நிமிஷ காலத்தில் சோமசுந்தரத்தின் வீட்டை யடைந்தார். அதன் வாசற்கதவு திறந்தே வைக்கப்பட்டிருந்தது. திண்ணையில் ஒரு தலைமை ஜெவானும், இரண்டு சாதாரண ஜெவான்களும் கத்தி துப்பாக்கிகளுடன் பாராக் கொடுத்து நின்றனர்.

அவர்கள் இன்ஸ்பெக்டருக்கு வழக்கப்படி போலீஸ் சலாம் வைத்தனர். உடனே இன்ஸ்பெக்டர், தலைமை ஜெவானை நோக்கி, "ஏதாவது விசேஷம் உண்டா?" என்றார்.

ஜெவான், "எதுவும் நடக்கவில்லை. நாங்கள் வந்தது முதல் இங்கேயே இருக்கிறோம்" என்றார்.

இன்ஸ்பெக்டர்:—சோமசுந்தரம் எதற்காகவேனும் கொஞ்ச நேரத்திற்குமுன் வெளியில் வந்தாரா?

ஜெவான்:—அவர் வெளியில் வரவே இல்லையே! அவர் சாயங்காலம் முதல் உள்ளேயே ஸப்-இன்ஸ்பெக்டரோடு கூடவே இருக்கிறாரே!—என்றார்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் வியப்போடு உள்ளே நுழைந்தார். கூடத்தில் ஸப்-இன்ஸ்பெக்டரும், சோமசுந்தரமும் ஒரு விசிப்பலகையில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். மற்ற சிப்பந்திகள் முற்றம் பின்புறம் முதலிய இடங்களில் பாராக் கொடுத்துக்கொண்டு நின்றனர்.

இன்ஸ்பெக்டர் வந்ததைக் கண்டவுடன் ஸப்-இன்ஸ்பெக்டரும் சோமசுந்தரமும் எழுந்து நின்றனர். இன்ஸ்பெக்டர் ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தைப் பார்க்க, பின்னவர், "சாயங்காலம் முதல் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். ஓர் ஈ, காக்கைகூட வரவில்லை. நமக்கு வந்த செய்தி பொய்யான மிரட்டலா யிருக்க வேண்டும்; அல்லது, நாம் வந்திருப்பதைப்பற்றி, திருடர்கள் வராமல் இருக்கவேண்டும்" என்றார்.

இன்ஸ்பெக்டர் :—சோமசுந்தரம் இந்த வீட்டைவிட்டு எங்கேயாவது போனாரா?

ஸப்-இன்ஸ்பெடர் :—இவர் வீட்டை விட்டு எங்கேயும் போகவே இல்லை. நாங்கள் இங்கே வந்தது முதல் இது வரையில் இவர் எங்களுடனேயே இருக்கிறார்—என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர், சோமசுந்தரத்தினிடம் ஒரு காகிதத்தையும் பௌன்டன் பேனாவையும் கொடுத்து, "நான் சொல்லுகிற வாக்கியங்களை எழுதுக" என்றார்.

சோமசுந்தரம் மறுபேச்சுப் பேசாமல் காகிதத்தையும், பேனாவையும் எடுத்துக்கொண்டு "சரி; சொல்லுங்கள்" என்றார்.

இன்ஸ்பெக்டர் சொல்லிக்கொண்டே வர, அதே போல சோமசுந்தரம் எழுதி அதை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார்.

அதைப் பெற்றுக் கொண்ட இன்ஸ்பெக்டர் விளக்கண்டை சென்று தமது கையில் இருந்ததையும், அதையு வைத்து ஒத்திட்டுப் பார்த்தார். இரண்டின் எழுத்துகளும் ஒருவருடைய எழுத்துகளாக இருக்கவே, இன்ஸ்

பெக்டர் அதைப் பார்த்து திகைத்துப் போனுர். சோம சுந்தரம் அங்கேயே இருந்ததாக ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியோர் உறுதியாய்ச் சொல்லுகையில், சோமசுந்தரம் கந்தசாமி செட்டியாருடைய வீட்டிற்கு வந்து கடிதத்தை எப்படி எழுதிக் கொடுத்திருக்க முடியும் என்னும் ஐயங் களைத் தீர்த்துக் கொள்ள மாட்டாதவராய் இன்ஸ்பெக்டர் கடிதங்கள் இரண்டையும் தமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார்.

அதே சமயத்தில் ஒரு ஜெவான் அவரிடம் வந்து நின்று, "பக்கத்து வீட்டில் உள்ள டெலிபோனில் மீனுட்சி சுந்தரம் பிள்ளை உங்களைக் கூப்பிடுகிருர்" என்ருன்.

இன்ஸ்பெக்டர் :—அதை உன்னிடம் யார் சொன்னது?

ஜெவான் :—பக்கத்து வீட்டுக்காரர்—என்ருன்.

"சரி; இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு, இன்ஸ்பெக்டர் உடனே வெளியில் சென்று அடுத்த வீட் டிற்குள் நுழைந்து டெலிபோன் கருவிகளை எடுத்து வைத் துக் கொண்டு, "யாரது? ஓகோ, மீனுட்சிசுந்தரம் பிள் ளையா! என்ன விசேஷம்?" என்ருர்.

மீனுட்சிசுந்தரம் பிள்ளை, "நீங்கள் போனபிறகு நான் விசாரித்ததில், கீழ்ண்டைப் பக்கத்து வீட்டை இன்று காலையில் சோமசுந்தரம் வாடைக்கு எடுத்துக்கொண்ட தாக வீட்டுக்காரர் சொல்லுகிருர். அங்கே அவர் இருக் கிருரா?" என்ருர்.

இன்ஸ்பெக்டர் :—அவர் இன்று சாயங்காலம் முதல் வீட்டைவிட்டு எங்கேயும் போகவில்லையாம்; ஸப்-இன்ஸ் பெக்டரும் மற்றவர்களும் உறுதியாகச் சொல்லுகிருர்கள். அப்படி இருக்க நாம் அவர்மேல் எப்படிக் குற்றம் சுமத்து வதென்பது தெரியவில்லை.

மீனுட்சிசுந்தரம் :—நீங்கள் சொல்லுவது பெரிய வேடிக் கையா யிருக்கிறதே! இங்கே வந்த ஆசாமி சோமசுந்தரந் தான் என்று ஜெவான் நிச்சயமாய்ச் சொல்லுகிருனே!

இன்ஸ்பெக்டர் :—அது மாத்திரமில்லை. நான் இப்போது இங்கே வந்தவுடன் சோமசுந்தரத்தினிடம் காகிதமும், பேனுவும் கொடுத்து, நமக்கு வந்த கடிதத்தில் உள்ள சில வாக்கியங்கள் வரும்படி ஒரு கடிதம் எழுதச் செய்தேன். இரண்டையும் வைத்து ஒத்திட்டுப் பார்த்ததில், எழுத்துகள் ஒருவருடைய எழுத்தாக இருக்கின்றன.

மீனுட்சிசுந்தரம் :—இது பெரிய கண்கட்டு வித்தையாய்த் தான் தோற்றுகிறது. எல்லாவற்றிற்கும், ஜெவான்களை இங்கே வைத்துவிட்டு நானும் அங்கே வருகிறேன்.—என்ருர்.

அவ்வளவோடு இன்ஸ்பெக்டர் டெலிபோனை வைத்துவிட்டு வெளியில் வந்து அந்த வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து சிந்தனையி லாழ்ந்திருந்தார். சுமார் பத்து நிமிஷம் அவர் அங்கேயே இருக்க, மீட்னுசிசுந்தரம் பிள்ளையும் அங்கே வந்துசேர்ந்தார்.

அவரிடம் இன்ஸ்பெக்டர் இரண்டு காகிதங்களையும் கொடுக்க, அவர் இரண்டின் எழுத்துக்களையும் ஒத்திட்டுப் பார்த்து, "இது பெரிய ஜெகஜாலப் புரட்டாய்த்தா னிருக்கிறது! இரண்டும் சோமசுந்தரத்தின் எழுத்துக்களே" என்ருர்,

இன்ஸ்பெக்டர் :—ஒரு மனிதரைப் போல் இன்னெருவர் இருப்பது சகஜமாய் நாம் எதிர்பார்க்கக் கூடியதே. அப்படி இருப்பவருடைய கை யெழுத்துகளும் எப்படி ஒரே மாதிரி இருக்கும்.

மீனுட்சிசுந்தரம் :—அதுதான் எனக்கும் விளங்கவில்லை. இது பெரிய கண்கட்டு வித்தையா யிருக்கிறதே—என்ருர்.

அவ்வாறு பேசிக்கொண்டு இருவரும் சோமசுந்தரத்தின் வீட்டிற்குள் வந்தனர். வந்தவுடன், இன்ஸ்பெக்டர் சோமசுந்தரத்தை நோக்கி, "என்ன ஐயா, நீர் உண்மையைச் சொல்லப்போகிறீரா இல்லையா?" என்ருர்.

சோமசுந்தரம் வியப்போடு, "எதைப்பற்றிய உண்மையை?" என்றார்.

இன்ஸ்பெக்டர், "இந்தக் கடிதத்தைப் படித்துப் பாரும். இதை நீர் கொஞ்சநேரத்திற்குமுன் கந்தசாமி செட்டியாருடைய வீட்டில் ஒரு ஜெவானிடம் கொடுத்து விட்டு வந்தீரே. நீரே இதைக் கொடுத்தீரா? அல்லது உம்மைப்போல் உள்ள வேறு யாரிடமாவது இதை கொடுத்தனுப்பினீரா?" என்றார்.

அதைக் கேட்ட சோமசுந்தரம் ஆச்சரியத்தோடு அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு, "ஐயோ! இதென்ன பெரிய மோசடியா யிருக்கிறதே! எனக்கு விரோதி எவனோ இந்த மாதிரி வேலை செய்திருக்கிறான். நல்லவேளை நான் தப்பினேன். இன்று சாயங்காலம் முதல் நான் இந்த வீட்டைவிட்டு வெளியில் போகவே இல்லை என்பதை ருஜூப்படுத்த, ஒரு போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர், ஆறு சிப்பந்திகள் ஆகியோர் இருக்கிறார்கள். என் தலைக்குக் கல் கொண்டுவர முயற்சிக்கும் எதிரியை நீங்கள் அவசியம் கண்டுபிடித்து தண்டனைக்குக் கொண்டுவர வேண்டும்" என்றான்.

அதைக் கேட்டு, மீனாட்சிசுந்தரம் பிள்ளையும், போலீஸார் அனைவரும் பதில் பேசமாட்டாமல் அசட்டு விழி விழித்துக்கொண்டு நின்றனர்.

---

## 2. நொண்டிராமனும் சண்டிராமனும்

பெருச்சாளிப்பட்டி என்பது ஒரு சிறிய கிராமம். அது நரியூருக்கு வடகிழக்கு மூலையில் சுமார் 15 மைல் தூரத்தில் உள்ளது. நரியூரின் வழியாகச் சென்ற ரயில் அந்த ஊர்வழியாகவும் சென்றதாகையால் அங்கு ஒரு சிறிய ரயில்வே ஸ்டேஷன் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்த ஊரில் சுமார் ஆயிரம் வீடுகள் இருந்தன. அவற்றில்

செட்டிமார்களும், கைக்கோள முதலியார்களுமே பெரும் பாலோராய் வசித்தனர். இதர ஜாதியாரும் சொற்பத் தொகையினரா யிருந்தனர். அந்த ஊரை அடுத்தாற் போல் உள்ள ஒரு குன்றின்மேல் சுப்பிரமணிய ஸ்வாமி அமைந்திருந்தது.

அந்த ஊர்க் கோவிலில் பூஜைசெய்த குருக்களுடைய வீடொன்று, தெலுங்குப் புரோகிதருடைய வீடொன்று, ஆக இரண்டு வீடுகளைத் தவிர, பிராம்மணர்களுடைய வீடு வேறு இல்லை. புரோகிதருக்கு அவருடைய தொழி லில் வருமானம் வந்துகொண் டிருந்ததானாலும், அவரு டைய மனைவி இயற்கையிலேயே சுறுசுறுப்பான சுபாவம் வாய்ந்த உழைப்பாளி யாதலால், இட்டலி, வடை, தோசை, முறுக்கு முதலிய பலகாரங்கள் செய்து விற்ப தாகிய சொந்த வியாபாரம் ஒன்றை நடத்திவந்தாள். அயலூரார் எவரேனும் சாப்பாட்டிற்கு வந்தால் அதை யும் தயாரித்துப் போட்டு வந்தாள். அந்த வீடு ஓட்டல் என்பதற்கு அறிகுறியாக விளம்பரப் பலகை இல்லையானு லும், திண்ணையில் எப்போதும் பலர் உட்கார்ந்து பலகாரம் சாப்பிடுவதால், அது ஓட்டல் என்பதை எவரும் சுலபத் தில் அநுமானித்துக்கொண்டனர்.

புரோகிதர் பகல் வேளைகளில் எப்போதும் சுற்றுப் பிரயாணத்திலேயே இருப்பாராதலால், அவருடைய மனை வியே ஏகாங்கியாக அந்த வியாபாரத்தை நடத்தினாள். அதிலிருந்து அம்மாளுக்கு தினம் சுமார் 12 அணு வசூலா கும். செலவுகள் போக, நான்கணு இலாபம் நிற்கும். உள் ளூரார் ஒவ்வொரு நாளும் அநேகமாய் எட்டணு வரையில் கடன் சொல்லிவிட்டுத் தமது காரியத்தைப் பார்த்துக் கொண்டு போய்விடுவார்கள். அம்மாதிரி போவோர் அதற் குப் பிறகு அநேகமாய் அந்த அம்மாளின் கண்ணில் படா மல் வேறு வழியாகவே போய்விடுவார்கள். மறுபடி தமக்கு சிற்றுண்டி அவசியமானால், வேறு ஆளை அனுப்பிப் பெற்

றுக்கொள்ளுவார்கள். எத்தனை பேர்கள் அம்மாதிரி ஏமாற்றிவிட்டுப் போனாலும் அம்மாளுடைய மனவுறுதி தளர்வதில்லை. ஏனென்றால், புரோகிதர் கணக்கு வழக்கின்றி அரிசி, தானியங்கள் முதலியவற்றை இலவசமாக மூட்டை கட்டிக் கொணர்ந்தபடியே இருந்தாராதலால் கடையில் வாங்க வேண்டிய அவசியமின்றி அம்மாள் அவைகளை சுலபத்தில் பலகாரங்களாய் மாற்றி விநியோகம் செய்து வந்தாள். அப்படிச் செய்ததில் கையில் புரண்டது சொற்ப தொகையேயானாலும், தன் புருஷனிடம் கேளாமல் தானே சுயார்ஜிதமாய் அதைத் தேடியது அம்மாளுடைய மனதிற்கு ஒரு பெரிய திருப்தியையும் மனத் தென்பையும் உண்டாக்கிக் கொண்டிருந்தது. ஆகவே, அந்த வியாபாரம் நிற்காமல் தொடர்ச்சியாய் நடந்துகொண்டே போயிற்று.

முன் அத்தியாயத்தில் நாம் விவரித்த நரியூர்ச் சம்பவம் நிகழ்ந்ததற்கு இரண்டாம் நாட் காலை சுமார் எட்டு மணி இருக்கலாம். ஓட்டல்கார அன்னம்மாள் அடுப்பில் இருந்த இட்டலிப் பானையின் மூடியைத் திறந்து, வெந்து போன இட்டலிகளை ஒரு தட்டில் எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்.

அப்போது, “ஓ, ஐரூட்டம்மா, ரெண்டு இட்டேலி கொண்டாம்மா” என்று ஒரு குரல் கேட்டது. அன்னம்மாள், “இதோ வறேன்; சித்தெ நாழி இரப்பா” என்று கூறியபடி, இட்டலிப் பானையின் குழிகளில் மறுபடி மாவை விட்டு மூடி வைத்துவிட்டு, பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பூவரச இலையில் இரண்டு இட்டலியையும், அதன்மேல் கொஞ்சம் கத்தரிக்காய்த் துகையிலையும் வைத்து எடுத்துக்கொண்டு வந்து, நடையில் நின்ற ஒருவனிடம் கொடுத்துவிட்டு, “என்ன கவுண்டரே, பாக்கி இன்னம் வரவில்லையே. ஐயிரு கோச்சுக்கறுரு; இன்னமே ஆருவந்து கேட்டாலும் கடன் குடுக்காதேன்னு சண்டை

போட்ருரு. கவுண்டர் யோக்கியர், ரெண்டொருநாள் பின்னெப் பின்னெ எப்பிடியும் குடுத்துடுவாருன்னு நான் சொன்னேன். அப்பிடியானு அவுருக்கு மாத்திரம் குடேன்ருரு. ஓங்க பணம் எப்ப வரும்?" என்ருள்.

கவுண்டர், "இப்ப ஓம்பதணுதானே கணக்காவுதுங்க. வள்ளிசா ஒரு ரூவா ஆவட்டும் அம்மா. வெள்ளிப் பணமாக் குடுக்கிறேன். நீங்க அதை மாத்தாமெப் பொட்டிலே வச்சுடலாம்மா. அதுவரையிலெ நச்சுப்படுத்தாதிங்க" என்ருன்.

அதைக் கேட்டவுடன், அம்மாளுடைய மனதில் ஒரு யோசனை தோன்றியது. கவுண்டருக்கு சீக்கிரம் சீக்கிரம் பலகாரம் கொடுத்து, அவருடைய கடனை ஒரு ரூபா யாக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் உள்ளே போய்ச் சேர்ந்தாள். கவுண்டர் தமக்குள் அடியில் வருமாறு நினைத்துக் கொண்டார்.

"உனக்கு என்ன அம்மா குறை. நாங்கள் ஐயருடைய காலில் விழுந்து கொடுக்கும் அரிசி சாமான்களைப் போட்டுச் செய்த இட்டலிதானே இது. இதற்காக உனக்கு நாங்கள் காசு கொடுக்க வேண்டுமா. சரியாக ஒரு ரூபாய் ஆகட்டும். அதற்குமேல், பார்த்துக்கொள்ளலாம்" என்று தமக்குத் தாமே எண்ணமிட்டவராய் அந்த இட்டலியைத் தின்று தீர்த்தபின் ஒவ்வொன்ருய் மேலும் மூன்று இட்டலிகள் வரவழைத்து, ஐந்தாறு தரம் துகையல், மிளகாய்ப்பொடி எண்ணெய் கொண்டுவரச் செய்து, தமது சிற்றுண்டிக் காரியத்தை முடித்துக்கொண்டு, அதற்குமேல் தேவையான வெற்றிலை பாக்கிற்கு, அம்மாளிடமே காலணு கடன் வாங்கலாமா என்று எண்ணமிட்டபடி திண்ணையில் உட்கார்ந்திருக்க, அப்போது ஒரு வழிப்போக்கர் அங்கே வந்து சேர்ந்தார். அவருக்கு சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கலாம். அவர் ஒரு தடியை ஊன்றிக்கொண்டு

நொண்டி நொண்டி நடந்து வந்தாராளுலும், பார்வைக்கு அவர் பெரிய மனிதர்போல் காணப்பட்டார்.

அவர் புரோகிதருடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த கவுண்டரை நோக்கி, "ஐயா, இங்கே பலகாரக்கடை இருப்பதாகச் சொன்னார்கள். அது எங்கே இருக்கிறது?" என்றார்.

கவுண்டர் :—இஞ்செதான்—என்றார்.

உடனே நொண்டி மனிதர் அந்த வீட்டில் நுழைந்து நடைக்கப்பால் இருந்த தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த ஒரு விசிப்பலகையின்மேல் உட்கார்ந்துகொண்டு, "அம்மா, இரண்டு இட்டலி கொண்டுவாருங்கள்" என்றார்.

உடனே அன்னம்மாள் இரண்டு இட்டலிகளையும் துகையல், மிளகாய்ப் பொடி முதலிய உபகரணங்களையும் வைத்து, அவைகளைக் கொணர்ந்து பலகையில் வைத்தாள். அந்த வழிப்போக்கர், "காப்பி இருந்தால் கொண்டுவாருங்கள்; தடிப்பா யிருக்கட்டும்" என்றார்.

அன்னம்மாள் அப்போதே காப்பி தயாரிப்பதற்காக அடுப்பில் ஜலத்தை வைத்துவிட்டு, கூடத்தில் நின்றபடி நொண்டியோடு பேச்சுக் கொடுக்க ஆரம்பித்து, "நீங்க இந்தூரு மனுஷா அல்லப்போலிருக்கே" என்றாள்.

நொண்டி :—என்னுடைய ஊர் நரியூர்.

அன்னம் :—இந்தூருலெ ஏதாவது சரக்குப் புடிக்க வந்தேளோ?

நொண்டி :—ஆம் அம்மா; நான் ஜவுளிக் கடைக்காரன். இந்த ஊரில் புடவைகள் நயமாய்க் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

அன்னம் :—ஓகோ! சரித்தான்! அதுக்குத்தான் இருக்கும்னு நானும் நெனெச்சேன்—என்று கூறியபடி அடுப்பண்டை போய் கஷாயம் போட்டு வடிக்கட்டிய பின், அடுப்பில் ஒரு சிறிய லோட்டாவில் காய்ந்து கொண்டி

ருந்த பாலை எடுத்து அதில் கொட்டிக் கலந்து வைத்து விட்டு, மறுபடி கூடத்திற்கு வந்து, "இன்னும் ரெண்டு இட்லி கொண்டாரட்டுமா?" என்றாள்.

நொண்டி, "போதும் அம்மா; காப்பி கொண்டுவாருங் கள்" என்றார்.

உடனே அன்னம்மாள் இரண்டு லோட்டாக்களை கொணர்ந்து வைத்தாள். ஒன்றில் காப்பி இருந்தது; இன் னொன்று ஆற்றிக் கொள்வதாகக் காலியா யிருந்தது. நொண்டி மனிதர் இரண்டு பாத்திரங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு ஆற்றத் தொடங்கினார். ஒரு பாத்தி ரத்திலிருந்து இன்னொன்றில் ஊற்ற ஊற்ற, நுரை பிர மாதமாய்க் கிளம்பத் தொடங்கியது. காப்பி சரியான நிறத்தோடிராமல், ஆற்றில் புது வெள்ளம் வரும்போது தண்ணீர் அழுக்காயும், வண்டலாயும் இருப்பதுபோல் இருந்தது. அதிலிருந்து, ஒரு விதமான பச்சிலைக் கசப்பு வேகம் குபீரென்று வீசத் தொடங்கியது.

அவர், "காப்பி புதுமாதிரியா யிருக்கிறதே! வாய்க்கு எப்படி இருக்குமோ தெரியவில்லையே!" என்று கூறியபடி அதை வாயில் விட்டுக்கொண்டு இரண்டுதரம் விழுங்கி னார். அது ஒரே கசப்பாகவும், மருந்துக் கஷாயம் போல வும் இருந்ததாகையால், அதை விழுங்குவதற்குள் அவரு டைய விழிகள் பிதுங்கிவிடும்போ லாய்விட்டன. வயிற் றில் புரட்டல் உண்டாகவே, வயிற்றிலிருந்த இட்டலி முதலிய யாவும் உடனே வெளியில் வரத்துடங்கின. அவர் வீரிட்டலறிக்கொண்டு எழுந்து வெளியில் ஓடி வாந்தி எடுத்துவிட்டு உள்ளே வந்தார்.

அதைக் கண்ட அன்னம்மாள் திடுக்கிட்டு நடுங்கி, 'என்ன, என்ன, ஏன் வாந்தி எடுக்கறக?" என்றாள்.

நொண்டி கோபத்தோடு, "என்ன அம்மா, காப்பிப் பொடிக்கு பதிலாய் அரைப்புப் பொடியைப் போட்டு விட்டமாதிரி இருக்கிறதே!" என்றார்.

அன்னம்மாள் பதறிப்போய் தகர டப்பாக்களைப் பார்க்க, உடனே உண்மை விளங்கியது. அவள் கூடத்தில் வந்து நின்று, "அடாடா! தேச்சுக்கறத்துக்கு அரைப்புப் பொடியும், உசிலம் பொடியும் கலந்து வச்சிருந்தேன். டப்பா ஒரே மாதிரி இருந்தத்துலெ, வித்தியாசந் தெரியாமெப்போச்சு. கோச்சுக்காதிங்கொ" என்று கூறினாள்.

நொண்டி விரக்தியோடு, "இன்றைக்கு நமக்கு காப்பி பிராப்தமில்லை" என்று கூறியபடி, இட்டலிக்குச் சேர வேண்டிய காசை எடுத்துக் கொடுத்தார்.

அன்னம்மாள், "நீங்கள் போவாண்டாம். சித்தெ நாழி இருங்கொ. இன்னொரு தபா பாலு வரவழச்சு காப்பி போட்டுத் தாரேன்" என்று கூறியபடி காலணாவையும், ஒரு லோட்டாவையும் எடுத்துக்கொண்டு வெளியில் ஓடி, "கவுண்டரே! ரொம்ப அவசரம். ஒரு ஒத்தாசை பண்ணனும். நம்ப வீராயி வீட்டுலெ பாலு இருக்கும். ஓண்ட்ரெக் காசு குடுத்தா அரைச்சேரு குடுப்பா. அதெ வாங்கிண்டு வரணும். மனுஷா காத்திண்டிருக்கா" என்றாள். உடனே கவுண்டர் ஆவேசத்தோடு எழுந்து விரைவாகச் சென்று ஐந்து நிமிஷ காலத்தில் திரும்பி வந்தார். மறுபடி காப்பி போடப்பட்டு நொண்டி மனிதருக்குக் கொடுக்கப் பட்டது. அப்போது சரியான பொடியே உபயோகிக்கப் பட்ட தாகையால், காப்பி நன்றாயிருந்தது. நொண்டி மனிதர் அதை வாங்கிப் பருகியபின், அம்மாளுக்குச் சேரவேண்டிய சில்லரையைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தார்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த கவுண்டரிடம் நொண்டி மனிதர் குருக்களுடைய விலாசத்தை விசாரித்துக் கொண்டு அடுத்த தெருவிலிருந்த அவருடைய வீட்டையடைந்தார். அப்போது குருக்கள் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். நொண்டி மனிதரை பார்த்ததும் குருக்கள் புன்னகை ததும்பிய முகத்தோடு, "வாருங்

கள்; இப்படித் திண்ணையில் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று எதிர்த்த திண்ணையைக் காட்டினார்.

உடனே நொண்டி மனிதர் குருக்களுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு எதிர்த்த பக்கத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்.

குருக்கள் :—கோவிலில் அர்ச்சனை செய்யவேண்டுமா, இல்லாவிட்டால் என்னால் வேறே ஏதாவது காரியம் ஆக வேண்டுமா? உங்களுடைய ஊர் எது?

நொண்டி :—என்னுடைய ஊர் நரியூர்; கோவிலில் அர்ச்சனை செய்து வைக்கவேண்டும்.

குருக்கள் :—அதற்கென்ன செய்து விட்டால் போகிறது. இன்னம் கொஞ்ச நாழிகையில் நான் மலைக்குப் போவேன். நீங்களும் என்னோடுகூட வந்தால், உங்களுக்கு சுவாமி தரிசனம் செய்து வைக்கிறேன். உங்களுடைய முகம் பழக்கமான முகமாய்த் தெரிகிறது. எங்கேயோ இதற்குமுன் உங்களைப் பார்த்திருக்கிற மாதிரி என் மனதில் எண்ணம் உண்டாகிறது.

நொண்டி :—நான் இந்த ஊருக்கு இதற்குமுன் வந்ததே இல்லையே! ஒருவேளை நீங்கள் நரியூருக்கு எப்போதாவது வந்திருப்பீர்களோ!

குருக்கள் :—நான் நரியூருக்கு வந்ததில்லை. ஆம், இப்போது நன்றாய் நினைவுண்டாகிறது. சுமார் பதினைந்து வருஷங்களுக்குமுன் இந்த ஊரில் பழனியப்பர் என்று ஒருவர் இருந்தார். அவருடைய முகச்சாயல் அப்படியே உங்களுடைய முகத்தில் தெரிகிறது. சந்தேகமே இல்லை. உங்களைப் பார்ப்பது அவரைப் பார்ப்பது போலவே இருக்கிறது.

நொண்டி :—அவர் யார் என்பதே எனக்குத் தெரியவில்லையே. என் பெயர் ராமசாமி.

குருக்கள் :—அவர் இந்த ஊரில் ஒரு மிராசுதார். சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் அவர் இந்த ஊரில் சுபீக்ஷ

மாய் இருந்துகொண் டிருந்தார். ஒரு நாள் ஏதோ காரியமாய் நரியூருக்குப் போய்த் திரும்பி வருவதாகச் சொல்லி விட்டுப் போனவர் அதற்குப் பிறகு இந்த ஊருக்கு வரவே இல்லை. அவருடைய பிள்ளை அவரைத் தேடிக்கொண்டு போய் எங்கெங்கோ அலைந்து பார்த்தான்; போலீஸாரிடம் புகார் செய்து பார்த்தான். எதுவும் பிரயோசனப் படவில்லை. அதற்கு சில தினங்களுக்குப் பிறகு, அவருடைய சமுசாரமும் திடீரென்று காணமல் போய்விட்டாள். அந்த அம்மாளைக் கண்டுபிடிக்கவும் மகன் தன்னுலான முயற்சிகளையெல்லாம் செய்தான். எல்லாம் வீண் முயற்சியாய் முடிந்தது.

ராமசாமி :—பையன் இப்போதும் இந்த ஊரில்தான் இருக்கிருனே?

குருக்கள் :—இதுவரையில் இந்த ஊரில்தான் இருந்தான்; சமீபத்தில்தான் அவன் தன்னுடைய வீடு நிலம் முதலியவைகளை விற்றுவிட்டு, இரண்டு தினங்களுக்குமுன் தான் நரியூருக்கோ எங்கேயோ போவதாய்ச் சொல்லி விட்டுப் போனுன்.

ராமசாமி ;—நீங்கள் சொல்லும் வரலாறு நிரம்பவும் துன்பகரமானதா யிருக்கிறது. பழனியப்பரும் அவருடைய சம்சாரமும் திடீரென்று மறையவேண்டிய காரணமென்ன வென்பது யாருக்கும் தெரியவே இல்லையா?

குருக்கள் :—தெரியவே இல்லை. பழனியப்பர் இறந்து போய்விட்டதாக மாத்திரம் ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். அவருடைய பிள்ளை பாலனிடம் நான் பல தடவைகளில் அதைப்பற்றிக் கேட்டேன். அவன் தனக்கு எதுவும் தெரியாதென்று சொல்லிவிட்டான். சரி; நேரமாகிறது. எனக்கு வேறொரு காரிய மிருக்கிறது. அதை கவனித்துவிட்டு, மலைக்குப் போகவேண்டும். நீங்கள் வந்து சந்நிதியில் என்னைப் பாருங்கள். நான் சுவாமி தரி

சனம் செய்து வைக்கிறேன்—என்று கூறிவிட்டு எழுந்தார்.

ராமசாமி குருக்களுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

சென்றவர் ஊருக்குள் நுழைந்து ஒரு தெருவை யடைந்து பைத்தியக்காரர்போல் அங்குமிங்கும் நின்று வீடுகளின் அடையாளங்களை கவனிப்பவர்போல் பார்த்து, ஒரு வீட்டின் முன்னால் போய் நின்று சுமார் கால் நாழிகை வரையில் அதன் உள் பக்கத்தை கவனித்துக்கொண்டு நின்றார். உள்புறத்தில் அங்கு மிங்கும் போன மனிதர்கள் அவருடைய கண்களில் படப்பட, அவருடைய முகம் விகாரமாகவும் விசனகரமாகவும் மாறியது. அவர் அதற்கு மேல் தாம் அவ்விடத்தில் நிற்பது தவறென்று நினைத்து அவ்விடத்தை விட்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார்.

* * *

ராமசாமி பிள்ளை மறுநாட் காலை ஒன்பது மணி சமயத்தில் நரியூர் செட்டித்தெருவில் காணப்பட்டார். அவர் ஒரு தடியை ஊன்றிக் கொண்டு நொண்டி நொண்டி நடந்து சென்று 99ம் நம்பர் வீட்டு வாசலை கவனித்தார். வழக்கப்படி அதன் வாசற்கதவும், ஜன்னல் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. அவர் வாசற்கதவண்டை போய் நின்று அதைத் தட்டினார். சுமார் பத்து நிமிஷகாலம் வரையில் கதவு திறக்கப்படவில்லை.

கதவு வெளிப்புறத்தில் பூட்டப்படாதிருந்த தாகையால், மனிதர் எவரேனும் அவசியம் உள்ளே இருக்க வேண்டு மென்றும், அவர் ஒரு வேளை தூங்கிக்கொண்டிருக்கலா மென்றும் கருதி, நொண்டி மனிதர் விடா முயற்சியோடு மேலும் ஐந்தாறு தடவை கதவைத் தட்டி விட்டு திண்ணையில் உட்கார்ந்துகொண்டார்.

சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. ராமநாதம் செட்டியார் வந்து நின்றார். அவருடைய நெற்றி முதலிய இடங்களில் ஏதோ மருந்துப் பற்று பூசப்பட்டிருந்தது. அவரைப் பார்த்த ராமசாமி கிலேசத்தோடு, "அடாடா! உங்களுக்கு உடம்பு சரியா யில்லைபோல் இருக்கிறது. அநாவசியமாக நான் உங்களுக்குப் பிரயாசை கொடுத்து விட்டேன்." என்றார்

ராமநாதம் :—அதைப்பற்றிப் பரவாயில்லை. நீங்கள் யார் தெரியவில்லையே?

ராமசாமி :—ஜவுளி வியாபாரி சுந்தரமூர்த்தி முதலியார் இங்கே இருப்பதாகச் சொன்னார்கள். அவரைப் பார்க்கவேண்டும்.

ராமநாதம் :—இங்கே முதலியார் யாரும் இல்லையே!

ராமசாமி :—அப்படியா! உங்களுடைய பெயர் என்ன?

ராமநாதம் :—என் பெயர் ராமநாதம் செட்டியார்?

ராமசாமி :—இந்த வீட்டின் சொந்தக்காரர் நீங்கள் தானே?

ராமநாதம் :—ஆம்.

ராமசாமி :—நீங்கள் எப்போது இந்த வீட்டை வாங்கினீர்கள்? எப்போது இங்கே குடி வந்தீர்கள்?

ராமநாதம் .—நான் இதை வாங்கி பத்து வருஷகாலமாகிறது; அப்போதே குடி வந்துவிட்டேன்.

ராமசாமி :—உங்களுக்கு இதை விற்றவர் இப்போது இந்த ஊரில் இருக்கிறாரோ?

ராமநாதம் :—நான் இதைக் கதிரேசன் செட்டியார் என்பவரிடம் விலைக்கு வாங்கினேன். அவர் ரெங்கூனுக்குப் போய்விட்டார்—என்றார்.

அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்த காலத்தில் இன்னொரு மனிதர் வந்து திண்ணையின் அருகிற் நின்று கொண்டு அவர்களுடைய சம்பாஷணையை கவனித்தார்.

ராமசாமி :—அப்படியானால், நான் ஜவுளிக் கடைகளில் விசாரித்துத்தான் சுந்தரமூர்த்தி முதலியாரைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ராமநாதம் : – இந்த ஊரில் முதலியார் எவரும் ஜவுளிக் கடை வைக்கவே இல்லை. இது நிச்சயமான விஷயம். உங்களுக்கு யாரோ தப்பான செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள்—என்றார்.

அதுவரையில் திண்ணையில் உட்கார்ந்திருந்த மூன்றாவது மனிதர் ராமநாதம் செட்டியாரைப்பார்த்து, "என்ன செட்டியாரே, ஏன் நெற்றியில் பற்றுப் போட்டிருக்கிறீர்கள்?"—என்றார்.

அதைக் கேட்ட ராமநாதம் செட்டியார் அந்த மனிதரை வியப்போடு உற்றுப் பார்த்து, "யாரப்பா நீ?" என்றார்.

அந்த மனிதர், "என்னை நடேசன் என்று சொல்லுவார்கள். என்னுடைய சொந்த ஊர் வேதாரணியம். நான் மாணிக்கம் செட்டியாரைப் பார்க்கவேண்டும். நீங்கள்தானே மாணிக்கம் செட்டியார்?" என்றான்.

ராமநாதம் :—நான் மாணிக்கம் செட்டியார் என்று உனக்கு யார் சொன்னது? என் பெயர் ராமநாதம் செட்டியார்.

நடேசன் :—ஓகோ! அப்படியா! அப்படியானால், மாணிக்கம் செட்டியார் மேலே இருக்கிறாரா, கீழே இருக்கிறாரா?—என்று கேட்டபடி வீட்டிற்குள் நுழைய முயன்றான்.

ராமநாதம் செட்டியார், அவன் உள்ளே போகாதபடி குறுக்கில் நின்று, "யாரப்பா நீ! உனக்குக் கொஞ்சங்கூட மரியாதை தெரியவில்லையே! மாணிக்கம் செட்டியார் இல்லை என்று நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீ தட தட வென்று உள்ளே நுழைகிறாயே!" என்றார்

நடேசன் :—இந்த வீட்டின் சொந்தக்காரரான மாணிக்கம் செட்டியாரை நான் பார்க்க வேண்டும். அதற்காகப் போகிறேன். நீங்கள் மாணிக்கம் செட்டியார் அல்லவென்ருல், நான் உள்ளேபோய்த்தானே பாக்க வேண்டும்.

ராமநாதம் :—நான்தான் இந்த வீட்டின் சொந்தக்காரன் ; என்னைத் தவிர வேறே யாரும் இங்கே இல்லை.

நடேசன் —நீங்கள்சொல்லுவது நிஜமா பொய்யா என்பதை நான் எப்படி நிச்சயிக்கிறது. கதவுகளை யெல்லாம் ஏன் இப்படி மூடி வைத்திருக்கிறீர்கள் ?

ராமநாதம் :—அதைக் கேட்பதற்கு நீ யார்? என் வீட்டை நான் எப்படி வேண்டுமானுலும் வைத்திருப்பேன்,

நடேசன :—ஏன் இவ்வளவு ஆத்திரமாகப் பேசுகிறீர்கள் ? கதவுகளை யெல்லாம் மூடி வைத்திருந்தால், உள்ளே புதுக்காற்று வராது ; உள்ளே இருக்கும் விஷக்காற்று வெளியில் போகாது. அதன் பலனை நீங்கள் அனுபவிப்பதை உங்கள் நெற்றிப்பற்றே காட்டுகிறதே! கதவுகளை ஏன் மூடி வைக்கவேண்டும்; மண்டை இடியினுல் ஏன் இப்படி அவஸ்தைப்பட வேண்டும். நமக்குத் தெரியாததைப் பிறர் சொல்லிக் கொடுத்தால் அதைப் பற்றி சந்தோஷமடையாமல் கோவித்துக்கொள்வது சரியல்லவே.

ராமநாதம் :—உன்னுடைய புத்திமதியை நான் கேட்கும்போது நீ சொல்லலாம். நீ இங்கே இருக்க வேண்டாம் ; வீட்டைவிட்டுக் கீழே இறங்கிப் போ.

நடேசன் :—நீர் ராமநாதம் செட்டியாரா யிருந்தாலும் சரி ; மாணிக்கம் செட்டியாரா யிருந்தாலும் சரி; அல்லது, இரண்டுமல்லாமல், வேறே யாராயிருந்தாலும் சரி, நான் உம்மிடம் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டும். பேசுவதற்குமுன் நான் போகப் போகிறதில்லை.

ராமநாதம் —என்னோடு பேசவேண்டுமானால், அதற்கு மாணிக்கம் செட்டியாரைத் தேடிக்கொண்டு உள்ளே ஏன் போகவேண்டும். சொல்ல வேண்டியதை இங்கேயே சொல்லலாம்—என்றார்.

அதுவரையில் ராமசாமி போகாமல் அங்கேயேநின்றிருந்ததால், அவர்களுடைய சம்பாஷணையை அவர் சுவாரஸ்யமாய் கவனித்துக்கொண் டிருந்தார்.

நடேசன் .—சரி ; நான் உம்மிடம் தனியாக சில விஷயங்கள் கேட்க நினைத்தேன். உமக்கு அது சம்மதமில்லாவிட்டால் இங்கேயே கேட்கிறேன். இதோ நிற்கிறவரும் சாட்சியா யிருக்கட்டும். இவர் உம்முடைய நண்பரா யிருந்தாலும் இருக்கலாம். அதைப்பற்றி அக்கரை யில்லை. நான் அதிகமாய் உம்மோடு பேச விரும்பவில்லை. மூன்றே கேள்விகள் தான் கேட்கப் போகிறேன். கேட்கலாமல்லவா?

ராமநாதம் :—என்னப்பா பயமுறுத்துகிறாயே! என்ன கேட்கப் போகிறாய், கேள்.

நடேசன்:—வேறொன்றுமில்லை. நீர் உம்முடைய முகத்தில் தாடியை ஒட்ட வைத்துக்கொண் டிருக்கிறீரே! எப்போது முதல் இதை ஒட்ட வைத்துக் கொண்டீர்? இதை எங்கே வாங்கினீர்? இது இரவலா, விலைக்கு வாங்கப்பட்டதா? இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்வதே போதுமானது—என்றான்.

அதைக் கேட்ட ராமநாதம் செட்டியாருடைய கண்கள் கோவைப்பழம்போல் சிவந்துபோயின. அவர் நடேசனைப் பார்த்து உருட்டி விழித்து, "உனக்குப் பைத்தியம் ஏதாவது உண்டா? யாரிடத்தில் நீ இப்படிப் போக்கிரித்தனமாய்ப் பேசுகிறாய்! போடா வெளியில். இங்கே நின்றால், மரியாதை கெட்டுப்போகும்" என்றார்.

அதைக் கேட்ட ராமசாமி திகைத்துப் போனார். ராமநாதம் செட்டியாருடைய முகத்தில் இருந்தது உண்மையில்

பொய்த் தாடியாக இருக்குமோ என்ற சம்சயம் தோன்ற லாயிற்று. அவருடைய முகத்தில் தாடி இல்லாதிருந்தால், அந்தமுகம் யாருடையதைப்போலிருக்கும் என்றுராமசாமி தம் மனதில் பாவித்தவராய், அவருடையமுகத்தைஉற்றுப் பார்த்தார். அந்த முகத்தின் மேல்பாகம் சுந்தரமூர்த்தி முதலியாருடைய முகத்தின் மேல்பாகம் போலவே இருந்தது. ஆகையால் அவர் ராமநாதம் செட்டியாரைப் பார்த்து, "நான்கூட இதுவரையில் ஏமாறிப்போனேன். இவர் சொன்ன பிறகு, இந்த தாடி பொய்த்தாடி என்ற எண்ணமே என் மனதிலும் உண்டாகிறது. இது நிஜமான தாடிதான் என்று நீர் மெய்ப்பித்துக் காட்டுவீரா?" என்றார்.

ராமநாதம் செட்டியார் அவர்கள் இருவரையும் மாறி மாறி முறைத்துப் பார்த்து, "நீங்கள் இருவரும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி ஓடி வந்தவர்களா என்ன? தாடி வைத்துக்கொண் டிருப்பவர் எவரேனும் உங்களுடைய திருஷ்டியில் பட்டால், அவர் தம்முடைய தாடி நிஜமான தென்று மெய்ப்பிக்க வேண்டும் போல் இருக்கிறதே! போங்கள்; எனக்கு உள்ளே வேலை இருக்கிறது. நான் போகவேண்டும்" என்று கூறியபடி தமது உடம்பை மூடிக்கொண்டிருந்த சவுக்கத்தை எடுத் தமது உடம்பில் உண்டான வியர்வையைத் துடைத்துக் கொள்ள முயன்றார்.

அவ்வாறு அவர் தமது உடம்பைத் திறந்தபோது அவருடைய இடது கையின் முண்டாவில் ஒரு வடு காணப் பட்டது. அது சுமார் ஒன்றரை அங்குல நீளம் தடிப்பா யிருந்தது. அது ஆறிப்போன வெட்டுக்காயம் என்பது நன்றாகத் தெரிந்தது.

அதைக் கண்ட ராமசாமி ஆவேசம் கொண்டவர் போல் மாறி, "அடேடே! நீயா! இந்த மனிதர் சரியாகத்தான் சொன்னார். என்னடா சுந்தரமூர்த்தி! நீ

எப்போது முதல் ராமநாதம் செட்டியாக மாறினய்? பதி னைந்து வருஷங்களுக்கு முன் என்னை அழித்த நீ இன்னம் யார் குடியைக் கெடுக்க இந்த மாதிரி வேஷம் போட்டுக் கொண்டிருக்கிருய்! நீ இப்படி வேஷம் போட்டுக்கொண் டிருந்தால் உன்னை விட்டுவிடுவேனென்று நினைத்தாயா?" என்று கூறியபடி அருகில் நெருங்கி வந்தார்.

அப்போது நடேசன் சிரித்துக்கொண்டே, "ஓகோ, செட்டியார் உடம்பைத் திறந்தவுடன் முதலியாராக மாறி ஞரோ! இன்னம் தாடியை எடுத்தால் யாராக மாறு வாரோ தெரியவில்லையே!" என்ருன்.

அதற்குள், தெருவில் போய்க்கொண்டிருந்த மனிதர் கள் வந்து நின்று கும்பல் கூட ஆரம்பித்தனர். அவ்வாறு சுமார் பத்துப் பேர்கள் வரையில் சேர்ந்து, அங்கே நிகழ்ந்த விபரீத சம்பாஷணையை வியப்போடு கவனித்துக் கொண்டிருந்து, ராமநாதம் செட்டியாரைப் புரளி செய்யத் தொடங்கவே, அவர் சரேலென்று உள்ளே நகர்ந்து கதவை மூடித் தாளிட்டுக்கொண்டார்.

அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரிய மடைந்தனர். ராமசாமி உடனே கதவண்டை சென்று ஓங்கிக் கதவைத் தட்டி, "அடே அயோக்கிய நாயே! மரியாதையாகக் கத வைத் திறக்கப்போகிருயா! இல்லாவிட்டால் போலீஸ் காரனைக் கூப்பிடட்டுமா?" என்று கூறியபடி கதவை மேன்மேலும் தடதடவென்று தட்டத் தொடங்கினுர். நடேசனும் கதவைத் தட்டினுன். ஆனல் கதவு திறக்கப் படவில்லை.

தெருவில் சென்ற மனிதர்கள் மேன்மேலும் வந்து சேர்ந்துகொண்டே இருந்தனர். அப்போது ஏதோ காரிய மாய்த் தெருவோடு போன ஒரு போலீஸ் ஜெவானும் அங்கே வந்து சேர்ந்தான். அவன் நடேசனையும், ராம சாமியையும் பார்த்து, "என்ன இது? ஏன் இங்கே இப் படி கலாட்டா செய்கிறீர்கள்?" என்று கூறி அதட்ட,

நடேசன், "இந்த வீட்டிற்குள் ஒரு வேஷக்காரன் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவன் இந்த மனிதரை ஏமாற்றி விட்டானும். அவன் உண்மையில் முதலியார்; இங்கே வந்து செட்டியார் என்று பெயர் வைத்துக்கொண்டு மறைந்துகொண்டிருக்கிறான்" என்றான்.

ராமசாமி உடனே அதை ஆமோதித்தார். உடனே ஜெவான் கதவண்டை சென்று, "ஐயா முதலியாரே, கதவைத் திற" என்று ஓங்கிக் கூச்சலிட்டு கதவை பலமாய்த் தட்டத் துடங்கினான். அங்கு வந்து நின்ற ஜனங்களும், முதலியாரே என்றும், செட்டியாரே என்றும் பலவாறாய்க் கூச்சலிட்டுக் கதவைத் தட்ட வாரம்பித்தனர். எதற்கும் கதவு திறக்கப்படவில்லை. கதவை பலமாய்த் திறந்து கொண்டு போவதே சரியான காரியமென்று ஜனங்கள் கூற, ஜெவான் சில கடப்பாரைகளை எடுத்து வரும்படி ஜனங்களிடம் சொல்ல, உடனே ஐந்தாறு கடப்பாரைகள் வந்து சேர்ந்தன. சிலர் கதவை கடப்பாரையால் நெம்ப, கீல் முளையை விட்டு விலகிவிடவே, கதவு உடனே திறந்து கொண்டது. ஜெவானும் நடேசனும் விரைவாக முன்னால் செல்ல, மற்ற ஜனங்களும் தடதட வென்று உள்ளே புகுந்துவிட்டனர்.

எல்லோரும் கீழ்ப்பாகத்தின் கடைசிவரையில் போய்ப் பார்த்தனர். அதன் பின் பக்கத்தில் ஒரு சிறிய முற்றமும், அதில் ஒரு கிணறும் காணப்பட்டன. முற்றத்தின் மேல் பாகம் இரும்புக் கம்பிகளால் மூடப்பட் டிருந்தது. ஆகவே, அந்த வீட்டின் பின்புறத்தால் மனிதர் வெளியில் போவதற்கு மார்க்கமில்லை யென்பது நிச்சயப்பட்டது.

உடனே எல்லோரும் மேலே ஏறி மேன்மாடத்தைப் பார்த்தனர். அங்கு ஒரு ஹாலில் ஏராளமான இரும்புப் பெட்டிகள் காணப்பட்டன. ஆனால் எல்லாம் வெற்றுப் பெட்டிகளாகவே இருந்தன. ஒரு பக்கத்தில் மேஜை நாற்காலியும், டெலிபோன் இயந்திரமும் இருந்தன.

போலீஸ் ஜெவான் டெலிபோன் இயந்திரத்தை எடுத்து வைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனிலிருந்த டெலிபோனோடு அதை சம்பந்தப் படுத்தச் செய்து அங்கிருந்த ஸப்-இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைத் தெரிவிக்க, அவர் பத்து நிமிஷத்தில் வருவதாக மறுமொழி கூறினர்.

அதன் பிறகு ஜெவானும், நடேசனும், மற்றவரும் அந்த வீட்டில் ஓர் இரண்டு இடுக்கையும் விடாமல் தேடிப் பார்த்துவிட்டனராயினும், தாடிக்காரர் எங்கும் காணப்படவில்லை. முன்புறத்திலிருந்த வாசற்படியாலன்றி அவர் அந்த வீட்டிலிருந்து வெளியில் போக வேறு வழியே இல்லையாகையால், எல்லோரும் அபாரமான ஆச்சரியமடைந்து திகைத்தனர்.

அப்போது ஜெவான் ஜனங்கள் எல்லோரையும் வெளிப்படுத்த முயன்ற காலத்தில் ராமசாமி ஜனக்கும்பலில் காணப்படவில்லை. நடேசன் மாத்திரம் கிணறிருந்த முற்றத்தின் மேலே காணப்பட்ட இரும்புக் கம்பியைத் தூக்கித் தூக்கிப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அப்போது ஸப்-இன்ஸ்பெக்டர் அங்கே வந்து சேர்ந்தார். அவரிடம் போலீஸ்காரன் தகவல்களைத் தெரிவிக்க, அவர் நிரம்பவும் வியப்படைந்தவராய், "இந்த விஷயத்தில் நாம் என்ன செய்வதென்பது தெரியவில்லையே. வாதி ராமசாமியும் மறைந்துவிட்டார். எதிரி ராமநாதம் செட்டியாரும் எங்கேயோ போய்விட்டார். நாம் யாருக்காக இந்த ஆராய்ச்சியை நடத்துகிறோம்" என்று கூறியபடி வீடு முழுவதையும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டு கிணற்றண்டை சென்றார்.

சென்றவர், அங்கு நின்று கிணற்றிற்குள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த நடேசனை நோக்கி, "ஏனப்பா, நீ இங்கே என்ன பார்க்கிறாய்? பின் பக்கத்தில் இந்த வீட்டிற்குள் வர ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கிறாயா?" என்றார்.

நடேசன் நிரம்பவும் பணிவோடு பேசத்துடங்கி, “இல்லை எசமானே. இந்த தாடிக்காரர் எந்த வழியாக வெளியில் போயிருப்பார் என்பதை அறியமாட்டாமல் இவர்கள் எல்லோரும் விழிக்கின்றனர். நான் அதைக் கண்டுபிடித்துச் சொல்லி போலீஸாருக்கு உதவி செய்யலாமென்று நினைக்கிறேன்” என்றான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—திருடர்களும், கேடிக்களும் போலீஸாருக்கு எவ்வளவு தூரம் உதவி செய்கிறார்கள் என்பது தெரிந்த விஷயந்தானே.

நடேசன்:—(விநயமாகப் புன்னகை செய்தபடி) போலீஸாருக்கு சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு, கோர் கிடைப்பது ஆகிய எல்லாம் திருடர்கள், கேடிக்கள் முதலியோருடைய தயவினால்தானே. அதை எசமான் மறுக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—சரி; போதும் உன் அதிகப் பிரசங்கம். நீ முன்னால் வெளியில் போ.

நடேசன்:—தாடிக்காரரைக் கண்டு பிடிக்காமலா போகிறது?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவன் இங்கே இருந்தா லல்லவா கண்டுபிடிக்கலாம். அவன்தான் தப்பி ஓடிவிட்டானே!

நடேசன்:—எந்த வழியாகத் தப்பி ஓடி யிருப்பார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—முன் வாசல் வழியாகத்தான் போயிருப்பான். அவன் கதவு மூலையில் ஒளிந்து கொண்டிருந்திருப்பான்; நீங்கள் உள்ளே தேடிக்கொண்டு வந்த காலத்தில், அவன் முன்பக்கத்தால் சுலபமாய்ப் போயிருப்பான்.

நடேசன்:—அது சுத்த தப்பான யூகம்.

சப்-இன்ஸ்பெக்டர்:—எதைக் கொண்டு நீ அப்படிச் சொல்லுகிறாய்?

நடேசன் :—இங்கே தண்ணீர்க் குழா யொன்றும், இன்னொரு துண்டுக் குழா யொன்றும் இருப்பதைக் கொண்டு சொல்லுகிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—(வியப்போடு அவனைப் பார்த்து) இந்த இரண்டு குழாய்களுக்குக் குள்ளும் தாடிக்காரன் புகுந்து கொண் டிருக்கிறானா?

நடேசன் :—ஆம், இவைகளுக்குள்ளேதான் இருக்க வேண்டும். இங்கே கிணறு தண்ணீர்க்குழாய் ஆகிய இரண்டு இருக்கின்றன. அவை களுக்குத் துணையாக இந்தத் துண்டுக்குழாய் ஒன்றும் இங்கே சார்த்தப்பட் டிருக்கிறது. இந்தத் துண்டுக் குழாயின் ஒரு முனையை இந்தத் தண்ணீர்க் குழாயில் மாட்டினால், இதன் வழியாகத் தண்ணீர் மறு முனைக்குப் போகும். மறு முனை எங்கே போய் நிற்கிறதென்று பாருங்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நீதான் பார்—என்றார்.

உடனே நடேசன் அந்தத் துண்டுக் குழாயை எடுத்து அதன் ஒரு முனையைத் தண்ணீர்க் குழாயின் வாயில் மாட்டி வைத்துவிட்டு, அதன் இன்னொரு நுனியைக் கிணற்றுப் பக்கம் திருப்பினான். கிணற்றின் கைப்பிடிச் சுவரில் காணப்பட்ட ஒரு துவாரத்தில், குழாயின் மறு நுனி போய்ப் பொருந்தி நின்றது. கைப்பிடிச் சுவரின் மற்ற எந்தப் பாகத்தையும் அந்தத் துண்டுக்குழாய் எட்டவில்லை. துவாரமிருந்த இடத்தில்தான் குழாய் கைப் பிடிச் சுவரில் முட்டியது. அந்தத் துளை தரையிலிருந்து ஒரு சாண் உயரத்தில் கைப்பிடிச் சுவரில் இருந்தது.

நடேசன் :—இப்போது எசமானுக்கு விஷயம் விளங்குகிறதா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—கிணற்றுத் தண்ணீர் உப்பாயிருக்கலாம். அதற்காக, இந்தக் குழாய்த் தண்ணீரைக் கிணற்றிற்குக் கொண்டுபோவதற்காக இந்தத் துண்டுக் குழாயும் துவாரமும் உத்தேசிக்கப்பட் டிருக்கலாம்.

நடேசன்:—நல்ல தண்ணீரை உப்புத் தண்ணீரோடு கலந்து, மிகவும் பாடுபட்டு கிணற்றிலிருந்து தண்ணீரைச் சேந்தி, அதை உபயோகிப்பதை விட, குழாயின் நல்ல தண்ணீரை பிரயாசை இல்லாமல் நேராகவே எடுத்து உபயோகிக்கலாமே? இது உண்மையில் கிணரு யிருக்காது. இது ஆழமாய்க் கட்டப்பட்ட ஒரு தொட்டியா யிருக்கவேண்டும். இதற்குள் தண்ணீர் கொஞ்சமா யிருக்கலாம். ஆள் இதற்குள் போய் மறைந்துகொண் டிருக்கலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஜலத்திற்குள் ஆள் எவ்வளவு நேரம் ஒளிந்திருக்கலாம். நாம் இவ்வளவு நேரமாய்ப் பார்த்துக்கொண் டிருக்கிறோம். அந்த மனிதன் தலையை வெளியில் நீட்டவில்லையே! ஒருவேளை அவன் ஜலஸ்தம்பனம் கற்றவனு யிருப்பானே!

நடேசன்:—அப்படியும் இருக்கலாம். எனக்குக்கூட அந்த வித்தை கொஞ்சம் தெரியும். நான் கீழே இறங்கிப் பார்த்துவிட்டு வருகிறேன். ஒருவேளை நான் நீண்டநேரம் திரும்பி வராதிருந்தால், நீங்கள் ஆள்களை விட்டு என் உடம்பைத் தேடி எடுத்து தகனம் செய்துவிடுங்கள்— என்று கூறியபடி சரேலென்று கைப்பிடிச் சுவரின் மேல் தாவி, பக்கத்தில் இருந்த மாடங்களில் கால்களை வைத்துக் கொண்டு கீழே இறங்கினான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—என்ன, நீ சுத்தப் பைத்தியக்காரனு யிருக்கிருய்! மனிதன் தண்ணீர்க்குள் எப்படி ஒளிந்திருப்பான். உன்னால், எங்கள் வேலை கெடுகிறது— என்றார்.

அவர் கூறியதைக் காதில் வாங்காதவன் போல் விரைவாகக் கீழே இறங்கிய நடேசன் ஒரே நிமிஷத்தில் தண்ணீரண்டை போய் அதற்குள் இறங்கி நின்றான். தண்ணீர் அவனுடைய இடுப்பின் அளவே இருந்ததாகையால், அவன் அப்படியே கிணற்றின் நடுவில் நின்று, மேலே

ஸப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "இவ்வளவுதான் கிணற்றில் ஜலம்" என்ருன்.

அதைக் கேட்ட ஸப்-இன்ஸ்பெக்டர் ஆச்சரியமடையாமல், 'அதனுல் என்ன. ஊற்றுக்கண் அதிகமாய் இல்லை. அதனுல் ஜலம கொஞ்சமா யிருக்கிறது. மனிதன் தண்ணீருக்குள் இல்லையே?" என்று அசட்டையாகக் கூறினுர்.

அப்போது நடேசன், வட்டமாயிருந்த கிணற்றின் சுவரைக் கையால் தடவிப் பார்த்துக் கொஞ்ச நேரம் ஆராய்ச்சி செய்தபடி தண்ணீருக்குள் மூழ்கி மறைந்து போனுன்.

அதை கவனித்துக் கொண்டிருந்த ஸப்-இன்ஸ்பெக்டர், 'இவனென்ன சுத்தப் பைத்தியக்காரனு யிருக்கிருன்; அநாவசியமாகப் பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கிருனே" என்று கூறியபடி கீழே பார்த்துக்கொண்டிருந்தார்.

ஜலத்திற்குள் ஆழ்ந்துபோன நடேசன் வெளியில் வரவில்லை. ஸப்-இன்ஸ்பெக்டருடைய ஆச்சரியம் அதிகரிக்கத் தொடங்கியது. ஐந்து நிமிஷ மாயிற்று; பத்து நிமிஷமாயிற்று; கால்மணி ஆயிற்று; அரை மணியும் கழிந்தது. ஆள் வரவில்லை. அதுவரையில் மனிதன் மூச்சை அடக்கிக்கொண் டிருப்பது கூடாத காரியமாதலால், அவன் ஒருகால் போய் மணலில் அகப்பட்டுக்கொண்டு வெளியில் வரமாட்டாமல் கீழே ஆழ்ந்துபோ யிருக்க வேண்டுமென்று தீர்மானித்து, அவனுடைய பிணத்தை எப்படி வெளியில் எடுப்பது என்பதைப்பற்றி திட்டங்கள் போட்டுக்கொண் டிருந்த சமயத்தில் திடீரென்று நடேசனுடைய முகம் தண்ணீர்க்குமேல் காணப்பட்டது. அவன் தனது முகத்தில் வழிந்த ஜலத்தைக் கைகளால் துடைத்துக்கொண்டு முன்போல மாடங்களில் கால்களை வைத்து ஏறி வரத் தொடங்கினுன்.

அப்போது ஸப்-இன்ஸ்பெக்டர், "என்னய்யா, ஜலத்திற்குள் சுமார் அரைமணி காலம் இருந்தாயே! எப்படி இருந்தாய்?" என்றார்.

அதற்குள் மேலே வந்துவிட்ட நடேசன் தனது வஸ்திரங்களைப் பிழிந்து உடுத்திக்கொண்டபடி ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி நகைத்து, "எனக்குக்கூட ஜலஸ்தம்பனம் கொஞ்சம் தெரியும். அதைச் செய்து உங்களுக்குக் காட்ட வேண்டுமென்று கொஞ்ச நேரம் தண்ணீருக்குள் இருந்தேன்" என்றான்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "அதிருக்கட்டும். தேடின ஆசாமி உள்ளே ஜலஸ்தம்பனம் பண்ணிக்கொண்டிருந்து உன் கையில் அகப்பட்டானா?" என்றார்.

நடேசன், "அகப்படவில்லை. நீங்கள் சொன்னமாதிரி அவன் முன் பக்கத்தால்தான் தப்பித்துப்போயிருக்க வேண்டும்" என்றான்.

அதைக் கேட்ட ஸப்-இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்து, "மனிதனை ஜலத்திற்குள் அரைமணி காலம் தேடிப் பார்த்துவிட்டுத்தானா இந்த முடிவிற்கு வரவேண்டும். இந்நேரம் நான் ஸ்டேஷனுக்குப் போய் என் வேலையை கவனித்திருப்பேன்; அநியாயமாய்க் கெடுத்தாய்" என்று கூறிவிட்டு ஜெவான் மூலம் ஒரு பூட்டை வரவழைத்து கதவை மூடிப் பூட்டி ஸீல் வைத்துவிட்டு ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார்.

நடேசனும் அங்கிருந்து புறப்பட்டு அதற்குப் பக்கத்திலிருந்த சந்தில் நுழைந்தான். அதுவே அம்மன் கோவில் சந்து. அதில் 14-வது எண்ணுள்ள வீட்டின் வாசலையடைந்தவுடன் நடேசன், அதன் முன்புறத்தில் இருந்த இரும்புக் கிராதிக் கதவண்டை போய் நின்றான். கிராதியின் கதவு பூட்டப்பட்டிருந்தது. அதற்கடுத்தாற்போல் காணப்பட்ட மரக்கதவும் ஜன்னல் கதவுகளும் மூடித் தாளிடப்பெற்றிருந்தன.

அப்போது, அடுத்த வீட்டுத் திண்ணையில் சோமசுந்தரம் உட்கார்ந்து ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தானானாலும், அவன் நடேசனை கவனித்த தாகத் தெரியவில்லை. ஆனால் நடேசன் அவனை கவனித்து கிராதியோரமாக மறைந்து நின்றபடி தன்னிடமிருந்த ஒரு சாவிக்கொத்தை எடுத்து, முயன்று பார்த்து, ஒரு திறவு கோலால் பூட்டை விலக்கி, கதவை மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து, மறுபடி கதவை மூடி உள் புறத்தில் தாளிட்டுக்கொண்டு, அடுத்த கதவையும் திறந்து உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு வீட்டிற்குள் புகுந்து முதலில் கீழ் பாகத்தை ஆராயத் தொடங்கினான். எங்கும் எவ்விதமான பொருளும் காணப்படவில்லை. அந்த வீட்டில் மனிதர் வசித்த குறியே தோன்றவில்லை. வீட்டின் நடுவில் இருந்த ஓர் அறை வெளியில் தாளிடப்பட்டிருந்ததைக்கண்ட நடேசன், அதைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து பார்க்க, அங்கு ஒரு கிணறு காணப்பட்டது. அதன் அடியில் அதிக ஆழத்தில் தண்ணீர் இருந்தது தெரிந்தது. கிணற்றின் கைப்பிடிச் சுவரிலும், தரையில் சில இடங்களிலும் தண்ணீர் சிந்தப்பட்டிருந்தது. யாரோ மனிதர் சற்று முன்பு அந்தக் கிணற்றின் தண்ணீரை உபயோகித்திருக்க வேண்டுமென்பது அதனால் தெரிந்தது.

நடேசன் அவ்வளவோடு அந்த அறையின் கதவை முன்போல் மூடி வைத்துவிட்டு மேன்மாடத்தில் ஏறிப் பார்த்தான். அவ்விடத்திலும், எவ்விதமான பொருளும் காணப்படவில்லை. எனவே, அவன் நிரம்பவும் ஆச்சரியமடைந்தவனாய் அந்த வீட்டை விட்டு வெளியில் வந்து முன்னிருந்ததுபோல கிராதியின் கதவைப் பூட்டினான்.

அதுவரையில் வேறு எதையோ கவனித்துக்கொண்டிருந்த சோமசுந்தரம், அப்போதே முகத்தைப் புஸ்தகத்தின் பக்கம் திருப்பியதைக் கண்ட நடேசன் வீதியோடு

போகிறவன்போல் போக்குக் காட்டி சோமசுந்தரத்தின் அருகில் போய் நின்றுகொண்டு, "என்ன புஸ்தகம் அது? மிக சுவாரஸ்யமாகப் படிக்கிறீரே!" என்ருன்.

சோமசுந்தரம்:—(திடுக்கிட்டு அவனை உற்றுப்பார்த்து) யாரையா நீர்?

நடேசன்:—என்னுடைய அடையாளத்தை இதற்குள் நீர் மறந்துபோய்விட்டீரா! கந்தசாமி செட்டி வீட்டில் காரியம் நடந்த அந்த இரவில்கூட நான் உம்மைப் பக்கத்து வீட்டில் பார்த்தேனே! உம்மோடிருந்த இன்னெருவர் இப்போது எங்கே இருக்கிருர்? கடைசியில் அவர் என்னை மறந்து போய்விட்டார். அந்தத் தேட்டையில் எனக்கும் பங்கு கொடுப்பதாக அவர் என்னிடம் சொன்னதை இன்னம் நிறைவேற்றவில்லை. இது நியாயமா யிருக்கிறதா? நாம் ஒருவருக்கொருவர் நாணயமாய் நடந்து கொண்டால் தானே நம்முடைய காரியம் நீடித்து நடக்கும். இதை நீராவது அவரிடம் சொல்லக்கூடாதா?

சோமசுந்தரம்:—(ஆச்சரியத்தோடு உருட்டி விழித்து அவனைப் பார்த்து) யாரப்பா நீ! உன்னை நான் இதுவரையில் பார்த்ததே இல்லையே! நீ என்னை ஆள் மாருட்டமாய் வேறே யாரோவென்று நினைத்துக்கொண்டு பேசுகிருய். அதுவுமல்லாமல், நீ சொல்வதிலிருந்து நீ ஒரு திருட்டுக் கூட்டத்தில் சேர்ந்தவன் என்பது தெரிகிறது. கந்தசாமி செட்டி வீட்டில் நடந்த திருட்டில் நீ சம்பந்தப்பட்டவன் என்பதும் தெரிகிறது. உன்னைப் போலீஸாரிடம் உடனே ஒப்புவிப்பதே நான் இப்போது செய்யவேண்டிய காரியம்!

நடேசன்:—போலீஸார் எனக்கு நெடுங்கால சிநேகிதர்கள். ஜெயில் வாசம் எனக்குப் புதியதல்ல. என்னைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம். வேதாரணியம் நடேசன் என்ருல் எந்த சிப்பாயியாலும் உடனே நடுங்கிச் சாவான். அப்பேர்ப்பட்ட பயங்கரமான மனிதன் இப்போது உனக்கு

மூன் ஆட்டுக்குட்டி போல் நிற்கிருன் என்பது உனக்கு நினைவிலிருக்கட்டும். என்னை நீங்கள் அநுசரித்துக்கொண்டு போனல், உங்கள் காரியம் நிர்விக்கினமாய் முடியும். என்னை ஏமாற்றுவதென்றல், அது வீண் துன்பத்தில் கொண்டுபோய்விடும்.

சோமசுந்தரம்:—என்ன கருத்தோடு என்னிடம் வந்து இப்படி நீ மிரட்டுகிருய் என்பது தெரியவில்லையே!

நடேசன்:—கொல்லத் தெருவில் ஊசி விற்கப் பார்க்கிருயே! அது பலிக்காது தம்பீ. வக்கீல் சுப்பிரமணியத்தின் வீட்டில் கிடைத்த பொருளிலும் எனக்குப் பங்கு சேரவேண்டும்.

சோமசுந்தரம்:—(தனது கோபாவேசத்தை அடக்கமாட்டாதவனுய்) உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்பது நிச்சயமாய்த் தெரிகிறது. அதனுல்தான் நீ இப்படித் தாறுமாருய்ப் பிதற்றுகிருய். உன்னோடு பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை; நீ போகலாம்.

நடேசன்:—இந்தமாதிரி யெல்லாம் பலர் பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். இதற்கெல்லாம் நான் மசிகிறவனல்ல. இப்போது உன் கையில் பணம் இல்லாவிட்டால், நான் மறுபடி வருகிறேன். இந்த இரண்டு வருமானங்களிலும் எனக்குச் சேரவேண்டியதை வாங்கி வை. அசட்டையா யிருந்தால், நான் உங்கள் எல்லோர் தலைக்கும் கல் கொண்டுவருவது நிச்சயம். ஜாக்கிரதை என்று முரைப்பாகக் கூறியபடி மெல்ல நழுவித் தெருவோடு பொய்விட்டான்.

## 3. பட்டப்பகலில் சாத்திய பட்டை நாமம்!

**வ**க்கீல் சுப்பிரமணியம் என்பவர் நெடுங்காலமாய்க் கோர்ட்டார் அறியப் பகற்கொள்ளை யடித்தடித்துப் பொருளை லக்ஷக்கணக்கில் திரட்டி வைத்திருந்தவர். அவர் வக்கீல் உத்தியோகத்தில் நிரம்பவும் சுலபத்தில் பெரிய பெரிய தொகைகளை அடிக்கும் சாமர்த்தியத்தைக் கற்றுக் கொண்டிருந்தாராதலால், அத்தகைய தந்திரசாலி அந்த ஊரில் இருந்ததனுலேயே, அதற்கு நரியூர் என்னும் பெயர் வந்ததோ என்றுகூட எவரும் சம்சயிக்கலாம். அவர் வக்காலத்துப் பெறும் கேஸ்களைப் பற்றிய தகவல்களை அவர் படிப்பதே இல்லை. அவருக்குக் கீழ் இரண்டு ஜூனியர் வக்கீல்களும், இரண்டு குமாஸ்தாக்களும் இருந்தனர். அந்த ஜூனியர்கள் வழக்கின் தகவல்களையெல்லாம் தெரிந்து கொண்டு, அவற்றின் சாராம்சத்தை சுருக்கமாய் எழுதிக் கொடுப்பார்கள். வழக்கின் விசாரணை நடப்பதற்கு சற்று முன்பே அவர் கோர்ட்டில் ஆஜராய் அந்த சுருக்கத்தைப் படித்துவிட்டு, சகலமான விவரங்களையும் கரைத்துக் குடித்திருப்பவர்போல் அவர் கனைத்து, உருமி மேஜையைக் குத்தி அட்டகாசம் செய்வார். ஆனால் ஒவ்வொரு விஷயத்தையும் ஜூனியர்கள் எடுத்தெடுத்து சொல்லி சொல்லி ஊட்டிவிடுவார்கள். அதை வைத்துக்கொண்டே அவர் திக்விஜயம் செய்து அபாரமான பொருளைத் திரட்டி ஜூனியர்களுக்கு சொற்ப சம்பளம் கொடுத்து தாம் பெரிய லக்ஷாதிபதி ஆயிருந்தார். உண்மையில் அவருடைய ஜூனியர்கள் இருவரும் திறமைசாலிகளாகவும், உழைப்பாளிகளாகவும் இருந்தமையால், அவர்கள் தங்களுடைய முத்தண்ணுவுடைய மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு போனதோடு, பெரும் பெரும் தொகைகளை சம்பாதித்துக் கொடுப்பதால், அவரைக் கொழுக்க வைத்துக்கொண்டு போயினர்.

வக்கீல் சுப்பிரமணியத்துக்கு சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கலாம். அவருக்கு வசதியான ஒரு பங்களா இருந்தது. அங்கு அவர் ஏராளமான சட்டப் புஸ்தகங்களை சுமார் பத்து கண்ணுடி பீரோக்களில் அழகாய் வைத்திருந்தாராலுைம், அவர் அவைகளில் இருந்தது என்னவென்பதைக் கண்ணுலும் பார்த்ததில்லை. ஷி பீரோக்களிருந்த பெரிய ஹாலில் அவருடைய ஜூனியர் வக்கீல்களும், குமாஸ்தாக்களும் எப்போதும் இருந்து உழைப்பரித்துக் கொண்டிருந்தனர்.

பெரிய வக்கீல், அந்த ஹாலுக்கு அடுத்தாற்போல் இருந்த ஓர் அறைக்குள் வெல்வெட் மெத்தை தைக்கப் பெற்ற சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டே இருப்பார். அவருடைய நான்காவது மனைவியான யௌவன ஸ்திரீ அடிக்கடி அவருக்குக் கொணர்ந்து கொடுக்கும் ஹல்வா, பால்கோவா முதலிய மதோன்மத்தான தின் பண்டங்களை அடிக்கடி தின்பதும், கண்களை மூடிக்கொண்டு உறங்கி சதாகாலமும் நிஷ்டையிலிருப்பதுமாகவே அவர் பொழுதைப் போக்குவார்.

அவர் காலை வேலைகளில் மாத்திரம் தமக்கு வரும் சமாசாரப் பத்திரிகைகளைப் பிரித்து வைத்துக் கொண்டு, அவைகளில் இருக்கும் முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் சுமார் அரைமணி காலம் போக்குவார்; அப்போது அவருடைய யௌவன மனைவி அலமு அங்கே வரும் பட்சத்தில் முக்கியமான செய்தி எதையேனும் அவளிடத்தில் தெரிவிப்பார்.

அவ்வாறு ஒருநாள் அவர் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருந்த காலத்தில், அலமு அங்கே வந்து, "கந்தசாமி செட்டியாருடைய வீட்டில் நடந்த திருட்டைப்பற்றி போலீஸார் அதற்குப் பின் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டார்களாமா?" என்றுள்.

வக்கீல் :— போலீஸாரா! அவர்கள் உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிக்கிறவர்களாயிற்றே. அவர்கள் சும்மா இருப்பார்களா! அவர்கள் எதையாவது செய்துகொண்டு தான் இருப்பார்கள்! ஆனுல் ஒரு தகவல் நமக்குத் தெரிகிறது. நம்முடைய வீட்டில் நடந்த திருட்டைக் கண்டு பிடிக்கும்படி நாம் மன்னுர்குடி திகம்பா சாமியாருக்கு எழுதினதற்கு, அவர் தமக்கு உடம்பு அசௌக்கியமாயிருப்பதால், வர இயலவில்லை என்று எழுதினுரே! அது உண்மை என்பது இன்றைய பத்திரிகையில் தெரிகிறது. அவருக்குக் குடலில் ஓர் ஆபரேஷன் நடந்ததாகவும், அவருடைய நிலைமை கவலைக்கிடமானதா யிருக்கிற தென்றும் மன்னுர்குடி நிருபர் ஒருவர் தினசரி புளுகனில் எழுதி இருக்கிருர்.

அலமு :—நம்முடைய பொல்லாத வேளையின் பலன் அவரையும் படுக்க வைத்தது போ லிருக்கிறது. அவர் வரா விட்டால், போலீஸார் திருடனைக் கண்டு பிடிக்க மாட்டார்களா ?

வக்கீல் :—ஓ, அவசியம் கண்டு பிடிப்பார்கள். உன் நகைகள் எல்லாம் சீக்கிரம் வந்துவிடும்; அவைகளை வாங்கி மாட்டிக் கொள்ளத் தயாராயிரு.

அலமு :—ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் ?

வக்கீல் :—திருடர்கள் மிக சாமர்த்தியமாக வேலை செய்கிருர்கள் ; நம்முடைய வீட்டில் நடந்த திருட்டு எப்படி ஆச்சரியகரமாக நடந்ததோ அதே போல கந்தசாமி செட்டியார் வீட்டுத் திருட்டும் நடந்திருக்கிறது.

அலமு :—எப்படி ?

வக்கீல் :—நம்முடைய வீட்டில் நடந்த திருட்டில் சோமசுந்தரம் என்னும் ஒருவன் சம்பந்தப்பட்டிருப்பதாகப் போலீஸார் அவனைப் பிடித்தார்கள். ஆனுல் அவன் அதே சமயத்தில் வேறிடத்தில் இருந்ததாக தக்க பெரிய மனிதர்கள் சாட்சி சொன்னுர்கள். கந்தசாமி செட்டி வீட்

டுத் திருட்டிலும் அந்த சோமசுந்தரம் சம்பந்தப்பட்டதாகச் சொல்லுகிறார்கள்; ஆனால் அவன் அதே காலத்தில் வேறிடத்தில் இருந்ததாக தக்க ருஜு ஏற்பட்டுருக்கிறது.

அலமு;—அந்த சோமசுந்தரத்தைப் போலே இன்னொருவன் இருக்கிறானோ என்னவோ! இரட்டையாகப் பிறக்கும் சகோதரர்கள் ஒரேமாதிரி இருக்கிறார்களல்லவா!

வக்கீல்:—இருவருடைய கையெழுத்துக்களும் ஒரேமாதிரி இருக்குமோ?

அலமு:—சோமசுந்தரம் யோக்கியமானவனா யிருக்கலாம். அவனைப் போல இருக்கும் இன்னொருவன் தான் திருடிவிட்டு, அந்தப் பழியை சோமசுந்தரத்தின் மேல் சுமத்த இப்படியெல்லாம் தந்திரம் செய்யலாம்; சோமசுந்தரம் எழுதுவதைப் போலவே தானும் எழுத அவன் கற்றுக் கொண்டிருக்கலாம்.

வக்கீல்:—ஆள்களும் ஒரேமாதிரி இருக்க வேண்டும்; எழுத்துக்களும் ஒரேமாதிரி இருக்கவேண்டும். அது சாதாரணமாய் நேரக்கூடிய காரியமே அல்ல. இந்த தந்திரமான திருட்டைப் போலீஸார் கண்டுபிடிப்பார்களென்ற நம்பிக்கை எனக்கு ஏற்படவில்லை. நம்முடைய நகைகள் தத்தந்தான். நாம் எள்ளும் ஜலமும் விட்டுவிட வேண்டியதுதான்—என்றார்.

அப்போது வக்கீலைப் பார்க்க யாரோ ஒருவர் வந்திருப்பதாக வேலைக்காரன் வந்து சொல்ல உடனே வக்கீல் எழுந்து முன்பக்கத்திற்குச் சென்றார். அவர் வருகையை எதிர்பார்த்து ஒரு மனிதர் அங்கு காத்திருந்தார். வக்கீல் தமது நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "எனக்காக நெடுநேரமாய்க் காத்திருக்கிறீர்களா?" என்றார்.

அந்த மனிதர், "இல்லை நான் இப்போதுதான் வந்தேன். என்னுடைய அடையாளம் தெரியவில்லை போல்

இருக்கிறது. வருஷம் கொஞ்சமாகவா ஆகிறது. குழந்தை சௌக்கியந்தானே?" என்றார்.

அதைக் கேட்ட வக்கீல் நிரம்பவும் வியப்படைந்தவராய், "எந்தக் குழந்தையைப் பற்றிக் கேட்கிறீர்கள்? என் வீட்டில் குழந்தையே இல்லையே!" என்றார்.

வந்தவர்:—உங்களுக்குக் குழந்தை இல்லை. என் குழந்தை அலமு உங்கள் வீட்டில் இருக்கிறது. அதைப் பற்றிக் கேட்கிறேன். உங்கள் வீட்டுக்காரி என் குழந்தையல்லவா!

வக்கீல்:—(அவரை உற்றுப் பார்த்து) அடேடே! கோபால் மாமாவா! என்ன நீங்கள் சுத்தமாய் இப்படி அடியோடு உருமாறிப் போயிருக்கிறீர்களே! சுத்தமாய் உங்களுடைய அடையாளமே தெரியவில்லையே! யாரோ கேஸ் விஷயமாய் வந்திருக்கும் கட்சிக்காரர் என்றல்லவா எண்ணிவிட்டேன். வந்தவர்கள் நேராய் உள்ளே வராமல் இங்கே உட்கார்திருக்க வேண்டிய காரணமென்ன? அவள் உங்களைப் பார்த்தால் அப்படியே பொங்கிப் பூரித்துப் போவாளே! உங்களைப் பார்த்து சரியாகப் பத்து வருஷ காலமாகிறதே! உள்ளே போகலாம் வாருங்கள்—என்று கூறி ஆவேசத்தோடு எழுந்தார். அவருடைய மாமனார் என்று சொல்லிக் கொண்ட கோபாலசாமி என்பவரும் எழுந்து பின்தொடர்ந்தார்.

கோபாலசாமிக்கு சுமார் ஐம்பது வயது நிறைந்திருக்கலாம். அவர் நடுத்தரமான உயரமும், மாநிறமான ஒற்றை நாடிச் சரீரமும் உடையவராய்க் காணப்பட்டார். உள்ளே நுழைந்த வக்கீல், "அலமு, அலமு, இதோ பார். உன்னுடைய நயினு வந்திருக்கிறார்கள்!" என்று கூறினார்.

அதைக் கேட்டு அவருடைய மனைவி திடுக்கிட்டு ஓடி வந்து சந்தோஷ முகமலர்ச்சியோடு விருந்தாளியைப் பார்த்து, "அடடா! நயினுவா! நான் ஒருத்தி இருக்கிறேன் என்ற நினைவு இப்போதுதான் வந்ததா! என்ன

பழைய நயினுவாகவே தெரியவில்லையே! அடியோடு உரு மாறிப் போயிருக்கிறீர்களே!" என்று கூறிவிட்டு சமயலறைப் பக்கம் திரும்பி, "பொன்னீ, பொன்னீ, காப்பி கொண்டு வா" என்று உத்தரவிட்டபடி கோபாலசாமியிடம் வந்து நிற்க, அவர் அங்கிருந்த ஒரு பலகையில் உட்கார்ந்து கொண்டு தமது உணர்ச்சிப் பெருக்கை அடக்க மாட்டாதவராய்த் தேம்பித் தேம்பிப் பெருமூச்சு விட்டபடி, "ஆமம்மா, உன் நினைவு எனக்கு இந்தப் பத்து வருஷம் வரையில் வரவில்லை; இப்போதுதான் வந்தது. உடனே புறப்பட்டு வந்தேன்" என்ருர்.

அதற்கு வக்கீல், "சரி; நீங்கள் காப்பி சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண்டிருங்கள். இதுதான் நான் கட்சிக்காரர்களோடு பேசுகிற சமயம். நான் முன்னுல் போய் இருக்கிறேன்" என்று கூறியவண்ணம் வெளியில் போய் விட்டார்.

உடனே அலமு காப்பி கொணர்ந்து கொடுக்க கோபாலசாமி அதை வாங்கிப் பருகினுர். அப்போது அலமு, "நயினு, பத்து வருஷ காலத்திற்கு முன், என்னை இங்கே கட்டிக் கொடுத்துவிட்டுப் போனீர்கள். அதன் பிறகு நான் சரியாய் நூறு கடிதங்கள் எழுதி இருப்பேன். எதற்கும் மறுமொழியே இல்லை. நீங்கள் எங்கேயாவது தேசாந்தரம் போய்விட்டீர்களா? அம்மாள் சௌக்கியமாயிருக்கிருர்களா?" என்ருள்.

உடனே கோபாலசாமி, "குழந்தை, நான் ஊரில் இருந்தால், வேண்டுமென்று பேசாமல் இருப்பேனு! நாங்கள் உன்னை இங்கே அனுப்பிவிட்டுப் போனதற்கு அடுத்த வாரமே உன் தாயார் மூன்றே நாள் ஜுரத்தில் இறந்து போய்விட்டாள். நீங்கள் அப்போது தான் புதிதாக வாழ்க்கை நடத்த ஆரம்பிக்கையில் சாவு கடிதம் எழுத மனமில்லை. அதுவன்றி, உன் தாயார் இறந்தது முதல் எனக்கு அறிவு கொஞ்சம் மாருட்டமாகி விட்டது. நான்

சந்நியாசம் வாங்கிக் கொண்டு யாத்திரை புறப்பட்டு விட்டேன். இந்தப் பத்து வருஷகாலம் அலைந்த பிறகு இப்போதுதான் என் புத்தி ஒழுங்குப்பட்டது. உடனே நான் புறப்பட்டு இந்த ஊருக்கு வந்தேன். இந்த ஊர் அம்மன் கோவில் சந்து 14-வது வீட்டில் என் சினேகிதர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் போய் உங்களைப்பற்றி விசாரித்தேன். நீங்கள் இந்த இடத்தில் இருப்பதாக அவர்தான் சொன்னார். அதன்மேல் வந்தேன்" என்றார்.

அலமு:—(மிகுந்த விசனத்தோடு) அப்படியா நடந்தது! அம்மா இறந்தா போய்விட்டார்கள்! ஐயோ! நான் மறுபடி அம்மாளுடைய முகத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்காமல் போனேனே! பத்து வருஷ காலமாகவா நீங்கள் ஊரூராய் அலைந்தீர்கள்! என்ன தலைவிதி இது! இங்கே வந்திருக்கக் கூடாதா? போனதெல்லாம் போகட்டும். இனி நீங்கள் எங்கேயும் போகவேண்டாம்; இங்கேயே இருந்து விடுங்கள். உங்களுக்கு ஒரு குறைவு மிராதபடி நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.

கோபாலசாமி:— அப்படியே செய்கிறேன் தாயே. உன்னைவிட எனக்கு வேறே யாரம்மா இருக்கிறார்கள்! நான் இங்கே இருப்பதைப்பற்றி உன் எஜமானரும் ஆட்சேபிக்கக் கூடியவர் அல்ல. அப்படியே ஆகட்டும். ஆனால் ஒரு சங்கதி; நான் யாத்திரை போன காலத்தில் எனக்கு இரண்டு சிநேகிதர்கள் ஏற்பட்டார்கள். அவர்களோடு நான் ராமேசுவரம் போக உத்தேசித்திருந்தேன். இப்போது உன்னைப்பார்த்த பிறகு அந்த எண்ணம் மாறிவிட்டது. அவர்கள் எனக்காகக் காத்திருப்பார்கள். நான் போய் அவர்களை அனுப்பிவிட்டு இன்னும் ஒருமணி காலத்தில் திரும்பி வருகிறேன்—என்று கூறிவிட்டு எழுந்து, வக்கீல் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அப்போது வக்கீலோடு வேறு நான்கு மனிதர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வக்கீல் தமது

மாமனாரைக் கண்டவுடன், "சட்டையைக் கழற்றிவிட்டு, ஸ்நானம் அனுஷ்டானம் முதலியவைகளை கவனிக்கிறது தானே" என்றார்.

உடனே கோபாலசாமி, "நான் அவசரமாய் ஓரிடத்திற்குப் போய்விட்டு இன்னம் ஒரு மணிக்குள் திரும்பி வருகிறேன். அதற்குமேல் ஸ்நானம் முதலிய காரியங்களை கவனிக்கிறேன்" என்று கூறிவிட்டு வெளியில் நடந்தார்.

அப்போது அவருடைய முகம் தானாகவே புன்னகை செய்தது. "இங்கே என் எண்ணம் இவ்வளவு சுலபத்தில் நிறைவேறுமென்று கனவில்கூட நான் நினைக்கவில்லை. இதுவும் ஓர் அதிர்ஷ்டந்தான். இங்கே மறைந்திருந்தால் எப்படிப்பட்ட போலீஸ் பிரகஸ்பதியாலும் என்னைக் கண்டு பிடிக்க முடியாது. அதற்குமேல் நடக்க நடக்க யுக்தி செய்து கொள்ளலாம்" என்று தமக்குத் தாமே எண்ணமிட்டவராய்த் தெருவோடு போய்விட்டார்.

வக்கீல் சுப்பிரமணியம் வழக்கமாய்க் காலை பத்து மணிக்கு முன்னாலேயே சாப்பாட்டை முடித்துக் கொண்டு கச்சேரிக்குப் புறப்படுவார். அதேபோல அன்றைக்கும் அவருடைய சாப்பாடு முடிந்தது.

ஆனால் அன்றைய தினம் அவருக்குக் கச்சேரியில் வேலையில்லை யாதலால், அவர் தமது ஜூனியர் வக்கீல்களை மாத்திரம் கச்சேரிக்கு அனுப்பிவிட்டு தாம் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார். குமாஸ்தாக்கள் இருவரும் ஒரு மூலையில் இருந்த டைப் அடிக்கும் இயந்திரங்களினண்டையில் உட்கார்ந்து ஏதோ சில அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

சரியாக மணி பத்தேகால் ஆன சமயத்தில் அவருக்கு முன் நொண்டி ராமசாமி பிள்ளை பிரஸன்னமானார். அவர் நொண்டி நொண்டி நடந்துகொண்டு வந்ததிலிருந்து, அவருடைய காலில் ஏதோ ஊனம் இருப்பதாக வக்கீல் அநு

மானித்துக் கொண்டு, ஒரு நாற்காலியைக் காட்ட ராம சாமி உடனே அதில் உட்கார்ந்து கொண்டார்.

வக்கீல் :—யார் நீங்கள்? நான் உங்களுக்குச் செய்யக்கூடிய காரியம் ஏதாவதுண்டா?

ராமசாமி :—ஒரு கேஸ் விஷயமாய் உங்களிடம் ஆலோசனை கேட்கவேண்டும்.

வக்கீல் :—நான் சீனியர் வக்கீல். கட்சிக்காரர் நேராக என்னிடம் வருவது வழக்கமில்லை. என்னுடைய ஜூனியர்கள் முதலில் கேஸ் தஸ்தாவேஜிகளைப் பார்த்து விஷயங்களை சாராம்சமாக என்னிடம் தெரிவிப்பார்கள். அதற்குமேல் நான் யோசனை சொல்லுவேன். அவர்கள் கச்சேரிக்குப் போயிருக்கிறார்கள்; வர ஏழு மணி ஆகும். நீங்கள் அப்போது வந்தால், ஆகவேண்டியதை செய்யச் சொல்லுகிறேன்.

ராமசாமி :—என் வழக்கு மிகவும் முக்கியமானது. அது ஜெயிக்குமா ஜெயிக்காதா என்பதை ஒரு பெரிய வக்கீலிடம் யோசனை கேட்க வேண்டுமென்று நினைத்து நான் தங்களிடம் வந்தேன்.

வக்கீல் :—ஜூனியர்கள் விஷயங்களில் அநாவசியமாயிருப்பதைத் தள்ளிவிட்டு அவசியமானவைகளைத் திரட்டி என்னிடம் சொல்லுவார்கள். நானே முடிவான யோசனையைச் சொல்லுவேன். நானே முதன் முதலில் எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து கொண்டிருப்பதற்கு எனக்கு அவகாசமில்லை. நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். உங்கள் வழக்கின் சாராம்சத்தை ஒரு காகிதத்தில் எழுதி என்னிடம் வைத்துவிட்டுப் போய் மறுபடி மாலையில் வாருங்கள். நான் முடிவு சொல்லுகிறேன். அதோ இருக்கும் குமாஸ்தாக்களிடம் போங்கள்; காகிதமும் பென்ஸிலும் கொடுப்பார்கள்—என்றார்.

ராமசாமி அதற்கு மேலும் மறுத்துப் பேச மாட்டாத வராய் எழுந்து குமாஸ்தாக்கள் இருந்த இடத்திற்குச் சென்று காகிதம் பென்ஸில் ஆகியவற்றைப் பெற்று ஓரிடத்தில் உட்கார்ந்து தமது வழக்கின் விவரங்களை எழுதத் துடங்கினுர். அவர் மெதுவாய் எழுதும் இயல்புடையவராதலால், பதினெரு மணி ஆகிறவரையில் எழுதிக் கொண்டே இருந்தார்.

அப்போது அங்கு கோபாலசாமியும், இன்னொருவரும் வந்து சேர்ந்தனர். பின்னவர் சுமார் நாற்பயது வயது மதிக்கத் தக்கவராய்க் காணப்பட்ட தன்றி, தாடி மீசைகள் வளர்த்துக் கொண்டிருந்தார். ஆனுல் அவர் சட்டை நிஜார், பூட்ஸ், தொப்பி, மணிக்கட்டுக் கடிகாரம் முதலிய மேல்நாட்டு சாமான்களுடன் காணப்பட்டார்.

அவரும் கோபாலசாமியும் அங்கே வந்தவுடன், வக்கீல் தமது மாமனுரை நோக்கி, “ஏன் இவ்வளவு தாமதம் ஆய்விட்டது? சாப்பாட்டுக்கு நேரமாகவில்லையா? என்ருர்.

அப்போது கோபாலசாமி, சற்று தூரத்தில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்த ராமசாமி பிள்ளையை வியப்போடு பார்த்துவிட்டு, வக்கீலை நோக்கி, “நான் உங்களோடு தனிமையில் சில வார்த்தைகள் பேசவேண்டும்” என்ருர்.

உடனே வக்கீல் தமது மாமனுரை அழைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குச் செல்ல, அவர்களுடன் தாடிக்கார மனிதரும் சென்ருர். அங்கிருந்த ஆசனங்களில் மூவரும் உட்கார்ந்து கொண்டனர். உடனே கோபாலசாமி, “நான் காலையில் இங்கே வந்துவிட்டுப் போனேனல்லவா; இந்த ஊரில் உள்ள என் நண்பர் ஒருவருடைய வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கு இவர் வந்திருந்தார். இவர் ஒரு துப்பறியும் நிபுணர். ஆகையால்

இவரை இங்கே அழைத்து வந்தேன். குழந்தையினுடைய நகைகள் ஏராளமாய்த் திருட்டுப் போய்விட்டதாகக் கேள்வியுற்றேன். போன நகைகள் திரும்பவும் நமக்குக் கிடைக்கும்படி இவர்கள் செய்வதா யிருந்தால், அது நமக்கு அநுகூலமான காரியந்தானே'' என்றூர்.

உடனே வக்கீல் துப்பறிபவரை நோக்கி, "உங்கள் பெயர் என்னவோ?" என்றூர்.

துப்பறிபவர்:—என் பெயர் சுந்தரம்.

வக்கீல்:—நீங்கள் எந்த ஊர்? துப்பறிபவர் என்றுல் அதற்கு ஏதாவது அதிகாரக் கடிதம் இருக்குமே.

சுந்தரம்:—என்னுடைய ஊர் மன்னூர்குடி. திகம்பர சாமியார் என்னும் மகானைப் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அவர்களுக்கு நான்தான் பிரதம சீடன். என்னுடைய அதிகாரக் கடிதத்தை இதோ பாருங்கள்—என்று கூறியபடி தமது சட்டைப் பையிலிருந்த ஒரு காகிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தார். அது ஒழுங்காகவே எழுதப்பட்டிருந்த தாலுைம், சுந்தரம் என்னும் பெயருக்கு முன்னுல் ஏதோ ஒரு சொல் அடிக்கப்பட்டிருந்தது. அந்தச் சொல் இன்னதென்பது விளங்கவில்லே. அந்த அடிப்பை வக்கீல் கவனித்தாராலுைம், அதைப் பற்றி எவ்வித சம்சயமும் கொள்ளாமல் கடிதத்தை சுந்தரத்தினிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு, "திகம்பர சாமியாருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அவருக்கு உடம்பு சரியாயில்லே யாகையால், அவர் வர அசக்தராயிருக்கிருர் என்ற மறுமொழி வந்தது. அந்த விஷயமும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்'' என்றுர்.

சுந்தரம்:—தெரியும். உங்களுக்கு மறுமொழி அனுப்பப்பட்ட பிறகு என்னே அனுப்பினுர்கள். அதனுல் நான் வந்தேன்.

வக்கீல்:—சரி, சந்தோஷம். உங்களுக்கு என்னென்ன தகவல்கள் தெரிய வேண்டுமோ, அவைகளேச் சொல்லத்

தடையில்லை. இங்கே நீங்கள் இருக்க வேண்டுமானால் உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுக்கக் காத்திருக்கிறேன்.

சுந்தரம்:—திருட்டு எப்படி நடந்தது?

வக்கீல்:—அன்றிரவு சரியாய் பன்னிரண்டு மணி இருக்கும். அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த நான் என் உடம்பில் யாரோ ஒருவன் கயிற்றைப்போட்டு இறுக்கிக் கட்டுவதாக உணர்ந்து விழித்துக்கொண்டேன். படுக்கையறை விளக்கு மங்கலாய் எரிந்துகொண் டிருந்தது. நான் விழித்துக் கொண்டு திமிறுவதற்குள் அவன் என்னைக் கட்டிப் போட்டுவிட்டதன்றி என் வாயிலும் துணிப்பந்தை அடைத்துவிட்டு, என் மனைவியிடம் போய் அவளையும் அதே போலக் கட்டிப் போட்டுவிட்டு அவளுடைய உடம்பிலிருந்த நகைகளையெல்லாம் அபகரித்துக்கொண்டு, இரும்புப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்த நகைகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். திருடன் போன பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் போலீஸார் வந்து எங்களுடைய கட்டுகளை விலக்கிவிட்டார்கள்.

சுந்தரம்:—அவர்களுக்கு யார் அப்போது செய்தி அனுப்பியது?

வக்கீல்:—அதைப்பற்றி நானும் சந்தேகப்பட்டு ஸப்-இன்ஸ்பெக்டரிடம் கேட்டேன். எவனோ எங்கிருந்தோ டெலிபோன் மூலம் போலீஸாருக்குத் தகவல் தெரிவித்தானாம். அப்படித் தெரிவித்தவன் தானே திருடனென்றும், தன் பெயர் சோமசுந்தரமென்றும். தான் அம்மன் கோவில் சந்து 15-வது வீட்டில் இருக்கிறவனென்றும், போலீஸாருக்குத் திறமையிருந்தால், தன்னைப் பிடித்துக் கொள்ளலாமென்றும், அவன் சொன்னானாம். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே அந்த வீட்டிற்குப் போனாராம். சோமசுந்தரம் அன்று மாலையில் சில பெரிய மனிதர்களுக்கு விருந்து நடத்தி, அவர்களுடன் சீட்டாடிக்கொண் டிருந்

தானும். அவன் மாலை முதல் வீட்டை விட்டு வெளியில் போகவில்லை என்று ஷ பெரிய மனிதர்கள் உறுதியாக சாட்சி சொன்னார்களாம். தாம் அதைக் கேட்டுக்கொண்டு சில ஜெவான்களுடன் எங்கள் வீட்டிற்கு வந்ததாக ஸப்-இன்ஸ்பெக்டர் சொன்னார். சில தினங்களுக்கு முன் கந்தசாமி செட்டியாருடைய வீட்டில் நடந்த திருட்டும் சற்றேறக்குறைய இதே போலத்தான் நடந்திருக்கிறது. அதன் விவரத்தை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இந்தத் திருட்டை நடத்துகிறவன் பெரிய ஜாலவித்தைக்காரனாயிருக்கவேண்டும் என்ற எண்ணமே என் மனதில் உண்டாகிறது. அவன் மாந்திரீக சக்தியினால் இன்னொருவனைப்போல மாறித் திருட்டை நடத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ளுகிறான்போல் இருக்கிறது.

சுந்தரம்:—இந்தத் திருட்டில் ஏதோ ஒருவிதமான சூது நடந்திருக்கவேண்டு மென்பதே என் அபிப்பிராயம். அதை கண்டுபிடித்து விட்டுத்தான் ஊருக்குத் திரும்பவேண்டு மென்ற உறுதியுடன் நான் இங்கே வந்திருக்கிறேன். அதிருக்கட்டும். முன் ஹாலில் மூன்று பேர்கள் இருக்கிறார்களே, மூவரும் உங்களுடைய குமாஸ்தாக்களா?

வக்கீல்:—இல்லை, இல்லை; டைப் அடிக்கும் இரண்டு பேர்களுமே என் குமாஸ்தாக்கள். இன்னொருவர் ஏதோ வழக்கைப்பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்க வந்திருக்கிறார். வழக்கின் சாராம்சத்தை காகிதத்தில் எழுதித் தரச்சொன்னேன். அதை அவர் எழுதிக்கொண்டிருக்கிறார். சரி, நீங்கள் எங்கே ஜாகை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

சுந்தரம்:—சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் நான் இந்த ஊருக்கு வந்தேன்; இன்னும் ஜாகை ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

வக்கீல்:—நான் இங்கேயே இடம் கொடுக்கிறேன். உங்களுடைய சாப்பாடும் எங்கள் வீட்டிலேயே நடக்கட்டும். யாராவது கேட்டால், நீங்கள் என்னுடைய சின்ன மாமனார் என்று சொல்லிவிடலாம்—என்றார்.

மற்றவரும் அதற்கு இணங்க, அவருக்கு ஓர் அறை கொடுக்கப்பட்டது. அவர் வந்தபோது முன் தாழ்வாரத்தில் வைத்திருந்த ஒரு பெட்டியையும், ஒரு கோணி மூட்டையையும் அவர் எடுத்துக்கொண்டு போய்த் தமது அறைக்குள் வைத்துக்கொண்டார். அவரும் வக்கீலின் மாமனாரும் உள்ளே சென்று தங்களது சாப்பாட்டை முடித்துக்கொண்டு, ஆபீஸ் ஹாலுக்கு வந்தனர். அப்போது ராமசாமி பிள்ளை அங்குகாணப்படவில்லை. வக்கீல் நாற்காலியில் சாய்ந்தபடியே தூங்கிக்கொண் டிருந்தார். அப்போது குமாஸ்தாக்கள் இருவரும் ஏதோ காரியமாய்க் கச்சேரிக்குப் போய்விட்டனர். கோபாலசாமியும் துப்பறிபவரும் இரண்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டனர். கோபாலசாமியின் பார்வை பக்கத்திலிருந்த மேஜையின் மீது சென்றது. ராமசாமி பிள்ளை எழுதி வைத்துவிட்டுப் போன காகிதம் அவருடைய திருஷ்டியில் பட்டது. அவர் மெதுவாக அதை எடுத்து முதலிலிருந்து கடைசி வரையில் படித்து, அதன் விஷயத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு சரேலென்று பக்கத்திலிருந்த பென்ஸிலை எடுத்து, சில சொற்களை அடித்து அவற்றிற்கு பதில் வேறு புதிய வார்த்தைகளைப் புகுத்தியபின் அவைகளை முன்போலவே வைத்துவிட்டு, துப்பறிபவரைப் பார்த்து, "நாம் போகலாம்" என்று ஊமை ஜாடையால் காட்ட, சுந்தரம் உடனே எழுந்தார். இருவரும் அங்கிருந்து உள்ளே சென்று சுந்தரத்திற்கு விடப்பட்டிருந்த அறைக்குப் போய்ச் சேர்ந்தனர். கோபாலசாமி கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கீழே உட்கார்ந்து கொண்டார்.

சுந்தரம்:—அந்தக் காகிதத்தில் ராமசாமி என்ன எழுதி இருக்கிறான்?

கோபாலசாமி:—இவன் ராமசாமியா! யார் சொன்னது அப்படி?

சுந்தரம்:—இவனே தான் சொல்லிக் கொள்ளுகிறான்.

கோபாலசாமி:—பெரிய பைத்தியக்காரனப்பா நீ! இவன் யாரென்பது உனக்கு இன்னம் விளங்கவில்லையா? இவன் நம்முடைய—என்னுடைய—சிநேகிதனுக்குத் தம்பி யல்லவா.

சுந்தரம்:—ஓகோ! அவனா! அநேக வருஷ காலமாய் ராஜா சாப்பாடு சாப்பிட்டவன்.

கோபாலசாமி:—அநேக வருஷ காலமென்று ஏன் சொல்லுகிறாய்! சரியாய் பதினான்கு வருஷ காலமென்று சொல்லு. ஆனால் ராஜா சத்திரத்திலிருந்து வந்தவன் இந்த ஆறுமாத காலமாய் எங்கே இருந்தானென்பதுதான் தெரியவில்லை.

சுந்தரம்:—அப்போது இவனுடைய கால் சரியா யிருந் ததே! இப்போது ஏன் நொண்டுகிறான்?

கோபாலசாமி:—யாராவது அடித்துக் காலை ஒடித்திருப் பார்கள்.

சுந்தரம்:—காகிதத்தில் என்ன எழுதி இருக்கிறான்?

கோபாலசாமி:—வேறே என்ன இருக்கிறது. பழைய கதையைத்தான் எழுதி இருக்கிறான். அதுவுமன்றி, தன் சம்மதமின்றி, தன் பிள்ளை செய்திருக்கும் சில காரியங் களைப்பற்றி தான் பிராது கொடுத்தால், அது செல்லுமா, செல்லாதா என்று கேட்டிருக்கிறான். சுந்தரமூர்த்தி முதலியார் நம்பிக்கை மோசம் செய்ததாக அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடரலாமா என்று கேட்டிருக் கிறான்.

சுந்தரம்:—சுந்தரமூர்த்தி முதலியாரைக் கண்டுபிடித் தல்லவா, அவர்பேரில் வழக்குத் தொடரவேண்டும். இவன்

அவரைக் கண்டுபிடித்து விட்டதாக எண்ணுகிருனே, அல்லது கண்டுபிடித்து விடலாமென்று நம்புகிருனே என்னவோ.

கோபாலசாமி:—நீ துப்பறிபவனு யிருந்தும், உன்னு லேயே அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவன் கண்டு பிடித்துவிடப் போகிருனே!

சுந்தரம்:—சரி; அவன் எதையாவது செய்துகொள்ளட் டும். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. கேடி நடே சன் வந்து ஏன் இதில் சம்பந்தப்படுகிருன் என்பதுதான் தெரியவில்லை. அவன் நம்மிடம் தன் கைவரிசையைக் காட்டுவானே என்னமோ.

கோபாலசாமி:—அதெல்லாம் எதுவும் பலியாது.

சுந்தரம்:—பாலசுந்தரம் இப்போது என்ன நிலைமையி லிருக்கிருன்?

கோபாலசாமி:—மீனுட்சிசுந்தரம் பிள்ளையே அவனுக்கு ஜாமீன் கொடுத்து விடச்செய்தாராம். அவன் இப்போது எங்கே இருக்கிருனென்பதே தெரியவில்லை.

சுந்தரம்:—சரி; நான் சற்று உலாவிவிட்டு வருகிறேன். நீங்கள் உங்கள் பெண்ணிடம் போய் பேசிக்கொண் டிருங் கள்; அல்லது, ஒரு தூக்கம் போட்டு எழுந்திருங்கள்— என்ருர்.

உடனே கோபாலசாமி எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியில் போய் ஒரு சோபாவில் படுத்துக் கொண்டார். சுந்தரம் அந்த அறையின் கதவைமூடி வெளி யில் பூட்டிக் கொண்டு, முன் பக்கத்தில் உள்ள ஹாலை அடைந்து ஒருமூலையில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அப்போது வக்கீல் குறட்டை விட்டுத் தூங் கிக்கொண் டிருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு குமாஸ்தாக்கள் இரு வரும் அங்கே வந்து சேர்ந்தனர். அவர்களில் ஒருவர் சுந்

தரத்தைப் பார்த்து, "உங்களுக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டுமா? வக்கீல் தூங்குகிருர்?" என்ருர்.

சுந்தரம்:—எனக்கு ஒரு காரியமும் ஆகவேண்டிய தில்லை. அவர்கள் தூங்கட்டும்.

குமாஸ்தா:—ஏதாவது கேஸ் சம்பந்தமாக வந்திருக் கிறீர்ளோ என்ற சந்தேகத்தினுல் கேட்டேன்.

சுந்தரம்:—(புன்சிரிப்போடு) இங்கே வருகிறவர்கள் எல்லாரும் கட்சிக்காரர்களாகவே இருக்கவேண்டு மென் பது உங்கள் நிகாபோல் இருக்கிறது.

குமாஸ்தா:—இங்கே வருகிறவர்கள் எல்லோரும் ஏதா வது கேஸ் விஷயமாகத்தான் வருகிறவர்கள். அதனுல் கேட்டேன். நீங்கள் கோபிக்க வேண்டாம். நீங்கள் வக்கீ லுக்கு வேண்டியவர்கள் போல் இருக்கிறது?

சுந்தரம்:—நான் இவர்களுடைய இளைய மாமனுர். என் தமயனுரும் நானும் வந்திருக்கிருேம். அவர் உள்ளே இருக்கிருர். நான் காற்றுக்காக இப்படி வந்து உட்கார்ந் தேன்.

குமாஸ்தா:—ஓகோ! அப்படியா! சந்தோஷம். நான் கேட்டதைப்பற்றி மனதில் ஆயாசம் கொள்ள வேண்டாம் —என்று கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தமது வேலையை கவனிக்கக் தொடங்கினுர்.

அதன் பிறகு சுமார் அரை மணி காலம் சென்றது. சுந்தரம் எழுந்து ஹாலிற்குப் பக்கத்தில் இருந்த நடைக் குப் போய் அங்குமிங்கும் உலாவத் தொடங்கினுர்.

அப்போது அங்கு ஒருவன் தோன்றி, "வக்கீல் ஐயா இருக்கிருர்களா?" என்று வினவினுன்.

சுந்தரம்:—வக்கீல் ஐயா தூங்கிக் கொண் டிருக்கிருர். என்ன விசேஷம்?

வந்தவன்:—அவரிடத்தில் இந்தக் கடிதத்தை கொடுக்க வேண்டும்.

சுந்தரம்:—கொடுத்துவிட்டுப் போம்; அவர்கள் எழுந்த வுடன் கொடுத்து விடுகிறேன்.

வந்தவன்:—சரி, கவனமாய்க் கொடுத்து விடுங்கள்— என்று கூறியபடியே உறையோடு கூடிய ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அந்த உறையின் பின் பக்கத்தில் ஐந்திடங்களில் அரக்கு முத்திரைகள் வைக்கப்பட்டிருந் தன. சுந்தரம் அதை வாங்கி, அதன் மேல் விலாசத்தைக் கூட பார்க்காமல் தமது சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு, "இதை யார் கொடுத்தது என்று வக்கீல் கேட் டால் என்ன சொல்வது" என்ருர்.

வந்தவன், "கடிதத்தைப் படித்துப்பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள். எல்லா விவரமும், அதில் இருக்கிறது. நான் மறுபடி மாலை ஏழு மணிக்கு வருவதாய்ச் சொல்லுங் கள்" என்று கூறிவிட்டு, வெளியில் போய்விட்டான்.

கடிதத்தைப் தமது சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்ட சுந்தரம் சுமார் பத்து நிமிஷ காலம் அங்குமிங் கும் உலாவியபடி இருந்து, திடீரென்று எதையோ நினைத் துக் கொண்டவர் போல விரைவாக உள்ளே சென்று, ஒரு ஸோபாவில் படுத்திருந்த கோபாலசாமியை அழைத்துக் கொண்டு, தமது அறையைத் திறந்து கொண்டு அவருடன் உள்ளே சென்று மறுபடி கதவை மூடி உள்புறத்தில் தாளிட்டுக்கொண்டு, தணிவான குரலில் பேசத் துடங்கி, "இப்போது இங்கே முக்கியமான ஓர் ஆசாமி வந்து விட்டுப் போனன்" என்ருர்.

கோபாலசாமி:—யார் அவன்?

சுந்தரம்:—கேடி நடேசன் வக்கீலுக்கு ஒரு கடிதம் கொண்டுவந்தான். அவரிடம் கொடுத்து விடுவதாகச் சொல்லி கடிதத்தை வாங்கி வந்திருக்கிறேன். அவன் மறு படி மாலை ஏழு மணிக்கு வருவதாக சொல்லிச் சென்றான்.

கோபாலசாமி:—கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாயா?

சுந்தரம்:—இதோ பார்க்கிறேன்—என்று கூறியபடி தனது பெட்டியைத் திறந்து, அதற்குள்ளிருந்த ஒரு திராவக சீசாவை எடுத்து, அந்த திராவகத்தை உறையின் ஒட்டு வாயில் தடவ, மூடப்பட்ட பாகம் சுலபத்தில் திறந்து கொண்டது. அரக்கு முத்திரைகள் கெடாமல் அப்படியப்படியே இருந்தன. உறைக்குள் ஒரு காகிதம் நான்காக மடிக்கப்பட்டு வைக்கப்பெற்றிருந்தது. சுந்தரம் அதை வெளியில் எடுத்துப் பிரித்து மனத்திற்குள்ளாகவே படித்துப் பார்த்துவிட்டு, "சபாஷ்! விஷயம் மிகவும் வேடிக்கையாய்த் தானிருக்கிறது" என்று வியப்போடு கூறியபடி கடிதத்தை மற்றவரிடம் கொடுக்க, அவரும் அதை விரைவாகப் படித்து விட்டு ஆச்சரியமடைந்து, "நல்ல வேளை தான் இது நம் கைக்கு வந்தது" என்ருர்.

அதற்குமேல் அவர்கள் மிகத் தணிவான குரலில் சுமார் ஐந்து நிமிஷ காலம் இரகஸியம் பேசிக் கொண்டிருந்தனர். அதன் பிறகு கோபாலசாமி கடிதத்தை வாங்கித் தமது சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு, அந்த அறையை விட்டு வெளிப்பட்டு, பங்களாவிற்கு வெளியில் எங்கேயோ போய்விட்டார்.

அதற்கு சுமார் ஒரு மணி காலத்திற்குப் பிறகு வக்கீல் விழித்துக்கொண்டு குமாஸ்தாக்களைப் பார்த்து, "நான் வெகு நேரம் தூங்கி விட்டேன் போல் இருக்கிறதே! கட்சிக்காரர்கள் யாரும் வரவில்லையே?" என்ருர்.

ஒரு குமாஸ்தா, "யாரோ ஒரு மனிதர் கொஞ்ச நேரத்திற்கு முன்பு உங்களுக்கு ஒரு கடிதம் கொணர்ந்தார். உங்கள் இளைய மாமனர் உங்களிடம் கொடுப்பதாகச் சொல்லி அதை வாங்கி வைத்துக்கொண்டார்" என்ருர்.

வக்கீல்:—அவர் இப்போது எங்கே இருக்கிருர்?

குமாஸ்தா:—உள்ளே போனுர்—என்ருர்.

உடனே வக்கீல் நாற்காலியை விட்டெழுந்து உள் பக்கத்தில் போக, சுந்தரம் எதிரில் வந்தார். அவரைக் கண்ட வக்கீல், "எனக்கு யாரோ கடிதம் கொண்டு வந்தார்களாமே! அது எங்கே?" என்றார்.

சுந்தரம்:—நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்களா! அது ஏதாவது முக்கியமானதாயிருக்குமென்ற நினைவினால் அதை மேஜையின் மேல் வைக்காமல், உள்ளே கொண்டு வந்து, உங்கள் மாமனாரிடம் கொடுத்து விட்டேன்.

வக்கீல்:—அவர்கள் எங்கே?

சுந்தரம்:—முன்பக்கந்தானே வந்தார்கள்—என்றார்.

அதைக் கேட்டுக் கொண்ட வக்கீல் முன் பக்கத்திற்குப் போய் சேவகனிடம் விசாரிக்க, கோபாலசாமி வெளியில் போய் விட்டதாகத் தகவல் தெரிவித்தான்.

அதைக் கேட்டுக்கொண்டு வக்கீல் திரும்பி வந்து வேறு வேலை எதிலோ தமது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்க, சுமார் அரை மணியில் கோபாலசாமி திரும்பி வந்து சேர்ந்தார்.

அவர் வந்தபோதே கடிதத்தை வக்கீலிடம் நீட்டியபடி வந்து, "நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது சுந்தரம் கொணர்ந்து இதை என்னிடம் கொடுத்தார். நீங்கள் விழித்துக்கொண்டவுடன் இதை உங்களிடம் கொடுக்க வேண்டுமென்று நினைத்து, இதை சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டேன்; வெளியில் போகும் போது மறந்தாற் போல் போய்விட்டேன். கடைத் தெருவண்டை போனவுடன், இதைப் பற்றிய நினைவு வந்தது. இதற்காகவே இப்போது திரும்பி வந்தேன். இதைக் கொடுத்த ஆள், சாயங்காலம் ஏழு மணிக்கு மறுபடி வருவதாகச் சொல்லிவிட்டுப் போனானாம்" என்றார்.

வக்கீல் அதை வாங்கி அது தமக்கு வந்ததுதானா என்பதை முதலில் நிச்சயப்படுத்திக் கொண்டார். அதில்

அரக்கு முத்திரைகள் இருந்ததைப் பார்க்கவே, எவரே னும் தமக்கு அதற்குள் கரென்ஸி நோட்டுகளை, அல்லது செக்கை வைத்து அனுப்பி இருப்பார்கள் என்று அவர் உடனே மனக்கோட்டை கட்டிக்கொண்டு அவசரமாக அதைக் கிழித்து உள்ளே பார்க்க, உட்புறத்தில் கடிதம் மாத்திரம் இருக்கவே வக்கீலின் முகம் ஏமாற்றத்தைக் காட்டியது. அவர் கடிதத்தைப் பிரித்துப் படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

வக்கீல் சுப்பிரமணியத்திற்கு எழுதியது. நான் உம்மைப் பார்க்க முடியாமல் போனால், இதைக் கொடுத்துவிட்டுப் போக வேண்டுமென்ற கருத்துடன் நான் இதை ஏற்கனவே எழுதிக் கொணர்ந்திருந்தேன். சோமசுந்தரம் என்பவனைப்போல மாறு வேஷம் போட்டுக்கொண்டு திருட்டுகளை நடத்துகிறவன் நான் தான். நான் நேரில் உம்மிடம் வந்தால், நீர் என்னுடைய அடை யாளத்தைக் கண்டுகொள்ளுகிறீரா இல்லையா என்பதை அறியும் பொருட்டே நேரில்வந்தேன். நீர் நல்ல சந்தர்ப்பத்தை இழந்தீர்.

ஆயினும், நான் உம்மை இதோடு விட்டுவிட எண்ணவில்லை. இரவு ஒருமணி சுமாருக்கு வர உத்தேசிக்கிறேன். சாமர்த்திய மிருந்தால், அப்போது என்னை நீர் பிடித்துக்கொள்ளலாம். இதைப் போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டாம். தெரிவித் தால் உமது மூக்கை இழப்பீர். —இப்படிக்கு,

போலி சோமசுந்தரம்.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த வக் கீலின் முகம் விகாரமாக மாறியது. அவருடைய மனதில் கோபம் பொங்கியது. அவர் உடனே தமது குமாஸ்தாக் களில் ஒருவரை அழைத்து, "நீ உடனே போலீஸ் ஸ்டேஷ னுக்கு ஓடி, ஸப்-இன்ஸ்பெக்டரைக் கண்டு, நான் அவ ரிடம் அவசரமான ஒரு சங்கதியைச் சொல்ல விரும்பு கிறேனென்று சொல்லி அவரை அழைத்து வா" என்றார். உடனே குமாஸ்தா விசையாக ஓடத் தொடங் கினான்.

இங்ஙனம் நிலைமை இப்படி இருக்க, ராமசாமி தமது நிலைமையைப்பற்றி எண்ணமிட்டபடி ஒரு தெருவோடு சென்று கொண்டிருக்க, எதிரில் வந்த ஒருவன், "நில்லும் ஐயா அப்படியே" என்று அதிகார தோரணையில் கூறவே அதைக்கேட்ட ராமசாமி வியப்போடு நிமிர்ந்து பார்த்தார்.

ராமநாதம் செட்டியாருடைய தாடி பொய்த் தாடி என்று கண்டுபிடித்தவனும், நடேசன் என்று குறிக்கப் பட்டவனுமான மனிதனே அவன் என்பது தெரியவே, ராமசாமி, "யாரப்பா நீ? பெரிய அதிகாரத்தோடு உத்தரவு இடுகிருய்!" என்ருர்.

நடேசன்:—ராமநாதம் செட்டியார் வீட்டிற்குள் போய் ஒளிந்துகொண்ட பிறகு, உமக்காக நாங்கள் எத்தனையோ பாடுகள் பட்டு கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனேம். நல்ல சமயத்தில் நீர் சொல்லாமல் போய் விட்டீரே!

ராமசாமி:—அது என்னுடைய இஷ்டத்தைப் பொருத் தது. அதைப்பற்றி உனக்கு ஆகவேண்டியுதென்ன?

நடேசன்:—நீர் நிஜத்தை என்னிடம் சொல்லாவிட் டால், உம்மை நான் இப்போது விடப்போகிறதில்லை. உம் மைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் போலீஸ் ஸ்டே ஷனில் ஒப்புவித்துவிடுவேன். அப்போது நீர் உம்முடைய இஷ்டம் என்று சொல்லித் தப்பித்துக்கொண்டு வந்து விடும்.

ராமசாமி:—போலீஸ்காரரிடம் லோல்பட எனக்கு விருப்பமில்லையாகையால், நான் அங்கிருந்து வந்துவிட் டேன். இதைப்பற்றி எனக்கில்லாத அக்கரை உனக்கு எங்கிருந்து வந்ததென்பது தெரியவில்லை. அந்த மனிதனுல் எனக்குப் பல கெடுதல்கள் நேரிட்டன. நானே அவைகளைப் பாராட்டாமல் விட்டுவிட்டேன். மற்றவருக்கு அதைப் பற்றி கவலை என்ன?

103303

நடேசன் :—என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வதில் மற்றவர்களுக்கு ஒரு திருப்தி. அதிருக்கட்டும். சுந்தரமூர்த்தி முதலியார் என்பவர் யார்? அவருக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்? அவர் உமக்கு என்ன விதத்தில் கெடுதல் செய்தார்? இதையெல்லாம் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதையெல்லாம் சொன்னால் நான் என்னாலானவரையில் உமக்கு நன்மை செய்ய முயற்சிக்கிறேன்.

ராமசாமி :—என் குடும்ப விஷயங்களையெல்லாம் நான் அயலாரிடம் சொல்லி பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. ஆகையால் நீ உன் வேலையை கவனித்துக்கொண்டு போ.

நடேசன் :—நான் போகத்தான் வேண்டுமா? சொல்ல மாட்டீரா?

ராமசாமி :—நீ போ அப்பா. என்னோடு அநாவசியமாக வம்பு வளர்க்காதே.

நடேசன் :—சரி; அதுவே உம்முடைய விருப்பமானால் அப்படியே செய்யத் தடையில்லை—என்று கூறியபடி அவ்விடத்தை விட்டு நடந்து அருகிலிருந்த ஒரு சந்திற்குள் நுழைந்து மறைந்து நின்று கவனித்தான்.

ராமசாமி அதற்குமேல் தாம் எவ்விடத்திற்குப் போவதென்பதை நிச்சயிக்க மாட்டாமல் அப்படியே நின்றார். தம்மைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு போவதாக பயமுறுத்திய அந்த மனிதன் அப்படிச் செய்யாமல் முரைப்பாகப் போனதைக் காண, அவருடைய மனதில் ஒருவிதமான திகில் ஏற்பட்டு விட்டது. அவன் என்ன கருத்தோடு போயிருப்பானோ, அவன் மறுபடி வந்து தம்மை உபத்திரவிப்பானோ என்னும் எண்ணங்களைக் கொண்டவராய் அந்த மனிதர், அருகிலிருந்த ஒரு திண்ணையில் சாய்ந்தபடி மலைத்து நின்றுவிட்டார்.

மறைவில் ஒளிந்து பார்த்த நடேசன் சரேலென்று விரைவாகச் சென்று ஐந்தாறு வீடுகளுக்கப்பால் பூட்டப்

பட்டிருந்த ஒரு வீட்டின் வாசலை அடைந்து, தன்னிட மிருந்த ஒரு திறவுகோலால் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து, தனது வேஷத்தை மாற்றிக் கொண்டு பத்து நிமிஷ காலத்தில் வெளியே வந்து மறுபடி கதவை மூடிப் பூட்டினன்.

அப்போது அவன் நரைத்துப்போன நீண்ட தாடி, சிவப்புத் தலைப்பாகை, நாமம், சட்டை முதலியவற்ருேடு காணப்பட்டதன்றி, அவன் நடேசன் என்று எவரும் சந் தெகியாதபடி முற்றிலும் வேறு மனிதன் போல் காணப் பட்டான்.

அவ்வாறு உரு மாறி வந்தவன், ராமசாமி அதே இடத்தில் நின்றதைக் கண்டான். தான் வீட்டிற்குள் நுழைந்து வேறு வேஷத்தில் வந்ததை அவர் தெரிந்து கொள்ளவில்லை என்பதை அவருடைய முகத்தோற்றத்தி லிருந்து நடேசன் நன்ருய் உணர்ந்து கொண்டான். அதே இடத்தில் மேலும் அரை நாழிகை காலம் நின்றபின் ராம சாமி புறப்பட்டு நடக்கத் தொடங்கினர். நடந்தவர் அடிக்கடி திரும்பிப் பார்த்தபடி சென்ருர். நடேசன் அவரை கவனிக்காதவன் போலவும், தன் சுயகாரியமாய்ப் போகிறவன் போலவும் பின் துடர்ந்து சென்ருன்.

ராமசாமி அந்தத் தெருவோடு சென்று அடுத்த தெருவை அடைந்து இடது கைப் பக்கத்தில் இருந்த இரண்டாவது வீட்டிற்குள் நுழைந்தார். அவர் அந்த வீட்டில்தான் குடியிருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டவனுய் நடேசன் அந்த வீட்டின் முன்னுல் வந்து, இப்புறம் அப்புறம் பல தடவைகள் போய் வந்து, உள்ளே வேறு மனிதர்கள் இருக்கிருர்களா என்று கவனிக் கத் தொடங்கினன். எவரும் அவனுடைய கண்ணில் பட வில்லை.

எனவே அவன் மெல்ல அந்த வீட்டின் வாசற் படியை அடைந்து உள்ளே நுழையத் தொடங்கினன்.

வாசற்படிக்கு அடுத்தாற்போல் நடையும், அதற்கப்பால் ஓர் அறையும் காணப்பட்டன. அறையின் கதவு மூடி வைக்கப்பட்டிருந்தது. அது அப்புறத்தில் தாளிடப்பெற்றிருந்ததா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற கருத்தோடு அவன் கதவின் மேல் மெதுவாகத் தன் வலது கையை வைக்க, கதவு திறந்து கொண்டது. உள்புறத்தில் சிறிது தூரத்தில் ஒரு நாற்காலியில் ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார், அவர் தாடிக்கார நடேசனைப் பார்த்து வியப்படைந்து, "யார் நீங்கள்? உங்களுக்கு என்னவேண்டும்?" என்றார்.

அதைக்கேட்ட நடேசன் சிறிதும் தயங்காமல், "ராமசாமிப் பிள்ளை எங்கே இருக்கிறார்? அவரை நான் பார்க்க வேண்டும்" என்றார்.

மற்றவர் :—அவர் மாடியில் இருக்கிறார்.

நடேசன் :—மாடியில் அவர் மாத்திரம் குடியிருக்கிறாரா?

மற்றவர் :—ஆம்.

நடேசன் :—ஒகோ! மாடியில் குடும்பத்தோடு குடியிருப்பது சாத்தியமோ?

மற்றவர் :—அவரோடு வேறு யாரும் இல்லை; அவர் நேற்று சாயங்காலம்தான் மாடியை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்.

நடேசன் :—சரிதான்; அவர் என் பழைய நண்பர். நான் போய் அவரைப் பார்க்கிறேன். நீங்கள் குடும்பத்தோடு இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

மற்றவர் :—ஆம். குடும்பத்தோடு தான் இருக்கிறேன். நீங்கள் மேலே போகலாம்—என்றார்.

நடேசன் :—சரி—என்று கூறியபடி ஓரடி வைத்த பின் எதையோ நினைத்துக்கொண்டு திரும்பி, "நீங்களும் பிள்ளைமார்தானே?' என்றான்.

மற்றவர் :—இல்லே இல்லே. நான் நாயக்கர்.

நடேசன் :—உங்கள் நாமதேயம் என்னவோ ?

மற்றவர் :—குப்புசாமி நாயக்கர்—என்ருர்.

அதைக் கேட்டுக் கொண்டே நடேசன் கதவை முன் போல மூடிவைத்துவிட்டு, உள்புறத்தில் நடந்தான்.

அவன் அந்த வீட்டிற்கு வந்து பழகினவன் போல நிரம்பவும் நிதானமாக வந்து, முற்றத்திலிருந்த படிக் கட்டை அடைந்து, அதிக ஓசை செய்யாமல் அதன்மேல் ஏறினன். அதன் உச்சியில் காணப்பட்ட வாசற்படியின் இரட்டைக் கதவுகள் மூடப்பட்டிருந்தன. அவன் உடனே கதவைத்திறக்க முயற்சிக்காமல், ஓசை செய்யாமல் நின்று கதவுகளின் இடுக்கினல் உள்பக்கத்தில் தனது பார்வை யைச் செலுத்தினன். அங்கு யாரும் காணப்படவில்லே. எனவே, அவன் தனது வலது கையை மெதுவாகக் கதவின் மீது வைக்க, அது மெல்ல உள்ளே நகரத் தொடங்கியது. அவன் ஓசையின்றி உள்ளே நுழைந்தான். அவ்விடத்தில் இரண்டு அறைகள் காணப்பட்டன. இரண்டிலும் மனி தர் இல்லே. ஓர் அறையில் ஒரு சிறிய ஸ்டவ் (Stove) தென்பட்டது. அதற்குப் பக்கத்தில் சமையல் செய்வதற் குரிய சில பாத்திரங்கள் இருந்தன. அந்த சாமான் யாவும் புத்த புதியவைகளாய்த் தோன்றின.

இன்னேர் அறையில் ஒரு பெட்டியும் படுக்கையும் காணப்பட்டன. அவைகளும் புதியவைகளாகவே இருந் தன. ராமசாமி பிள்ளே அத்தனே வயதிற்குப் பிறகு புதிதாய்க் குடித்தனம் செய்ய ஆரம்பித்திருக்கிருர் என்று நடேசன் உடனே அநுமானித்துக்கொண்டு, தனது மடியி லிருந்த சாவிக்கொத்தை எடுத்து, ஒன்றன்பின்னென்ரு கப் பல சாவிகளேப் போட்டுப் பார்த்து கடைசியில் ஒரு சாவியால் பெட்டியைத் திறந்தான்.

பெட்டிக்குள் சுமார் ஒரு முழ நீளமிருந்த இரண்டு காகித உறைகள் இருந்தன. அவற்றிற்குள் பல காகிதங்

கள் சொருகி வைக்கப்பட்டிருந்தன. உறைகளுக் கடியில் புதிய வஸ்திரங்கள் முதலியவை இருந்தன. நடேசன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு உறைகள் இரண்டையும் எடுத்துத் தமது சட்டைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு பெட்டியை மறுபடி மூடி வைத்துவிட்டு சரே லென்று வெளியில் வந்தான்.

அவன் எதிர்பாரா வகையில் ராமசாமி பிள்ளை அப் போது படிக்கட்டில் ஏறி மேலே வந்துகொண்டிருந்தார். உடனே நடேசன் நிரம்பவும் சந்தோஷ முகமலர்ச்சி காட்டி, "ஓகோ! நீங்கள் கீழேயா இருக்கிறீர்கள்! குப்பு சாமி நாயக்கர் தாங்கள் மேலே இருப்பதாகச் சொன்னார். அதனால் மேலே வந்து பார்த்தேன்" என்றான்.

ராமசாமி பிள்ளை திடுக்கிட்டு தாடி முதலிய வைகளுடன் இருந்த நடேசனை சந்தேகப் பார்வையாக உற்றுப் பார்த்து, சரேலென்று உள்ளே நுழைந்து, இரண்டு அறைகளிலும் தமது பார்வையைச் செலுத்தி, சாமான்கள் எல்லாம் சரியாய் இருக்கின்றனவா என்று பார்த்து நிச்சயப்படுத்திக் கொண்டு, மறுபடி நடேசனை நோக்கி, "யார் நீங்கள்?" என்றார்.

நடேசன் :—கீழே இருக்கும் குப்புசாமி நாயக்கருக்கு நான் சொந்தக்காரன்; இப்போதுதான் ஊரிலிருந்து வந் தேன். ராமசாமிப் பிள்ளை என்ற ஒருவருக்கு மாடியை விட்டிருப்பதாக அவர் சொன்னார். அதே பெயருடைய ஒருவரை எனக்குத் தெரியும்; நீங்கள் அவராயிருக்கலா மென்று நினைத்து உங்களைப் பார்க்க வந்தேன்.

ராமசாமி :—குப்புசாமி நாயக்கர் தம்முடைய தமயனார் சில தினங்களில் வருவார் என்று என்னிடம் சொன்னார். நீங்கள் அவருடைய தமையனாரோ?

நடேசன் :—ஓகோ! அப்படியா! என்னைப் பற்றி குப்பு சாமி ஏற்கனவே உங்களிடம் பிரஸ்தாபித்திருக்கிறானா!

அதிருக்கட்டும். இந்த இடம் உங்களுக்கு சௌக்கியமாயிருக்கிறதல்லவா?

ராமசாமி :—மாடியில் இருப்பதில், ஜலக்கஷ்டம்தான் கொஞ்சம் ஏற்படுகிறது.

நடேசன் :—ஆம், அது சகஜந்தானே; இருக்கட்டும். கூடிய சீக்கிரம் மாடியில் ஒரு குழாய் வைக்கும்படி ஏற்பாடு செய்துவிடுகிறேன். என்னுடைய தம்பிக்கு அவ்வளவு திறமை போதாது. நானேதான் இதையெல்லாம் கவனிக்க வேண்டும். குழாய் வைக்கிற வரையில், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் கீழே வந்து உங்களுடைய ஸ்தானம் முதலிய காரியங்களை முடித்துக் கொள்ளலாம். நீங்களே சமையல் செய்துகொள்ளுகிறீர்கள்போல் இருக்கிறது?

ராமசாமி :—ஆம், ஓட்டலில் சாப்பிட, நான் அவ்வளவு பணம் படைத்தவனல்ல.

நடேசன் :— உங்களுக்கு உத்தியோகம் ஏதாவதுண்டா ?

ராமசாமி :—அதெல்லாம் ஒன்றுமில்லை. சாப்பிடுவதும் தூங்குவதுமே என் உத்தியோகம்.

நடேசன் :—வயதானவர்களுக்கு அதைவிட சிலாக்கியமான காரியம் வேறு என்ன இருக்கிறது. எனக்குக் கீழே கொஞ்சம் அவசர காரியமிருக்கிறது. நான் போய் அதைப் பார்த்துவிட்டு மறுபடி வருகிறேன். சாவகாசமாய்ப் பேசிக் கொண்டிருக்கலாம்.

ராமசாமி :—சரி; செய்யுங்கள். நீங்கள் எந்த ஊரிலிருந்து வந்தீர்கள் ?

நடேசன் :—இதோ பக்கத்தில் இருக்கும் பெருச்சாளிப்பட்டியிலிருந்து வந்தேன்.

ராமசாமி :—அந்த ஊரில் பந்துக்கள் எவர்களாவது இருக்கிறார்களா ?

நடேசன்:—யாருமில்லை. என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். ஒரு காரியத்தை உத்தேசித்து நான் அவரிடம் போயிருந்தேன். அந்த ஊரில் உங்களுடைய பந்துக்கள் எவர்களாவது இருக்கிறார்களா?

ராமசாமி:—பந்து ஒருவர் எப்போதோ இருந்தார். அவர் பல வருஷங்களுக்குமுன் இறந்து போய்விட்டார்.

நடேசன்:—அந்த ஊரில் இருந்தவர்கள் இருப்பவர்கள் ஆகிய எல்லோரையும் நான் அறிவேன். உங்கள் பந்து எந்தத் தெருவில் இருந்தார்.

ராமசாமி:—மலையடிவாரத்தில்தான் அவருடைய வீடு இருந்தது. அவர் பெயர் பழனியப்பர்.

நடேசன்:—அவர் உங்களுக்கு எந்தவிதத்தில் உறவினர்?

ராமசாமி:—ஏதோ ஒரு விதத்தில் பந்து. இறந்துபோனவர் இனி நமக்கு எப்படி பந்துவாவார். விட்டுத் தள்ளுங்கள்.

நடேசன்:— உங்களுக்கு சம்சாரம், குழந்தைகள் முதலியோர் இருக்கிறார்களல்லவா?

ராமசாமி:—சம்சாரம் இறந்துவிட்டாள்! எனக்கு ஒரு பெண்தான் உண்டு. அவள் புருஷன் வீட்டில் இருக்கிறாள். ஒரு காரணத்தினால் நான் அவர்களை அநேக வருஷ காலமாய்ப் பார்க்கவில்லை. அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியாது.

நடேசன்:—மாப்பிள்ளையின் பெயர் என்ன? அவர் எந்த ஊர்.

ராமசாமி:—மாப்பிள்ளை இந்த ஊர்தான். அவரை எஸ். மணி என்று கூப்பிடுவார்கள். அவருக்கு வக்கீல் உத்தியோகம்—என்றார்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை முடிந்தது. ராமசாமி உள்ளே போய்ப் பெட்டியைத் திறப்பதற்கு

முன் தான் வெளியில் போய்விட வேண்டுமென்ற எண்ணத்தினுல் தூண்டப் பட்டவனுய் நடேசன் மள மளவென்று கீழே இறங்கி, ஒரே பாய்ச்சலில் நடைக்கு வந்தான். அங்கிருந்த அறையின் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. குப்புசாமி நாய்க்கர் உள்புறத்தில் உலாவிக்கொண்டிருந்தார்.

நடேசன், "நான் போய் வருகிறேன். நமஸ்காரம்" என்று கூறி கைகுவித்தப்படி வெளியில் நழுவி சிறிது தூரம் சென்றவுடன், பக்கத்திலிருந்த ஒரு சந்தில் நுழைந்து ஓட்டமும் நடையுமாகச் செல்லலானுன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த வீட்டிற்குள்ளிருந்து, "திருடன், திருடன், பிடி, பிடி, விடாதே" என்று கூச்சலிட்டுக் கொண்டு, ராமசாமி பிள்ளையும், குப்புசாமி நாயக்கரும் வெளியில் ஓடிவர, தெருவில் சென்றவர்களும், அண்டை வீட்டுக்காரர்களும் வியப்படைந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்குத் துணைசேர்ந்துகொள்ள, எல்லோரும் சந்தின் வழியாகவே திருடன் போயிருக்க வேண்டுமென்று நினைத்து, அதன் வழியாக ஓடலாயினர்.

---

## 4. உண்டமுலை யறுக்கும் கண்டகப் பேயன்

கந்தசாமி செட்டியாரிடம் குமாஸ்தா வேலைபார்த்த தேண்டபாணி என்பவர் ஒரு பெரிய மாயாவி என்று நாம் துணிந்து கூறலாம். அவருடைய பூர்வீக ஊர் கும்பகோணத்திற்கு மிக அருகில் உள்ள ஒரு சிறிய கிராமம். அவர் அங்கிருந்து நரியூரில் வந்து குடியேறி பல வருஷங்கள் ஆகிவிட்டன. அவர் தெய்வ பக்தியைக் கரை கண்டவர் போல் நடிப்பதில் அபார சாமர்த்தியம் வாய்ந்தவர். அதற்கு அநுசரணையாக அவர் சில தந்திரங்களை அநுஷ்டித்து வந்தார். அவர் தினம் மூன்று காலங்களிலும் குழைத்து இடும் விபூதி பட்டணம் படியால் சரியாக கால்

படிக்கு எட்டும். கழுத்தில் எப்போதும் ஓர் உருத்திராக்ஷ மாலே இருந்துகொண்டே இருக்கும். அவருடைய வஸ்திரங்கள் எல்லாம் ஜாப்ரா விதைச் சாயம் ஏற்றப்பட்டு, நீர்க்காவியின் நிறத்தைப் பெற்றிருந்தமையால் அவர் பக்கா சந்நியாசத்தை எட்டிப் பிடிக்கும் தருணத்தில் இருப்பவரைப்போல் காணப்படுவார். அவருடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும், அவர் மகா சத்திய சந்தர் என்பதற்கு சாட்சிகளாய் ஜ்வலிக்கும். ஆனுல், படிக்கிறது பகவத்கீதை, குடிக்கிறது ஒரு குடக் கள் என்பதுபோல அவருடைய மறைவான செய்கைகள் யாவும் மிகவும் இழிவானவைகளாகவே இருக்கும்.

அவருடைய குடும்பம் அதீதமாகப் பெருகிப் போய் விட்டதாகையாலும், அவர் செட்டியாரிடம் பெற்ற சொற்ப சம்பளத்தை வைத்துக்கொண்டே காலக்ஷேபம் நடத்த வேண்டியவரா யிருந்தமையாலும், இந்தப் பகல் வேஷம் அவருக்கு இன்றியமையாத தாகிவிட்டது. அவருக்கு இரண்டு தாரங்கள் ஏற்பட்டிருந்தனர். அவருக்கு மூத்த மனேவியின் மூலம் ஆறு பெண்களும், இரண்டாவது மனேவியின் மூலம் மூன்று பெண்களும் மூன்று பிள்ளேகளும் பிறந்திருந்தனர். ஐந்து பெண்களேப் பெற்ருல் அரசனும் ஆண்டியாவான் என்று ஜனங்கள் பழமொழி சொல்வதுண்டு. ஆனுல் ஒன்பது பெண்களேப் பெற்றும், நமது தெண்டபாணி வெளி வேஷத்தில் மாத்திரம் ஆண்டியாயிருந்து கொண்டு உள்ளுக்குள் ஏராளமான செல்வத்தைக் கையாடிக்கொண் டிருந்தாரென்ருல், அவருடைய வேலேத் திறம் எப்படிப்பட்டது என்பது கூருமலே விளங்கும்.

ஒன்பது பெண்களில் ஆறு பெண்களுக்கு விவாகம் நடந்து விட்டதன்றி, ஆறு மாப்பிள்ளேகளும் மாமனுருடைய வீட்டிலேயே நிரந்தரமாய் முகாம் செய்துகொண் டிருந்தனர். அவர்களுக்கு தலேக்கு இரண்டொரு குழந்தைகள் ஜனித்திருந்தனர். கந்தசாமி செட்டியார் தமது

குமாஸ்தாவுக்கு ஒவ்வொரு மாதமும் கொடுத்த சம்பளம் பத்தே ரூபாய்தான். அந்த சொற்ப தொகையை வைத்துக்கொண்டு, அவர் அவ்வளவு பெரிய குடும்பத்தை எப்படித்தான் காப்பாற்றினர் என்பது எவராலும் அறிய முடியாத பெரிய மர்மமா யிருந்தது. அந்த வீட்டை ஒரு குடும்பமுடைய ஒரு வீடு என்று சொல்வதைவிட எட்டுக் குடும்பங்கள் வசித்த ஒரு சந்தைக் கூட்டம் என்று குறிப்பதே முற்றிலும் பொருத்தமான தாகும்.

தெண்டபாணிக்கு செட்டியார் கொடுத்த பத்து ரூபாய், ஆனைப் பசிக்கு சோளப் பொறிபோ லிருந்ததானாலும், அந்த உத்தியோகத்தை விட்டுவிட மனமற்றவராய் அவர் அதைக் காப்பாற்றிக்கொண் டிருந்தார். ஏனென்றால், செட்டியாரிடம் லக்ஷக் கணக்கில் பணம், நகைகள் முதலியவை புரண்டனவாதலால், சமயம் பார்த்து பெரிய தொகையாய் அபகரித்துவிட வேண்டுமென்ற கருத்துடன், சொற்பத் தொகை விஷயத்தில் மிகவும் நாணயமாகவும், கண்டிப்பாகவும் நடந்து, பரம யோக்கியமான மனிதர் என்று பெய ரெடுத்திருந்தார்.

செட்டியாருடைய வீட்டில் அவர் காலை வேலைகளில் இரண்டே மணி நேரம் இருந்து கணக்கெழுத வேண்டியதைத் தவிர, அவ்விடத்தில் அவருக்கு வேலை இல்லையாதலால், அவர் நாள் முழுதும் இதர இடங்களில் பொய், புரட்டு முதலியவற்றின் மூலம் பல வகைகளில் பொருளை அபகரித்துக் கொணர்ந்து போடுவார். அவ்வளவு பெரிய குடும்பத்திற்கு எவ்வளவு பணம் வந்தாலும், அது போதவில்லையாதலால், வீட்டில் எப்போதும், அது இல்லை, இது இல்லை என்ற குறையும் கூப்பாடுமாகவே இருக்கும். மாப்பிள்ளைகள் பெண்கள் முதலியோர் ஒருவருக்கொருவர் அற்ப விஷயங்களைப்பற்றியும் பொருமை, குரோதம் முதலியவை பாராட்டி, சதா காலமும் வைது, சண்டையிட்டு பயங்கரமான பாரதப் போர் நடத்திக்கொண் டிருந்தனர்.

அதைப்பற்றி ஊர் சிரித்ததாகையால், தெண்டபாணியின் குடும்ப நிலைமை முற்றிலும் மானக் கேடானதா யிருந்தது. ஆகவே, அவர் அத்தனைக்கும் தமது ஏழ்மை நிலைமையே அடிப்படையான காரணமென்று நினைத்து, தாம் எந்த வகையில் அதி சிக்கிரத்தில் கந்தசாமி செட்டியாரிடமிருந்து பெரிய பொருளை அபகரிக்கலா மென்று தமக்குள் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். செட்டியார் திறவுகோல்களை எப்போதும் தம்மிடம் ஜாக்கிரதையாகவே வைத்துக்கொண் டிருந்தார். அவருடைய வீட்டில் சொத்துகள் களவாடப் பட்ட பின்னர், மிகுதியிருந்த பொருள்களை முன்னிலும் அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொண்டிருந்தா ராதலால், தெண்டபாணி தமக்குள் அபாரமான சஞ்சல மடைந்து தத்தளித்துக்கொண் டிருந்தார்.

அந்த நிலைமையில் ஒரு நாள் காலையில் தபால் மூலமாக அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அது அடியில் வருமாறு எழுதப்பட் டிருந்தது:—

தெண்டபாணி அவர்களுக்கு எழுதியது,—நீர் இன்றைய தினம் இரவு ஒன்பதே கால் மணிக்கு செட்டித் தெருவு 99-வது வீட்டிற்குத் தனியாக வந்து என்னைப் பார்க்கவும். அதனால் உமக்கு நூறு ரூபாய் வருமானம் ஏற்படும் என்பதை அறியவும்.—ஒரு நண்பன்.

—என்று அந்தக் கடிதத்தில் விஷயம் காணப்பட்டது. அதைப் படித்தவுடன் தெண்டபாணியின் மனம் துடித்துப் பறந்தது. இரவு எப்போது வருமென்று ஆவலோடு காத்திருந்து, சரியாக ஒன்பதே கால் மணிக்கு அவர் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். திண்ணையில் ஆயத்தமாய்க் காத்திருந்த ஷை நண்பர் அவரை உள்ளே அழைத்துக்கொண்டு போய் சுமார் அரை மணி காலம் வைத்திருந்து, அவரால் தமக்கு ஆகவேண்டிய காரியத்தைச் சொல்லி, நூறு ரூபாய் பணத்தை அவரிடம் கொடுக்க,

அவர் அதை வாங்கித் துணியில் வைத்து பத்திரமாய் முடித்துக்கொண்டு வெளியில் வந்து ஐந்து நிமிஷ காலத்தில் தமது வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அன்றைய காலேயில் வந்த கடிதத்தின் உள் விவரம் இரண்டு மனேவிகள், ஆறு மாப்பிள்ளேகள், வயதான பெண்கள் முதலியோர் அனேவருக்கும் தெரிந்திருந்த தாகையால், அது பொய்யா யிருக்குமா, அல்லது, உண்மை யில் பணம் கிடைக்குமா என்பதை அறிய அவர்கள் ஆவல்கொண் டிருந்தனர். ஆகவே, தெண்டபாணி உள்ளே நுழைந்தவுடன், எல்லோரும் வந்து அவரை மொய்த்துக் கொண்டு, பணம் கிடைத்ததா வென்று ஆவலோடு கேட்க லாயினர்.

நெண்டபாணி உடனே பணத்தைக் காட்டி, “இவ் வளவு பெரிய தொகை எவ்வித பிரயாசையு மில்லாமல் கிடைக்குமென்று நான் நினேக்கவே இல்லே. தினம் தினம் யாராவது இந்த மாதிரி கூப்பிட்டு நூறு ரூபாயைக் கொடுத்து ஒரு கும்பிடும் போட்டு அனுப்பினுல், நம் பாடு வேட்டையாய்த்தா னிருக்கும்” என்ருர்.

மாப்பிள்ளே:—இதைக் கொடுத்தவன் உங்களிடம் எந்த அநுகூலத்தையும் எதிர்பார்க்காமலா கொடுத்தான்?

தெண்டபாணி:—அப்படி எந்தப் பைத்தியக்காரனும் கொடுக்க மாட்டான். அவன் இரும்புப் பெட்டிகள் செய் யும் வியாபாரியாம். நம்முடைய கந்தசாமி செட்டியார் இப்போது சொத்துக்களே வைத்திருக்கும் பெரிய பெட்டி மிக அபூர்வமான பெட்டியாம். தான் அதைப்போல் பெட் டிகள் தயாரிக்க வேண்டுமாம். அவைகளேத் தயாரிப்பது ஒரு பெரிய காரியமில்லேயாம். ஆனல், சாவி நுழையும் வாயில் முக்கியமான ரந்திரம் அடங்கி யிருக்கிறதாம். திறவுகோல் நுழைக்கப்படும் வாய் எப்படி இருக்கிறதென் பது தெரியவேண்டுமாம். அந்த வாயைச் சுற்றிலும் தேன் மெழுகை வைத்து அழுத்தி அதை அப்படியே கொண்டு

வந்து தன்னிடம் கொடுக்கவேண்டு மென்று சொல்லி, அதற்காக இந்தப் பணத்தை அவன் கொடுத்தான்.

மாப்பிள்ளை:—அந்த மெழுகில் படும் குறியை வைத்துக் கொண்டு சாவி தயார் செய்தால், அது சரியா யிருக்கு மென்ற நிச்சயம் என்ன ?

தெண்டபாணி:—அவன் சாவி தயார் செய்து, என்னிடம் கொடுப்பானும். அதைக் கொண்டுவந்து ரகஸியத்தில் நான் பெட்டியைத் திறந்து பூட்டினுல், அந்த சாவியை வைத்துக்கொண்டே அவர்கள் பெட்டி தயாரித்துவிடுவார் களாம். அதற்காக அவன் இப்போது இந்தப் பணத் தைக் கொடுத்தான். சாவி சரிப்பட்டுப்போன பிறகு, இன்னம் ஐம்பது ரூபாய் தருவதாகச் சொன்னுன்.

மாப்பிள்ளை:—சாவி சரியாய்ப் போனுல், அதை அவனி டம் கொடுக்காமல் நாமே வைத்துக்கொண்டால், செட்டி யாருக்குத் தெரியாமல் நாம் பெட்டியைத் திறந்து பெரிய தொகையாய் எடுத்துக்கொண்டு வந்துவிடலாமே.

தெண்டபாணி:—அதுதான் என்னுடைய ஆந்திரிகமான கருத்து. நாளைய தினம் காலையிலேயே மெழுகை அழுத்தி, அதைக் கொண்டுபோய் இந்த ஆசாமியிடம் கொடுத்து விடுகிறேன்—என்ருர்.

அதேபோல தெண்டபாணி மறுநாளைக் காலையில் கணக்கெழுத செட்டியாருடைய வீட்டிற்குச் சென்றிருந்த காலத்தில், செட்டியார் ஏதோ காரியமாய் பின்பக்கத்திற் குப் போயிருந்த சமயம் பார்த்து, மெழுகைப் பூட்டின் வாயில் அழுத்தி, அதை எடுத்து ஒரு காகிதத்தில் சுற்றி மறைத்து வைத்துக்கொண்டார்.

தெண்டபாணி தமது வேலையை முடித்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு 99-வது வீட்டிற்குப் போய் மெழு கைக் கொடுத்து, தாம் மறுநாள் மாலையில் வருவதாகச் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து தமது சாப்பாட்டை முடித்துக்கொண்டார்.

அன்றைய தினம் பிற்பகலில் அடுத்த ஊரில் நடக்க இருந்த ஒரு கலியாணத்திற்கு அவர் போகக் கருதி யிருந்தாராதலால், அவர் உடனே புறப்பட்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடக்கலானார். அதுவரையில், அவருடைய வீட்டின் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதன் தெண்டபாணியின் பின்னால் தொடர்ந்துவர ஆரம்பித்தான். அம்மாதிரி ஒருவன் தம்மை கவனித்துக்கொண்டு பின்னால் வருகிறான் என்பதை அறியாத தெண்டபாணி ரயில்வே ஸ்டேஷனை அடைந்து, மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் உட்காருமிடத்தில் கிடைந்த ஒரு பெஞ்சுப் பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டார்.

சுமார் இரண்டு நிமிஷ காலத்திற்குப் பிறகு, ஒரு மனிதன் வந்து தமக்கு சமீபத்தில் அதே பலகையின் உட்கார்ந்து ஐந்துநிமிஷ நேரம் இருந்தபின் எழுந்து போனதை அவர் கண்டார். அவருடைய வீட்டிலிருந்து அவரைப் பின் தொடர்ந்து வந்த மனிதனும் சற்று தூரத்தில் நின்று அவரை கவனித்துக் கொண்டிருந்தான்.

பெஞ்சுப் பலகையில் ஒருவன் உட்கார்ந்திருந்து எழுந்து போனபின் அந்த ஆசனத்தில் வெண்மையாகக் காணப்பட்ட ஒரு வஸ்து தெண்டபாணியின் கவனத்தைக் கவர்ந்தது. அவர் உடனே அதை உற்று நோக்க, அது ஒரு காகித மடிப்பு என்பது தெரிந்தது. அதற்குள் நோட்டு முதலிய விலைபெற்ற வஸ்து ஏதேனும் இருந்தால், தாம் அதை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தெண்டபாணியின் மனதில் உதித்தது. ஆகவே, அவர் பெஞ்சில் படுத்துக்கொள்ள முயல்கிறவர்போல், கடிதமிருந்த பக்கத்தில் தமது உடம்பை சாய்த்து, கையை அடியில் கொடுத்துக் காகிதத்தை எடுத்துப் பார்த்தார். உடனே அவர் திடுக்கிட்டார். ஏனென்றால், அவருடைய மேல் விலாசம் அந்தக் கடிதத்தில் காணப்பட்டது. அவர் மிகுந்த ஆவல் கொண்டவராய் சரேலென்று நிமிர்ந்து உட்கார்ந்து

கொண்டு, அதைப் பிரித்துப் படித்தார். அது அடியில் வரு வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

தெண்டபாணி அவர்களுக்கு எழுதியது, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் கண்டசனுகிய உன்னை எண்ணெய்ச்செக்கில் வைத்து ஆட்டுவதுகூட சரியான தண்டனை ஆகாது. நீ நேற்றிரவு எங்கு சென்றிருந்தா யென்பதும், இன்று பகலில் நீ என்ன செய்தாயென்பதும் போலீசாருக்குதெரியும். நீ கொடுத்த மெழுகு அடையாளத்திலிருந்து அவன் சாவி செய்து கொடுத்தால், அது செட்டியாருடைய பெட்டியை சரியாய்த் திறந்து பூட்டுகிறதா என்று நீ பார்த்து மறுபடி அதைக் கொண்டுபோய் அவனிடம் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறுய். அவன் கொடுக்கும் சாவியை வைத்துக்கொண்டு நீயே பெட்டியைக் காலி செய்துவிட நினைத்தாலும் நினைக்கலாம். ஆனுல், அவன் முட்டாளல்ல. அவன் இரண்டு சாவிகள் தயாரித்து ஒன்றை உன்னிடம்கொடுத்துவிட்டு, மற்றதை அவன் வைத்துக் கொண்டு அதைப் பின்னுல் உபயோகப்படுத்துவான்.

ஆகையால், நீ இனி அவனுக்கு உதவி செய்தாலும், அவனுடைய வீட்டிற்குப் போனுலும் உன்னை உடனே கைதி செய்து தண்டனைக்குக் கொண்டுபோய் விடுவோம். இதுவரையில் நீ அவனுக்குச் செய்த உதவியோடு நீ அவனுடைய சகவாசத்தை விலக்கிக்கொள். தவறினுல், நீ பெரிய துன்பத்தில் மாட்டிக்கொள்வாய் என்பது நிச்சயம்—சோமசுந்தரம்.

—என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த தெண்டபாணியின் முகம் விகாரமாக மாறியது. அவர் குயுக்திக்கார மனிதராதலால், அவருடைய மனதில் உடனே ஓர் எண்ணமுண்டாயிற்று. தமக்கு நூறு ரூபாய் கொடுத்து, மெழுகை இரும்புப் பெட்டிப்பூட்டின் வாயில் அழுத்திக்கொணர்ந்து கொடுக்கச் செய்தவனே அந்தக் கடிதத்தை எழுதி அந்த ஆள்மூலம் அனுப்பி இருக்க வேண்டு மென்றும், அவன் சாவியைத் தம்மிடம் கொடுக்க விரும்பவில்லை யாகையால் அவ்வளவோடு தமது சந்தர்ப்பத்தைக் கத்திரித்துக் கொள்

வதற்காக அந்த மாதிரி தந்திரம் செய்திருக்கிறானென்றும் அவர் நினைத்துக் கொண்டார்.

அவனால் தயாரிக்கப்படப் போகும் திறவுகோலை வைத்துக்கொண்டு, தாம் செட்டியின் பொருளை அபகரித்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று நினைத்துக் கட்டி இருந்த மனக்கோட்டை ஒரே நிமிஷத்தில் இடிந்து தரை மட்டமாய் விட்டதே என்ற ஏமாற்றம், ஏக்கம், கோபாவேசம் முதலிய உணர்ச்சிகள் பலமாக எழுந்து அவருடைய நல்ல அறிவை சீர்குலைத்து விட்டதாகையால், அவர் தமது கோபத்தில் அந்தக் கடிதத்தைக் கசக்கிக் கீழே எறிந்தார். தாம் கலியாணத்திற்குப் போவதை நிறுத்திக் கொண்டாவது அந்த மனிதனிடம் போய், தாம் இரகசியத்தை கந்தசாமி செட்டியிடம் வெளியிட்டு விடுவதாகச் சொல்லி பயமுறுத்திப் பார்க்கலாமென்ற நினைவைக் கொண்டவராய் சரேலென்று எழுந்து சென்று ஸ்டேஷனை விட்டு சுமார் நூறு கஜ தூரம் ரஸ்தாவோடு சென்றார்.

அப்போது அவருடைய மனதில் இன்னோர் எண்ணமுதித்தது. தாம் அந்த மனிதரிடம் போய்க் கோபித்துக் கொள்ளும்போது, அவன் அந்தக் கடிதத்தைக் காட்டச் சொன்னால், தாம் அதைக் காட்டுவதே உசிதமானதென்று கருதி, தம்மால் கீழே போடப்பட்ட கடிதத்தை எடுத்துக் கொண்டு போக வேண்டுமென்ற தீர்மானத்துடன் திரும்பவும் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, தாம் உட்கார்ந்திருந்த பலகையண்டை தேடிப் பார்த்தார்.

அவரால் கசக்கி எறியப்பட்ட காகிதம் காணப்படவில்லை. அவர் சுற்றுமுற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்து விழித்துக்கொண்டு கலங்கி நின்றபின், தாம் அதற்குமேல் என்ன செய்வதென்பதை நிச்சயிக்கமாட்டாமல் தலையைச் சொரிந்துகொண்டு வாட்டத்தோடு மறுபடி பெஞ்சுப் பலகையின்மேல் உட்கார்ந்து கொண்டார் அவருடைய மனது பெரிதும் கலவரமடைந்து குழம்பிப்போயிருந்ததாகையால்

ஸ்டேஷனில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு தரம் மணி அடிக்கப்பட்டதையும், ஜனங்கள் டிக்கெட்டுகள் பெற்றுக் கொண்டு உள்ளே போய்விட்டதையும், ரயில் வந்ததையும் கவனிக்காமல் இருந்துவிட்டார். ரயில் அந்த ஸ்டேஷனில் இரண்டு நிமிஷகாலமே நிற்பது வழக்கமாதலால், அது புறப்பட்டுப்போய்விட்ட தென்பதையும் அறியாமல் அவர் பித்துப் பிடித்தவர்போல் பெஞ்சியின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அவருடைய வீட்டிலிருந்து அவரைப் பின் தொடர்ந்து வந்த மனிதன், அதுவரையில் சற்று தூரத்தில் நின்றிருந்த பின் அதே 'பெஞ்சுப் பலகையின்மேல் உட்கார்ந்து, இரண்டு நிமிஷகாலம் கழித்தபின் அவரைப் பார்த்து, "நீங்கள் எந்த ஊருக்குப் போகவேண்டும்?" என்றான்.

அதைக்கேட்ட தெண்டபாணி உடனே சுய உணர்வை யடைந்தாரானாலும், செவிடனைப் போல, "என்ன அது? என்ன கேட்கிறாய்?" என்றார்.

மற்றவன்:—நீங்கள் எந்த ஊருக்குப் போகிறவர்கள் என்று கேட்டேன்.

தெண்டபாணி:—அடுத்த ஸ்டேஷனுக்குப் போக வேண்டும்.

மற்றவன்:—ரயில் இப்போதுதானே போகிறது. ஏன் ஏறவில்லை? இனி இரவு ஏழு மணிக்குத்தானே மறுபடி வண்டி இந்தப் பக்கம் போகும்.

தெண்டபாணி:—ஆம். என்ன செய்கிறது. இந்த வண்டி தவறிப் போய்விட்டது.

மற்றவன்:—வண்டி எங்கே தவறிற்று! வண்டி வருவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே நீங்கள் வந்து இந்த பெஞ்சியில் உட்கார்ந்திருந்ததை நான் பார்த்தேனே!

தெண்டபாணி:—அது வாஸ்தவம்தான். ஆனாலும் இந்த வண்டியில் போகமுடியாதபடி ஓர் இடைஞ்சல் உண்டாகி விட்டது. அதனால் நான் போகவில்லை.

மற்றவன்:—ஓகோ அப்படியா! கொஞ்ச நேரத்திற்கு முன் இங்கெல்லாம் எதையோ தேடினீர்களே! டிக்கெட் வாங்கக் கொண்டுவந்த பணத்தைப் போட்டுவிட்டீர்கள் போல் இருக்கிறது?

தெண்டபாணி:—ஆம். பணத்தைத்தான் போட்டுவிட்டேன். அப்போது முதல் நீ இங்கே நின்று கொண்டிருப்பதாகச் சொல்லுகிறாயே! நான் இவ்விடத்தை விட்டுக் கொஞ்ச நேரம் வெளியில் போயிருந்தேனே. அப்போது இங்கே யாராவது வந்தார்களோ?

மற்றவன்:—யாரோ ஒருவர் வந்தார். ஏன் கேட்கிறீர்கள்?

தெண்டபாணி;—நான் எழுந்து வெளியில் போனதற்கு முன் ஒரு மனிதன் இங்கே வந்து உட்கார்ந்ததை நீ ஒரு வேளை கவனித்திருக்கலாம். அதேமனிதன்தான் மறுபடியும் வந்தானா?

மற்றவன்:—ஆம். அவனேதான் மறுபடியும் வந்தான். நீங்கள் கசக்கிப் போட்ட காகிதத்தை எடுத்துக்கொண்டு அவன் விசையாக வெளியில் போய்விட்டான். அந்தக் கடிதத்தை அவன்தானே பெஞ்சியில் வைத்தான். நீங்கள்படுத்துக் கொள்வதுபோலப் பாசாங்கு செய்து சாமர்த்தியமாய் அதை எடுத்துக் கொண்டீர்களே. அவன் வைத்த கடிதத்தை அவனே எடுத்துக்கொண்டு போய்விட்டான்போல் இருக்கிறதே!

தெண்டபாணி:—அவன் எந்தப் பக்கம் போனான்?

மற்றவன்:—அவன் கடிதத்தை எடுத்துக் கொண்டு போனபோது, நீங்கள் மறுபடி வந்தால், உங்களிடம் ஒரு விஷயம் தெரிவிக்கச் சொன்னான். அதைச் சொல்லவே தான் நான் இங்கே நின்றேன்.

தெண்டபாணி:—என்ன விஷயம்?

மற்றவன்:—நீங்கள் யாரிடத்தில் மெழுகைக் கொடுத்தீர்களோ அவனிடம் போனால், அவன் அவசியம் உங்க

ளேக் கம்பத்தில் கட்டி எலும்புகளை நொறுக்கி அனுப்புவானென்று உறுதியாய்ச் சொல்லச் சொன்னான். அதைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சரியம் உண்டாகி விட்டது. அவ்வளவு தூரம் தைரியமாய் வேலை செய்யக் கூடிய சிப்பாய் யாரென்று நான் அவனிடம் கேட்டேன். அதை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி சொல்லிவிட்டு அவன் விசையாகப் போய்விட்டான்.

தெண்டபாணி:—ஓகோ! அப்படியா சொன்னான்! இது பெரிய அயோக்கியத்தனமா யிருக்கிறதே! என்னுடைய பெட்டியின் சாவி காணுமல் போய்விட்டது. பூட்டின் வாயில் மெழுகை வைத்து அழுத்திக் கொணர்ந்து கொடுத்தால், தான் சாவி செய்துகொடுப்பதாகச் சொன்னான். நான் செய்தேன். இப்போது நான் சாவி கேட்டால் அதன்படி என்னை மிரட்டுகிருன்.

மற்றவன்:—அவனுடைய விலாசம் என்ன?

தெண்டபாணி:—செட்டித் தெருவு.

மற்றவன்:—செட்டித் தெருவில் இருக்கிறவர்கள் எல்லோரையும் நான் அறிவேன். அவர்களில் சாவி செய்து கொடுக்கக் கூடியவர்கள் யாருமில்லையே. அந்தத் தெருவில் உள்ளவர்களுக்கு சாவி வேண்டுமானால், என்னிடம் தான் வருவார்கள். ஏனென்றால், நான் பலருக்கும் இரும்புப் பெட்டிகள் செய்து கொடுத்திருக்கிறேன்.

தெண்டபாணி:—உங்கள் பெட்டிகள் பழைய மோஸ்தரா? புது மோஸ்தரா?

மற்றவன்:—நாங்கள் இரண்டு விதமான பெட்டிகளும் சய்கிறோம்.

தெண்டபாணி:—ஒரு பெட்டி செய்ய எவ்வளவு காலம் பிடிக்கும்?

மற்றவன்:—மூன்றே தினங்களில் செய்து கொடுப்போம்.

தெண்டபாணி :—பூட்டு, சாவி முதலியவைகளைச் செய்வது உள்பட மூன்று தினங்களா ?

மற்றவன் :— பூட்டும், சாவியும் சீமையிலிருந்து வரும். அவைகளை வைத்து முடுக்கி விடுவோம்.

தெண்டபாணி :—சாவி கெட்டுப் போனுல், என்ன செய்கிறது ?

மற்றவன் :—சாவியை மாத்திரம் நாங்கள் செய்வோம்! பூட்டைச் செய்கிறதில்லை.

தெண்டபாணி :—பூட்டோடு சீமையிலிருந்து எத்தனை சாவிகள் வரும் ?

மற்றவன் :—இரண்டு சாவிகள் வரும். உங்களுக்கு ஆகவேண்டியதைச் சொல்லுங்களேன். நான் செய்து கொடுக்கிறேன். உங்கள் பெட்டிக்கு சாவி செய்து கொடுக்கவேண்டுமா ?

தெண்டபாணி:—ஆம்.

மற்றவன்:—அந்தப் பெட்டியை யாரிடத்தில் வாங்கினீர்கள் ?

தெண்டபாணி:—செட்டித் தெருவு 99வது வீட்டிலுள்ள கடையில் இருந்து வாங்கினேன். இப்போது நான் சாவி செய்ய அவர்களிடம்தான் மெழுகைக் கொடுத்தேன்.

மற்றவன்:—நீங்கள் சொல்வது புதுமையாயிருக்கிறதே. அந்த வீட்டில் இரும்புப் பெட்டிகள் செய்யும் கடை எங்கே இருக்கிறது ?

தெண்டபாணி:—அது கடைபோல் வெளியில் தெரியும்படி இல்லை. அது பெரிய மாடிக்கட்டிடம். உள்புறத்தில் கடை இருக்கிறது.

மற்றவன்:—கடையின் சொந்தக்காரருடைய பெயர் என்ன ?

தெண்டபாணி:—எதற்காக நீ வக்கீல்போல் இப்படியெல்லாம் கிளரிக் கேட்கிருய்?

மற்றவன்:—முதலாவது, நீர் அந்தக் கடையில் பெட்டியே வாங்கவில்லை. இரண்டாவது, உமது சொந்தத்தில் இரும்புப் பெட்டி இல்லை. மூன்ருவது, நீர் அதை வைத்துக் கொள்ளத்தக்க அவ்வளவு பணக்காரரும் அல்ல. நான்காவது, நீர் வேருெருவருடைய வீட்டில் உள்ள இரும்புப் பெட்டியின் பூட்டில் மெழுகை வைத்துக்கொண்டு போய்க் கொடுத்திருக்கிறீர். என்ன கருத்தோடு அந்த மாதிரி கொடுத்தீர் என்பது எனக்குத் தெரியவேண்டும்.

தெண்டபாணி:—(கோபத்தோடு) யாரடா நீ என்னிடம் இப்படியெல்லாம் கேள்வி கேட்பதற்கு? உன்னேடு பேச இனி நான் தயாராய் இல்லை. நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போகலாம்.

மற்றவன்:—அவ்வளவு சுலபத்தில் நான் போய்விடக் கூடியவனு யிருந்தால், இவ்வளவு நேரம் நான் எதற்காக உம்மைச் சுற்றிக்கொண்டு நிற்கிறேன். செட்டித் தெருவு 99-வது வீட்டிலிருப்பவன் கந்தசாமி செட்டி வீட்டிலுள்ள இரும்புப் பெட்டிக்கு கள்ளச்சாவி தயாரிக்க நீர் உடந்தையா யிருந்தீர் என்பதற்கு என்னிடம் சாட்சி இருக்கிறது. நீர் உம்முடைய வீட்டில் இரும்புப்பெட்டி வைத்திருப்பது நிஜமானுல், அதைக் காட்டும். இல்லாவிட்டால் நாம் இருவரும் கந்தசாமி செட்டியிடம் போய் நம்முடைய தகராறைச் சொல்லிக்கொள்ளுவோம். அங்கேயாவது வாரும்.

தெண்டபாணி:— (மூர்க்காவேசத்தோடு) அடே போடா பைத்தியக்காரா! நீ கூப்பிடும் இடத்திற்கெல்லாம் நான் வர உன் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறதோ! உனக்கு நான் வேலைக்காரன் என்று நினைத்துக் கொண்டாயா?—என்று அதட்டிக் கூறியபடி அந்த இடத்தை விட்டுப்போக முயன்ருர்.

மற்றவன் அவருடைய கையைப் பிடித்து பலவந்தமாக அவரை பெஞ்சியில் அழுத்தி, "மரியாதையாய் இப்

படி உட்காரர்ந்திரும். அல்லது, நீர் போக முயன்ருல், நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போகவேண்டும்'' என்ருன்.

பெஞ்சியில் பொத்தென்று விழுந்த தெண்டபாணி ஆவேசத்தோடு எழுந்திருக்க முயன்ருர்.

உடனே மற்றவன், "அடெ உட்காரய்யா! ஏன் இப்படி அவசரப்படுகிருய்! நீ சுத்த முட்டாள். முட்டாளிலும் சாதாரண முட்டாளல்ல. மோசக்கருத்தும், திருட்டு புத்தியும் உடைய முட்டாள். சாவி செய்து கொடுப்பதற்கு மெழுகினுல் அளவு எடுத்துக் கொடுத்தாயே! அப்படி நீ செய்யலாமா. அந்த மனிதன் அதேபோல சாவி செய்து வைத்துக்கொண்டு செட்டி வீட்டில் திருட உத்தேசிக்கிருன் என்பது உன் புத்திக்குப் படவில்லையே! அவனுடைய காரியம் தீர்ந்துபோனபிறகு இனி அவன் உன்னை கிட்ட சேர்ப்பாஞ! நீ இப்போது அவனிடம் போனுல் அவன் பிடி கொடுப்பாஞ! இதையெல்லாம் யூகித்துக் கொள்ள உனக்கு மூளை யில்லையே'' என்ருன்.

தெண்டபாணி:—(மிகுந்த கலக்கமும் நடுக்கமும் அடைந்தவராய்) யாரப்பா நீ? பக்கத்தில் இருந்து எல்லா விஷயங்களையும் கண்ணுல் கண்டவன்போல் பேசுகிருயே! யாரப்பா இந்தமாதிரி யெல்லாம் உன்னிடம் கயிறு திரித்தார்கள்?

மற்றவன்:—இன்னமும் நீ உன்னுடைய கோணல் புத்தியை விடமாட்டே னென்கிருயே! இப்படியெல்லாம் உடாய்த்தால், நான் உன்னை விட்டுவிடுவேனென்று நினைக்காதே! நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். உன்னைப் பற்றி எனக்குத் தெரிந்திருப்பதாக நான் இப்போது குறித்த விஷயங்களை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய முடியுமென்பது உன்னுடைய புத்திக்குப் படவில்லை என்ற சந்தேகம் எனக்கு உண்டாகிறது. அது நிஜமா இல்லையா?

தெண்டபாணி:—என்னப்பா நீ, புத்தி கித்தி என்று மரியாதைக் குறைவாய்ப் பேசுகிறுய்! எதற்காக என்னை நீ அநாவசியமாய் உபத்திரவிக்கிறுய்? உன்னிடம் சரியான ஆதாரம் இருந்தால், அதை வைத்துக்கொண்டு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய். என்னேடு பேசியது போதும்; நீ போகலாம்.

மற்றவன்:—என்னிடம் ஆதாரம் இல்லையென்ற எண்ணத்திஞல் என்னை நீ உடாக்கிறுய்போலிருக்கிறது. அது தான் தப்பான எண்ணம்—என்ருன்.

அந்த சமயத்தில் ஸ்டேஷன்மாஸ்டரும், ஒரு போலீஸ் ஜெவானும், வேறு பலரும் அங்கே வந்து சேர்ந்தனர். ஸ்டேஷன் மாஸ்டர் அவ்விருவரையும் பார்த்து, "யார் ஐயா நீங்கள்? ஏன் இங்கிருந்துகொண்டு கூச்சலிடுகிறீர்கள்?" என்ருர்.

உடனே தெண்டபாணி, "நான் கூச்சலிடவில்லை. இந்த மனிதர்தான் என்னிடம் வந்து அநாவசியமாய் என்னை சண்டைக்கிழுக்கிருர்; என்னிடமிருந்த கடிதமொன்று தவறிக் கீழே விழுந்தது. அதை இந்த மனிதர் எடுத்துக்கொண்டு கொடுக்க மாட்டேனென்று வம்பு வளர்க்கிருர்" என்ருர்.

உடனே போலீஸ் ஜெவான் மற்றவனைப் பார்த்து, "ஏனப்பா இவருடைய கடிதத்தை எடுத்துக்கொண்டு கொடுக்க மாட்டேனென்கிறுய்?" என்று அதட்டலாக வினவிஞன்.

அந்த மனிதன்:—இவர் அதைக் கசக்கிக் கீழே போட்டு விட்டு எழுந்து போஞரா இல்லையா என்று கேளுங்கள்.

தெண்டபாணி:—நான் கசக்கி போட்டுவிட்டு மறந்தாற் போல் போனேன்; மறுபடி நினைத்துக்கொண்டு வந்தேன். என் பொருளை நான் கேட்டால், கொடுப்பதற்கென்ன ஆட்சேபனை?

ஜெவான்:—(அந்த மனிதனைப் பார்த்து) இவருடைய கடிதத்தைக் கேட்டால், நீ கொடுக்க வேண்டியவன் தானே. நீ என்ன ஆட்சேபனை சொன்னாய்?

அந்த மனிதன்:—இவரை நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படி கூப்பிட்டேன்.

ஜெவான்:—எதற்காக போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டாய்? நான் போலீஸ்காரன் இங்கே வந்திருக்கிறேன். இவருடைய கடிதத்தைக் கொடு.

அந்த மனிதன்:—(தன்னிடமிருந்த கடிதத்தை தெண்டபாணிக்குக் காட்டி) இதுதானே ஐயா நீர் கசக்கிப் போட்ட கடிதம்?

தெண்டபாணி:—ஆம். இதுதான்; இப்படிக் கொடும். (பிடுங்க முயற்சிக்கிறார்).

அந்த மனிதன்:—(ஜெவானை நோக்கி) பார்த்தாயா இந்த மனிதருடைய ஆத்திரத்தை! இந்தக் கடிதத்தை நீ படித்துப் பார். இவர் கந்தசாமி செட்டியாருடைய குமாஸ்தா. அவருடைய இரும்புப் பெட்டிக்கு ஒரு கள்ளச்சாவி தயார்படுத்த இவரும், இன்னொருவரும் எத்தனிக்கிறார்கள். இவர் அந்தப் பெட்டிப் பூட்டின வாயில் மெழுகை வைத்து எடுத்துக்கொண்டு போய் இன்னொருவரிடம் கொடுத்திருக்கிறார். அவர் இவருக்கு இந்தக் கடிதத்தை எழுதி இருக்கிறார். இதைப் பற்றிக் கேட்டால், இவர் சரியான உத்தரம் சொல்லாமல் உடாய்க்கிறார். இந்தக் கடிதத்தை நீ படித்துப் பார்த்துவிட்டு, ஜாக்கிரதையாக வைத்துக்கொள். இவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் ஆஜர் செய்—என்றார்.

அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்த ஜெவான் அதை ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொடுக்க, அவரும் அதைப் படித்தபின் மறுபடி அதை ஜெவானிடமே கொடுத்து, "சரிதான். இதை நீ ஜாக்கிரதையாக வைத்துக்கொள்.

இவரை ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போ" என்றார்.

உடனே ஜெவான் தெண்டபாணியை அழைத்துக் கொண்டு செல்ல, அவர்மீது குற்றம் சுமத்திய மனிதனும், வேறு சிலரும் கூடவே தொடர்ந்து சென்றனர்.

---

## 5. மந்திரக் கிணற்றின் தந்திர வித்தை

வக்கீல் சுப்பிரமணியம், சோமசுந்தரம் என்று கையெழுத்து செய்யப்பெற்ற கடிதத்தைப் படித்தவுடன், போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரை அழைத்து வரும்பொருட்டு ஒரு குமாஸ்தாவை அனுப்பினரல்லவா. அதே காலத்தில் சுந்தரம் அங்கே வந்து, "எதற்காக ஸப்-இன்ஸ்பெக்டர்? இப்போது அவர் வந்து என்ன செய்யப் போகிறார்? நான் தான் ஒருவன் இங்கே இருக்கிறேனே" என்றார்.

வக்கீல்:—அப்படியானால் குமாஸ்தாவைக் கூப்பிடு—என்று இன்னொரு குமாஸ்தாவிடம் கூற, அவர் வெளியில் ஓடி, கைகளைத் தட்டி, சிறிது தூரத்தில் சென்றுகொண்டிருந்த குமாஸ்தாவை அழைத்துக்கொண்டு உள்ளே வந்து சேர்ந்தார்.

அப்போது சுந்தரம் திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவர்போல், "எனக்கு இப்போதுதான் நினைவுண்டாகிறது. இந்தக் கடிதத்தைக் கொடுத்த மனிதனை இதற்கு முன் நான் எங்கேயோ பார்த்திருந்த மாதிரி என் மனதில் ஓர் எண்ணம் உண்டாயிற்று. அப்போது முதல் யோசித்துப் பார்த்தேன். இவன் ஒரு பயங்கரமான துஷ்டக் கேடி. இவன் வேதாரண்யத்தில் இருப்பவன். இவனுடைய பெயர் கேடி நடேசன் என்பது. இவன் கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறான்?" என்றார்.

வக்கீல்:—(கடிதத்தைக் கொடுத்து) இதோ இருக்கிறது. நீங்களே படித்துப் பாருங்களேன்.

சுந்தரம்:—(படித்துப் பார்த்துவிட்டு) ஓகோ! இவனு சோமசுந்தரம் என்பவனைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு வந்து திருட்டை நடத்துகிறவன்! கேடி நடேசன் என்பவன் பொல்லாத துஷ்டன் என்றுதான் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவன் இப்படியெல்லாம் செய்யக்கூடிய சாமர்த்தியசாலிதான். ஆனால் இதை இவ்வளவு படாடோபமாய் எதற்காக பகிரங்கப்படுத்திக் கொள்ளுகிறான்! அதுவல்லவா சந்தேகத்தைக் கொடுக்கிறது. தானே திருடுகிறவன் என்று மூடன்கூட வெளியில் சொல்லிக்கொள்ள மாட்டானே!

வக்கீல்:—அது முக்கியமான பாயின்ட்தான். அதைப் பற்றியே நானும் நினைத்தேன். இந்த நடேசனுக்கு வயது என்ன இருக்கும்?

சுந்தரம்:—சுமார் நாற்பது இருக்கலாம்.

வக்கீல்:—எங்கள் வீட்டில் திருடியவனுக்கு சுமார் இருபத்தைந்து வயதுதானே இருக்கும்? அவன் ஒருவேளை இந்த நடேசனுடைய ஆளாயிருப்பானோ?

சுந்தரம்:—இருக்கலாம். ஆனாலும் இவன் வேண்டுமென்றே பகிரங்கப்படுத்திக் கொள்வதற்கு அநுசரணையாக வயது வித்தியாசமும் இருக்கிறது. ஆகையால் இவன் சொல்வது சம்சயமானதாய்த்தா னிருக்கிறது. இவன் மாலை ஏழு மணிக்கு வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறானே. அதன்படி வருகிறானா என்று பார்ப்போம்; வந்தால், உடனே நாம் அவனைப் பிடித்துக் கொள்வோம்.

வக்கீல்:—அவன் தனியாக வருவானோ, அல்லது, இன்னம் மற்றவரையும் அழைத்துக்கொண்டு வருகிறானோ! எதற்கும் நாம் முன் ஜாக்கிரதையாகப் போலீஸாரை வரவழைத்து'வைத்துக் கொள்வது நல்லதல்லவா!

சுந்தரம்:—அவன் எப்போதும் அதிக ஆள்களுடன் வருவதே இல்லையாம்; அநேகமாய்த் தனியாகத்தான் வரு

வான். இதைப்பற்றி உங்களுக்கு கவலையே வேண்டாம். நான் இருக்கிறேன்—என்ருர்.

வக்கீல் மேலும் அந்த விஷயத்தை வற்புறுத்திக் கூருமல், அவ்வளவோடு வெறுமை இருந்து விட்டார்.

பொழுது கழிந்துகொண்டே இருந்தது. இரவில் திருடர்கள் வந்து எந்த வகையில் தங்களுக்குத் தீங்கிழைப்பார்களோ என்ற அச்சம் அவருடைய மனத்தைக் கலக்கிக்கொண்டே இருந்தது. அவர் அடிக்கடி பின்பக்கம் போய், தமது மனைவியை எச்சரித்து, நகைகள் உடைகள் முதலிய விலைபெற்ற பொருள்களை யெல்லாம் வீட்டின் நடுவில் இருந்த கெட்டியான ஓர் அறையில் வைத்துப் பல பூட்டுகளைப் போட்டுப் பூட்டச் செய்தார். அலமு அபாரமான திகில் கொண்டு நடுக்கல் ஜுரத்துடன், வீட்டு வேலைகள் எதையும் கவனிக்காமல், ஒரு மூலையில் படுத்து விட்டாள். வேலைக்காரிகளுக்கு அந்தச் செய்தி எட்டவில்லை யாதலால், அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்து கொண்டு போயினர்.

வக்கீலினுடைய மனது எதிரிடையான இரண்டு வகையான எண்ணங்களால் தத்தளித்தது. கடிதம் கொடுத்தவன் தமது வீட்டில் திருடியவனு யிருக்கமாட்டான் என்ற ஓர் எண்ணம் ஒரு புறத்தில் உண்டானதாயினும், இன்ஞெரு புறத்தில் அதைரியமும், மனத்தளர்வும் எழுந்து சஞ்சலப்படுத்தியபடி இருந்தன. அவ்வளவு பகிரங்கமாக வேலை செய்யும் மனிதன் மீறுபடியும் வந்து முன் போலக் கொள்ளை நடத்துவாஞே வென்றும், அவன் தம்மையும், தமது மனைவியையும் எவ்விதமான கொடுமைக்கு ஆளாக்குவாஞே வென்றும் நினைத்து பகலிலேயே சிம்ம சொப்பனம் கண்டு கொண்டிருந்தார்.

பிற்பகல் நான்கு மணி சமய மாயிற்று. அப்போது அங்கு முனிஸிபாலிட்டி உத்தியோகஸ்தர் மலேரியா

இன்ஸ்பெக்டர் ஒருவரும், சேவகன் ஒருத்தனும், இரண்டு ஓட்டர்களும் வந்துசேர்ந்தனர். முன் ஹாலில், வக்கீல், சுந்தரம், கோபாலசாமி, இரண்டு குமாஸ்தாக்கள், ஒரு சேவகன் ஆகியோர் இருந்தனர்.

முனிசிபாலிட்டி உத்தியோகஸ்தர் வக்கீலுக்கு மிக மரியாதையாக சலாம் வைத்துவிட்டு, "இந்த வீட்டில் கிணறு இருக்கிறதல்லவா?" என்றார்.

வக்கீல் :—ஏன் கேட்கிறீர்கள்?

உத்தியோகஸ்தர் :—நான் அதன் ஜலத்தைப் பார்க்க வேண்டும்?

வக்கீல் :—நீங்கள் யார்?

உத்தியோகஸ்தர் :—நான் மலேரியா இன்ஸ்பெக்டர்- இந்த டிவிஷனில் கிணற்று ஜலத்தில் மலேரியா கிருமி கள் உண்டாயிருக்கின்றனவாம். அதனால் ஊரில் மலேரியா ஜுரம் அதிகமாக யிருக்கிறது. ஜலத்தைப் பார்த்து மருந்து போடவேண்டும்.

வக்கீல் :—அப்படியா! இந்த வீட்டில் கிணறு இல் லையே!

சுந்தரம் :—அம்மன் கோவில் சந்துகூட இந்த டிவிஷ னில் சேர்ந்ததுதானே?

உத்தியோகஸ்தர் :—ஆம்.

சுந்தரம் :—அங்கே இருக்கும் கிணறுகளை யெல்லாம் பார்த்துவிட்டீர்களா?

உத்தியோகஸ்தர் :—இன்னம் பார்க்கவில்லை. இதோ நேராக அங்கேதான் போகிறேன். உங்களுக்கு அங்கே வீடு ஏதாவது இருக்கிறதா?

சுந்தரம் :—எனக்கு அங்கே வீடு இல்லை. என் சிநேகி தர் ஒருவர் அங்கே இருக்கிறார். அவருடைய வீட்டில்

கிணறு இருக்கிறது. ஆனால் அவருக்கு மலேரியா ஜுரம் காணவில்லை. அதனால் கேட்டேன்.

உத்தியோகஸ்தர் :—எல்லா வீடுகளின் கிணறுகளிலும் கிறுமிகள் இருந்தால், எல்லோருக்கும் ஜுரம் வந்திருக்கும். சிலவற்றில் இருந்தால், அங்கு இருப்பவருக்கு மாத்திரம் உண்டாகும். எப்படி இருந்தாலும், நான் எல்லாக் கிணறுகளையும் பரீட்சித்துப் பார்த்து, மருந்து போடவேண்டும். சில கிணறுகளின் ஜலம் இப்போது சுத்தமா யிருந்தாலும், இனி சீக்கிரத்தில் கெட்டுப் போகலாம். அதனால் முன் ஜாக்கிரதையாக முனிஸிபாலிட்டியார் இந்த நடவடிக்கையை நடத்துகிறார்கள்.

சுந்தரம் :—இது நல்ல ஏற்பாடுதான். என் நண்பர் பிடிவாத குணமுடையவர். அவர் உங்களைத் தடுத்தாலும் தடுப்பார். ஆகையால் நானும் உங்களோடு வருகிறேன். நான் சொன்னால் அவர் ஆட்சேபிக்க மாட்டார்—என்று கூறியபடி அந்த முனிஸிபாலிட்டி உத்தியோகஸ்தருடன் நடக்கலானார்.

உடனே வக்கீல் கவலையோடு சுந்தரத்தைப் பார்த்து, “நீங்கள் சீக்கிரம் வந்துவிடுங்கள். நம் காரியத்தில் கவனமிருக்கட்டும்” என்றார்.

சுந்தரம், “அதை நான் மறப்பேனா! நான் போய் இதோ கால்மணிக்குள் வந்து விடுகிறேன். நீங்கள் கவலைப் படாமல் இருங்கள்” என்று கூறி, வக்கீலுக்கு தைரிய முண்டாக்கினார்.

அவ்வாறு அங்கு சம்பாஷணை நடந்துகொண்டிருந்த காலத்தில் முனிஸிபல் உத்தியோகஸ்தருடன் வந்த சேவகன் தனிமையில் உட்கார்ந்திருந்த கோபாலசாமியிடம் போய், “எசமானே, எனக்கு ஒரு சின்ன ஒதவி பண்ணணுங்க” என்று தனது பற்களைக் காட்டிக் கெஞ்சியபடி கூழைக் கும்பிடுகள் போட்டான்.

கோபாலசாமி :—என்ன உதவி செய்ய வேண்டும்? பண உதவியைத் தவிர மற்றதைக் கேள். முடியுமானால் செய்கிறேன்.

சேவகன் :—(ஒரு காகிதத்தையும் பென்ஸிலையும் தன் சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்து) ரெண்டே வரீங்க. நானு எளுதப் படிக்கத் தெரியாதவனுங்க. ஊருக்கு அவசரமா ஒரு கடுதாசி எழுதனுங்க. அதிய மில்லீங்க. ரெண்டே வரிதானுங்க—என்று வயிற்றுப் பிள்ளை கீழே நழுவுகிற விதத்தில் வேதனைப் பட்டுக் கெஞ்சி நாட்டியமாட, கோபாலசாமி அவனுடைய வேண்டுகோளை மறுக்க மாட்டாமல் காகிதத்தையும் பென்ஸிலையும் வாங்கி வைத்துக்கொண்டு, "சங்கதியைச் சொல்லு" என்றார்.

சேவகன் :—சங்கதியெ மின்னாலெ ஒங்ககிட்ட சுருக்கமாச் சொல்றேனுங்க. இப்ப வந்தாரே இனிஸ்பெக்டர் ஐயா, அவரோடெகூட நானும் ஊடோ நொளைஞ்சு இணறுவளைப் பாக்கறவன். நானு இந்தூருலெ ஒரு தாவுலெ வூடுகட்டினேன். அந்தத் தெருவுலெ சனங்க தண்ணிக்குத் தாளம் போட்ருங்க. அதுக்காவ சனங்கள்ளாம் சேந்து மகசர் அனுப்பினுங்க. முனிஸிபாலிட்டிக் காரரு ஒரு கெணம் வெட்டினுங்க. இன்னமும் தண்ணியே காணல்லே. இந்தத் தண்ணிக் கயிஷ்டத்தெப் பொறுக்க மாட்டாமெ எம் பொஞ்சாதி ஊருக்குப் பூட்டாளுங்க. இந்தக் கெணம் வெட்டின ஒடனே அவ எளுதச்சொன்னு. நேத்து எளுதினேன். அவ ஒடனே வந்துடுவா. அவளெ இப்ப வரவாணென்னு எளுதனும். இம்பிட்டுத்தானுங்க சேதி. இப்ப சொல்றேன் எளுதுங்க" என்று கூறி அடியில் வருமாறு கடிதத்தின் விஷயத்தைச் சொல்லத் தொடங்கினன் :—

கேணத்துச் சேதி மட்டைக்கி ரெண்டு கீத்தாப் புரிஞ்சு போச்சு. அது தண்ணித் தொட்டியே கண்டா, கெணமா

இல்லே இன்னு கண்டுக்கிட்டாக. இதுனாலே அல்லாருக்கும் திண்டாட்டம்.

ஓங்கிட்ட இருக்கிற பணத்துலெ 25 ரூபா இதெக்கொண்டார ஆளுக்குக் குடுக்கறது. குடுக்காமெப்போனு, நம்ப ரெண்டு பேருக்கும் தொந்தரவு வந்து சேரும். இது நிச்சயம். பணம் குடுத்தத்துக்குக் கடுதாசி எளுதி இவங்கிட்டவே குடுத்தனுப்பு.

—என்று எழுதப்பட்ட பிறகு சேவகன், "எம்பேரு கோபாலசாமி. எனக்கு எளுதத் தெரியாதுங்க, நீங்களே அடிலே ரவையூண்டு, எம்பேரைப் போட்டுடுங்க. இல்லாமெப்போனு, அவ சந்தேகப்படுவா" என்றுன்.

அதைக்கேட்ட கோபாலசாமி, "ஓகோ, உன் பெயர் கூட கோபாலசாமியா?" என்றார்.

சேவகன், "ஆமாஞ்சாமீ. அப்பிடியானு இஞ்சேயாருனுச்சும் அந்தப் பேரே வச்சிருக்காங்களா?" என்றுன்.

கோபாலசாமி, "என் பெயரும் அதுதான்" என்று கூறியபடி கடிதத்தின் அடியில் 'கோபாலசாமி' என்று எழுதி கடிதத்தை சேவகனிடம் கொடுக்க, அவன் மிகவும் பணிவாக அவரிடத்திலிருந்து அதைப் பெற்றுக்கொண்டு, அவருக்கு மறுபடி ஒரு கூழைக்குப்பிடி போட்டு விட்டு, வக்கீல் முதலிய ஒவ்வொருவரையும் பார்த்து, அவர்களுக்கும் ஒவ்வொரு கும்பிடு போட்டுவிட்டு வெளியில் சென்றுன்.

அப்போது மற்றவர்கள் அந்தத் தெருவின் கடைசியில் போய்க்கொண்டிருந்தனர். ஆனல் சுந்தரம் காணப்படவில்லை. சேவகன் அவர்கள் சென்ற திக்கில் விசையாக ஓடி, அவர்கள் அம்மன் கோவில் சந்திற்குள் திரும்பிய சமயத்தில் அவர்களோடு சேர்ந்துகொண்டான்.

அப்போது மலேரியா இன்ஸ்பெக்டர் கோபத்தோடு சேவகனைப் பார்த்து, "பியூன், நாங்கள் எல்லோரும் வந்த

பிறகு இவ்வளவு நேரம் உனக்கு மாத்திரம் வக்கீல் வீட்டில் என்ன வேலை? எங்கே போனாலும் உன்னுடைய பொறுக்கி புத்தியை விடுகிறதில்லையே! உன்னை நான் டிஸ்மிஸ் பண்ணச் சொல்லி, எழுதப் போகிறேன்'' என்று அதட்டலாகக் கூறினார்.

விசையாக ஓடிவந்ததனால் சேவகனுடைய இரைப்பு அப்போதும் அடங்கவில்லை. அவன் பேச வாயைத் திறந்தால், விழிகள் பிதுங்கிவிடும் போல் இருந்தன; மார்பும் வெடித்துவிடும் போல் இருந்தது. ஆகவே, அவன் தனது மார்பைத் தடவி, மூச்சை சரியாக இழுத்து தன்னை சமாளித்துக் கொண்டு, தனது பற்களைக் காட்டிக் காட்டி, "இல்லீங்க, ஒரு கடுதாசிங்க'' என்றான்.

மலேரியா இன்ஸ்பெக்டர், "என்னடா, முழுப்பூசனிக்காயை இலைச்சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயா! நீ தான் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டாயா? கிணறு உள்ள வீடா யிருந்தாலும், பரவாயில்லை. அது கிணறில்லாத வீடு. அங்கே நீ கையை நீட்டி பிச்சை கேட்பதென்பது பெரிய அட்டூழியம். இதை நான் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. அவர்கள் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள். நீ வாங்குவதில் எனக்கும் பங்கு இருக்குமென்றல்லவா எண்ணுவார்கள். உன்னால் என் பெயரல்லவா கெட்டுப் போகிறது'' என்றார்.

சேவகன் தனது உடம்பைவளைத்து நெளித்துக்காட்டி, "எசமான் நினைக்கறது சரியல்லவுங்க. நானு அப்படியெல்லாம் பிச்சைக் காசுக்குக் கையெ நீட்ட மாட்டேனுங்க! நாம் அம்மன் கோயில் சந்துக்குப் போறோமின்னதெக் கேட்ட ஒடனே, அந்தக் கிளவனுரு, 'கொஞ்சூண்டு இரப்பா. ஒரு கடுதாசி குடுக்கறேன். பதினந்தாம் நம்பரு ஊட்டுலெ குடுத்துடு இன்னு சொன்னுரு. பெரிய மனிசரு சொன்னப்ப தட்டக் கூடாதுன்னு நிண்டேனுங்க'' என்றான்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் உடனே சாந்தமடைந்தவராய், "ஓகோ, அப்படியா சங்கதி. சரி. நீ 15-வது நெம்பர் வீட்டிற்குப் போய் அதைக் கொடுத்து விட்டு வா. நாங்கள் முதலாவது வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டு வருகிறோம்" என்று கூறியபடி முதலாவது வீட்டண்டை நிற்க, சேவகன் மாத்திரம் தனிமையில் 15-வது நெம்பர் வீட்டிற்குச் சென்று உள்ளே நுழைந்தான். அந்த விட்டிற்குள் இருந்த சோமசுந்தரம், திடீரென்று ஒரு முனிஸிபல் சேவகன் உள்ளே வந்ததைக் கண்டு வியப்பும், கோபமும் கொண்டவனாய், முரைப்பாக அவனைப் பார்த்து," யாரப்பா நீ! வெளியில் இருந்து கூப்பிடாமல் தடதட வென்று உள்ளே ஓடி வருகிறாயே!" என்றான்.

சேவகன் :—நான் முனிஸிபாலிட்டி சேவகன்.

சோமசுந்தரம் :—முனிஸிபாலிட்டி சேவகனாயிருந்தால் உன் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறதா? இல்லாவிட்டால், உன் நெற்றியில் கொம்பு முளைத்திருக்கிறதா? முனிஸிபாலிட்டி சேவகனென்றால், யாருடைய வீட்டிற்குள்ளும் நீ உத்தரவில்லாமல் நுழையலாம்போல் இருக்கிறதே! திறந்த வீட்டில் நாய் நுழைகிற மாதிரி என்று ஜனங்கள் பழமொழி சொல்லுவார்கள். அதை நான் உன் விஷயத்தில் சொல்வது சரியல்லவானாலும், அது என் நினைவிற்கு வருகிறது.

சேவகன் :—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) உங்கள் வீட்டில் நுழைவதற்கு ஒரு நாய்க்குக்கூட நீங்கள் அநுமதி கொடுப்பீர்கள்போலிருக்கிறது; முனிஸிபாலிட்டிக்காரனை மாத்திரம் உள்ளே விடமாட்டீர்கள் போல் இருக்கிறதே'

சோமசுந்தரம் :—ஆம், விடமாட்டேன்.

சேவகன்:—சரி; அப்படியே செய்யுங்கள். நான் இப்போது முனிஸிபல் சேவகனுடைய கடமை எதையும் நிறைவேற்ற இங்கே வரவில்லை. என்னுடைய வேஷம் மாத்திரம் முனிஸிபல் சேவகனுடைய வேஷம். ஆகையால், உங்கள் வசவு, என் சட்டைக்கும், டவாலிக்கும், வில்லைக்குமே ஆகும். அந்த வசவு என்னை பாதிக்காது. இப்போது ஒரு தபாற் சேவகனுடைய ஹோதாவில் வந்திருக்கிறேன். அதுவும் பரோபகாரத்தைக் கருதி—என்று கூறி தன் வசமிருந்த கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

சோமசுந்தரம் அதை வாங்கிப் படித்துப் பார்த்தான். உடனே அவனுடைய முகம் விகாரமாக மாறியது. அதை சேவகன் கூர்ந்து கவனித்தான்.

சோமசுந்தரம் சிறிது காலம் சிந்தனையி லாழ்ந்திருந்த பின், "ஏனப்பா, பணம் கொடுக்கும்படி அவர் எழுதி இருக்கிறாரே! அதை இப்போதே கொடுத்துவிட வேண்டுமா?" என்றார்.

சேவகன்:— அது உங்களுடைய இஷ்டத்தைப் பொருத்தது. இந்த விஷயம் எவ்வளவு அபாயகரமானதென்பது உங்களுக்கே தெரியும். ஆகையால், இதில் உங்களுக்கு நான் சொல்லிக் கொடுக்கக் கூடியது எதுவுமில்லை. பணத்தைக் கொடுத்தால் நான் வாங்கிக் கொண்டு போகிறேன். பணம் இல்லை என்றால், அப்போதும் நான் போக வேண்டியவனே. உங்களுக்கு எது உசிதமாய்ப்படுகிறதோ அதைச் செய்யலாம்.

சோமசுந்தரம்:—சரி; பணம் தருகிறேன்—என்று கூறி விட்டு அறைக்குள் போய்த் திரும்பி வந்து சேவகனிடம் 25 ரூபாய் பணத்தை கொடுத்தான்.

அதைப் பெற்றுக்கொண்ட சேவகன், "அந்த ஐயா உங்களிடம் ஒரு பதில் கடிதம் வாங்கிக்கொண்டு வரச் சொன்னார்" என்றான்.

சோமசுந்தரம் :—கடிதத்தில் என்ன எழுதுகிறது ?

சேவகன் :—'கிணற்றின் சப்பந்தமாய் நீங்கள் எழுதியபடி இந்த சேவகனுக்கு 25 ரூ. கொடுத்துவிட்டேன்' என்று உங்களிடம் ஒரு கடிதம் எழுதி வாங்கிக்கொண்டு வரச் சொன்னார். அந்த மாதிரி ஒரு கடிதம் எழுதிக்கொடுங்கள்.

சோமசுந்தரம் :—அது எதற்காக ?

சேவகன் :—அதென்னவோ அவர்கள் சொன்னதை நான் சொல்லுகிறேன்.

சோமசுந்தரம் :— சரி ; அப்படியே எழுதிக்கொடுக்கிறேன்—என்று கூறியபடி ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தான்.

சேவகன் அதைப் பெற்றுக்கொண்டு, அவனுக்கு ஒரு கும்பிடு போட்டு, " நான் வருகிறேன் " என்றான்.

சோமசுந்தரம் :—நீ அடிக்கடி வந்து தொந்தரவு செய்வாயோ என்னவோ ?

சேவகன் :—நான் வராமல் எப்படி இருப்பேன். எனக்குப் பணத்தேவை ஏற்படும்போதெல்லாம் வந்துகொண்டுதானிருப்பேன்.

சோமசுந்தரம் :—சரிதான். உனக்குப் பணம் வேண்டியபோதெல்லாம் வந்துகொண்டுதானிருப்பாயோ ! உனக்கு ஒவ்வொரு நாளும் பணம் வேண்டியதாய்த் தானிருக்கும். நீ கேட்கும்போதெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்க நாங்கள் அவ்வளவு இளித்த வாயர்களன்று. அந்த மாதிரி நீ எண்ணி மனப்பால் குடிப்பதானல், இந்தப் பணத்தையும் கீழே வைத்துவிடு.

சேவகன் :—சரி; நடக்க நடக்க யோசித்துக் கொள்வோம். என்னிடம் கொடுத்த பணத்தை மறுபடி பெட்டியில் வைக்கும் பிரயாசை உங்களுக்கு வேண்டாம். நான்

போய் வருகிறேன். தெண்டம்—என்று கூறியபடி ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளியில் நடந்தான்.

சோமசுந்தரம், "ஆமப்பா. நீ சொல்லுகிறது சரியான வார்த்தை. இது தண்டந்தானப்பா" என்றான்.

சேவகன் சிரித்துக்கொண்டு, "இதோடு தெண்டம் விட்டதா! இன்னம் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே வெளியில் போய்விட்டான்.

இது நிற்க, மலேரியா இன்ஸ்பெக்டரோடு சென்ற சுந்தரம் மாலை சரியாக ஆறு மணி சமயத்தில் வக்கீல் சுப்பிரமணியத்தின் வீட்டிற்குத் திரும்பி வந்தார். அவர் வந்தபோது வக்கீலும் இன்னொருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அதை கவனிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், சுந்தரம் ஒரு பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

வக்கீல் :—உங்களுக்கு ஏராளமான வியாஜ்ஜியங்கள் இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். ஒவ்வொன்றையும் நடத்த நீங்கள் வெவ்வேறு வக்கீல்களை அமர்த்துவதை விட, ஒரே வக்கீலை அமர்த்தி, அவரிடம் உங்கள் வியாஜ்ஜியங்களையெல்லாம் ஒப்படைத்துவிட்டால், பல வகைகளில் உங்கள் பிரயாசை குறையும். அந்த மனிதர் மிகவும் பொறுப்பாக எல்லா வேலைகளையும் கவனித்துக்கொள்வார்.

மற்றவர் :—அதே எண்ணத்தோடுதான் நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். சுமார் இருபது வழக்குகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் உங்களிடமே ஒப்படைக்கலாமென்று தீர்மானித்திருக்கிறேன்.

வக்கீல் :—நீங்கள் நூறு கேஸ்கள் கொடுத்தால்கூட அவைகளை நடத்தும் திறமை எனக்கு உண்டு. சட்ட சம்பந்தமாக எந்த விஷயத்திலும் உங்களுக்கு நான் முதல்தர

மான யோசனைகள் சொல்லுவேன் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். உங்களுக்கு நூற்றுக்கு நூறு ஜெயம் ஏற்படும்படி நான் என்னுலான முயற்சிகள் செய்வேன் என்பதை நீங்கள் கெட்டியாக மனதில் வைத்துக்கொள்ளலாம். எனக்குக் கீழிருக்கும் இரண்டு ஜூனியர்கள் அபாரமான சட்ட ஞானம் வாய்ந்தவர்கள்; அதுவுமன்றி, விஷயங்களை ஒழுங்குப்படுத்திக் கொடுப்பதில் அசாகூரர்கள். அவர்களுடைய அரிய சேவை எனக்கிருக்கும் வரையில், என் கட்சிக்காரர்களுக்கு அவ்வளவும் நன்மை என்றே சொல்ல வேண்டும்—என்ருர்.

அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்த காலத்தில் ஜூனியர்கள் இருவரும் அங்கே வந்து சேர்ந்தனர்,

அவர்களைக் கண்ட பெரிய வக்கீல் நிரம்பவும் உற்சாகமும், குதூகலமும் தோற்றுவித்து, "இதோ அவர்களும் வந்துவிட்டார்கள். இனி நீங்கள் வழக்குகளின் விவரங்களை அவர்களிடம் சொல்லலாம். முதலில் அவர்களிடம் விஷயங்களைச் சொன்னுல், அவர்கள் எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்தி சுருக்கமான வழியில் எனக்குச் சொல்லுவார்கள். அதை வைத்துக்கொண்டு நான் ஆகவேண்டுவதைச் செய்வேன். ஒரு வழக்கின் தகவல்களை நான் ஒருதரம் படித்துத் தெரிந்துகொண்டால், வருஷங்கள் பதினைந்தானுலும் அவை என் மனதில் ஆணித்தரமாகப் பதிந்து நிற்கும்" என்ருர்.

மற்றவர், "என் வழக்குகள் சம்பந்தமான காகிதங்களை நான் எடுத்து வரவில்லை. உங்களுடைய நோக்கத்தைத் தெரிந்துகொண்டு போய் நாளையதினம் காலையில் எடுத்து வரலாமென்று நினைத்து வந்தேன். ஒரு வழக்கைப்பற்றி மாத்திரம் நான் இப்போது உங்களுடைய யோசனையைக் கேட்க விரும்புகிறேன்" என்ருர்.

வக்கீல் :—கேட்கலாம்.

மற்றவர் :—ஒரு மைனருக்கு நான் கார்டியனு யிருக்கிறேன். பையனுடைய தகப்பனுரே என்னை கார்டியனுய் நியமித்தபடியால், நான் மைனருடைய சொத்துகளை வைத்துக்கொண்டிருக்கிறேன். மைனருக்கு சொந்தமான சொத்துகள் சுமார் இருபதாயிரம் பெறும். அந்தப் பையனுக்கு சிறிய தாயார் ஒருத்தி இருக்கிருள். அவள் மைனரையும், மைனருடைய சொத்துகளையும் தன்னிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று என்னிடம் பல தடவைகளில் கேட்டுவிட்டாள். நான் அதற்கு இணங்கவில்லை. ஷை சொத்துகள் பணமாகவும் நகைகளாகவும் இருக்கின்றன. அவள் ஆள்களை ஏவி அவைகளை பலவந்தமாய் எடுத்துக்கொண்டு போய்விடுவதாக பயமுறுத்திக்கொண்டிருக்கிருள். ஆகையால் சொத்துகளை பந்தோபஸ்தான ஓரிடத்தில் வைத்துவிட்டு, அவள் பேரில் வியாஜ்ஜியம் தொடரலாமென்று நினைக்கிறேன். எங்கே வைத்தால் சொத்துகள் ஜாக்கிரதையா யிருக்கும் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். நீங்கள் எங்கே வைக்கச் சொன்னுலும், வைக்கத் தடையில்லை.

அப்போது சுந்தரம் குறுக்கிட்டு அவரை நோக்கி, 'ஏன், இங்கேயே கொண்டுவந்து வையுங்களேன். வக்கீலே ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுகிருர்கள்" என்ருர்.

அதைக் கேட்ட வக்கீல் திடுக்கிட்டு, "ஐயோ! நமக்கேன் அந்தப் போலீஸ் பாரா! நம்முடைய சொந்த சொத்தைக் காப்பாற்றுவதற்குள் இராத் தூக்கம் இல்லாமல் போகிறது அதற்குத் துணையாக இன்னம் ஊராருடைய சொத்தையும் கொணர்ந்து வைத்துக்கொண்டு நம்முடைய கவலையை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமா! கட்சிக்காரர்களுடைய சொத்துக்களை வைத்துக்கொண்டு காவல் காப்பதுகூடவா வக்கீலின் வேலை. அதற்கு பாங்கிகள் இருக்கின்றன; போலீஸார் இருக்கிருர்கள். அப்படிம்

பட்ட ஓரிடத்தில் தான் வைக்கவேண்டும். இந்த ஊரில் உள்ள பாங்கியில் வையுங்களேன்'' என்றார்.

கட்சிக்காரர் :—சரி, அதுதான் நல்ல யோசனை. அது என் புத்தியில் இதுவரையில் படவில்லை. பாங்கிலேதான் வைத்துவிட வேண்டும். (சுந்தரத்தைச் சுட்டிக் காட்டி) இவர் உங்களுக்குக் கீழ் வேலை செய்யும் வக்கீல்களில் ஒருவரா ?

வக்கீல் :—இல்லை. இவர் என் இளைய மாமனார்.

கட்சிக்காரர் :—இவர் ஊரிலிருந்து எப்போது வந்தார் ?

வக்கீல் :—இவர் இந்த ஊரார் அல்லவென்பது உங்களுக்கு எப்படித் தெரியும் ?

கட்சிக்காரர் :—இவரை நான் வேறோர் ஊரில் பார்த்திருக்கிறேன்.

சுந்தரம் :—எந்த ஊரில் நீர் என்னைப் பார்த்தீர் ?

கட்சிக்காரர் :—மன்னார்குடியில் பார்த்ததாக நினைவுண்டாகிறது. ஆனால் நிச்சயமாகச் சொல்லக் கூடவில்லை.

சுந்தரம் :—உங்களுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கிறதே ! அதே ஊர்தான் என்னுடைய சொந்த ஊர்.

கட்சிக்காரர் :—அப்படிச் சொல்லுங்கள்.

சுந்தரம் :—மன்னார்குடியில் நீங்கள் என்னை எப்போது பார்த்தீர்கள் ? உங்களுடைய பந்துக்கள் யாராவது அங்கே இருக்கிறார்களா ?

கட்சிக்காரச் :—அங்கே எனக்கு பந்துக்கள் யாருமில்லை. வியாபார சம்பந்தமாய் நான் அங்கே வந்திருக்கிறேன். அப்போது உங்களைப் பார்த்ததாக நினைவுண்டாகிறது.

சுந்தரம் :—அங்கே திகம்பரசாமியார் என்னும் மகான் ஒருவர் இருக்கிறாரே. அவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா ?

கட்சிக்காரர்:—அவரைப்பற்றிக் கேள்விப்படாத மனிதர்கள்கூட இருக்கிருர்களா! நான் அவரைப்பற்றி ஏராளமாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரை நேரில் பார்க்க வேண்டுமென்றுகூட எனக்கு அவா உண்டு. ஆனுல், அதற்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

சுந்தரம் :—என்ன அவருடைய விஷயத்தில் உங்களுக்கு இவ்வளவு மதிப்பு ?

கட்சிக்காரர் :—அவர் துப்பறிவதில் பிரபலமான மனிதர் அல்லவா. அவரைப் பார்க்க வேண்டுமென்று யாருக்குத்தான் ஆவல் உண்டாகாது.

சுந்தரம்—:நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது நான் இனி உண்மையை மறைப்பது சரியல்ல. நான்கூட துப்பறிபவன்தான். நான் அவரிடம்பயிர்ச்சி பெற்றவனுன அவருடைய முக்கிய சிடன்.

கட்சிக்காரர்:—ஓகோ! அப்படியா! இருக்கலாம், இருக்கலாம். இந்தக் காலத்தில் யாரையும் நம்புவதற்கில்லை. எல்லாரும் துப்பறிபவர்கள் என்றுதான் சொல்லிக்கொண்டு கிளம்பிவிடுகிருர்கள்.

சுந்தரம்:—எல்லாரும் அப்படிச் சொல்லிக்கொண்டு கிளம்பி என்ன செய்கிறது. அதற்கு அவசியமான சாமர்தியம் இருக்கவேண்டாமா. அதுவுமல்லாமல் அப்படி சொல்லிக் கொள்ளுகிறவரைப் பார்த்து, 'உம்முடைய அதிகாரக் கடிதத்தைக் காட்டும்' என்று யாராவது கேட்டுவிட்டால், அதைக் காட்டவேண்டாமா?

கட்சிக்காரர்:—அப்படியானுல், உங்களிடம் அதிகாரக் கடிதம் இருக்கிறதுபோல் அர்த்தமாகிறது.

சுந்தரம்:—அதைப்பற்றி நீங்கள் சந்தேகமாய்ப் பேசுகிறீர்களே! நான் அதிகாரப் பத்திரம் இல்லாமல் வெளியில் வந்திருப்பேனென்று நினைத்துக்கொண்டீர்களா?

கட்சிக்காரர்:— (புன்னகை செய்தபடி) சே, நான் அப்படி ஏன் நினைக்கிறேன். உங்களைப்பற்றி எனக்குஅதிக தகவல் எதுவும் தெரியாதிருக்கையில், அந்த மாதிரி ஏன் யூகித்துக்கொள்ள வேண்டும். அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் துப்பறிவருடைய அதிகாரப் பத்திரம் எப்படி இருக்குமென்று பார்க்க வேண்டுமென்ற ஒருவித ஆசை மாத்திரம் எனக்கு உண்டு. இருந்தாலும் நான் நெருங்கி அதைக் காட்டும்படி கேட்கத்தக்க அவ்வளவு அன்னி யோன்னியமான துப்பறியும் நண்பர் எனக்கு வாய்க்க வில்லை. நீங்கள் உங்களுடைய அதிகாரக் கடிதத்தைக் காட்டினால், அந்த ஆசையை தீர்த்துக்கொள்ளலாம்.

சுந்தரம்.—அதுதானா ஒரு பிரயாசை; இதோ காட்டு கிறேன், பாருங்களேன்-என்று கூறியபடி தமது சட்டைப் பையிலிருந்த அதிகாரக் கடிதத்தை சரேலென்று எடுத் துக் காட்டினார்.

கட்சிக்காரர் அதை வாங்கித் தமது கையில் வைத்துக் கொண்டு ஏதோ ஒரு புதுமையை நிதரிசனமாகக் காண் பவர்போல் மிகுந்த வியப்பைக் காட்டிய முகத் தோற்றத் தோடு அதை உற்றுப் பார்த்து, “ஓகோ இதுவா அதிகாரக் கடிதம்! இப்படித்தான் இருக்குமா! சரிதான்! அப்படி யானால், நீங்கள் துப்பறிவர் என்பது நிச்சயமாகிறது. நீங் கள் இந்த வக்கீல் ஐயாவுடைய இளைய மாமனார் என்றீர் களே! அதுவும் துப்பறியும் தந்திரங்களில் சேர்ந்தது தானோ?” என்றார்.

சுந்தரம்:—ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள். துப்பறி யும் வேலை பார்ப்பவர் ஒரு வக்கீலுக்கு இளைய மாமனா ராய் இருக்கக் கூடாதா! அதில் முரண்பாடு என்ன இருக்கிறது?

கட்சிக்காரர்:—முரண்பாடு இருக்கிறதாக நான் சொல்லவில்லையே! துப்பறிபவர் யாருக்கு வேண்டுமானா

லும் பந்துவா இருக்கலாம். அவர்கள் ஆண்டிகளா! அவர்களுக்கு உறவினர் இருக்கக் கூடாதென்று உத்தரவு செய்ய யாரால் முடியும். ஆனால் சில சமயங்களில், துப்பறிபவர் சில கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு, பொய்யாகிலும் சிலரை உறவினர் என்று சொல்லிக் கொள்வதுண்டு. அந்தமாதிரி நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களோ என்னும் சம்சயம் உண்டாகிறது. ஆனால் இந்த விஷயத்தில் வக்கீல் ஐயா உங்களுக்காகப் பொய் சொல்ல மாட்டார்கள். ஏன், வக்கீல் ஐயா, உண்மையில் இவர் உங்களுடைய இளைய மாமனாரா?

வக்கீல்:—(சிறிது தயங்கி) அந்த விஷயத்தை நீங்கள் கிளரிக் கிளரி ஏன் கேட்கிறீர்கள்? நான்தான் இதைப் பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேனே!

கட்சிக்காரர்:—ஆம், ஆம். சொன்னீர்கள். இவர் உங்களுடைய இளைய மாமனார் என்று சொன்னீர்கள்! இவருடைய அதிகாரக் கடிதத்தைப் பார்த்தவுடன், அந்த விஷயத்தில் எனக்கு ஒருவித சம்சயம் தோன்றியது, அதனால் கிளரிக் கிளரிக் கேட்கிறேன். இவர்தான் உங்களுடைய இளைய மாமனார். அதோ இன்னொருவர் இருக்கிறாரே அவர்தான் சொந்த மாமனாரோ?

வக்கீல்:—(கோபத்தோடு) நீங்கள் உங்கள் வழக்கு சம்பந்தமாய் வக்கீலை அமர்த்த வந்தீர்களா, அல்லது அநாவசியமாய் ஊர் வம்புகள் வளர்க்க வந்தீர்களா என்பது தெரியவில்லை.

கட்சிக்காரர்:—நான் அவசியமான விஷயங்களைப் பற்றியே பேசுகிறேன். இந்தக் கிழவர் உங்கள் மாமனாரா என்பதை மாத்திரம் சொல்லிவிடுங்கள். இனி வேறு எதைப்பற்றியும் நான் பேசுவதில்லை.

வக்கீல்:—ஆம். அவர் என்னுடைய சொந்த மாமனார் தான்—என்றார்.

அப்போது கட்சிக்காரர் வாயால் சிட்டி யடித்த படியே, தமது கையிலிருந்த அதிகாரக் கடிதத்தை உற்றுப் பார்த்து, "இது சரியாய்த்தானிருக்கிறது. ஆனால் பெய ரில் ஒரு பாகந்தான் அடிக்கப்பட்டிருக்கிறது. அது யாரு டைய வேலை என்பதுதான் தெரியவில்லை. இவருடைய பெயர் சுந்தரமாயிருக்காது. அதோடு இன்னம் ஏதாவது சேர்ந்திருக்கவேண்டும்'' என்று தமக்குத்தாமே பேசிக் கொண்டார்.

அவ்வாறு அவர் சிட்டி அடித்துத் தமக்குத் தாமே பேசிக்கொண்டதைக் கண்டு வக்கீலும் மற்றவர்களும் அவ ருடைய முகத்தை வியப்போடு பார்த்தனர்.

அப்போது, ''நமஸ்காரம், வக்கீல் சார்'' என்று சொல்லிக்கொண்டு ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர் திடும் பிரவேசமாய் அந்த ஹாலில் நுழைந்தார். அவருக்குப் பின் னல் நான்கு ஜெவான்கள் தட தடவென்று வந்து நுழைந் தனர்.

அப்போது கட்சிக்காரர் ஸப் - இன்ஸ்பெக்டரை நோக்கி, ''அதோ இருக்கிறவர் வக்கீலுக்கு மாமனாராம். இவர் அவருடைய தம்பியாம்; அதோடு இவர் துப்பறியும் திகப்பர சாமியாருடைய சீடராம். இவர்கள் இருவரை யும் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

அவர் சொல்லி வாய் மூடுமுன் இரண்டிரண்டு ஜெவான்கள் பிரிந்துபோய் கோபாலசாமியையும், சுந்தரத் தையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டனர்.

அதைக் கண்ட வக்கீலும் மற்றவர்களும் திடுக்கிட்டு திகில் கொண்டு ஸ்தம்பித்து, கட்சிக்காரர்போல் நடித்த வரையும் போலீஸாரையும், கைதிகள் இருவரையும் வியப் போடு பார்த்தனர்.

அதே காலத்தில் ஸர்க்கில் இன்ஸ்பெக்டரும் கந்த சாமி செட்டியாரும், தெண்டபாணியும், ராமசாமி பிள்ளை

யும் வேறு சிலரும் அங்கே வந்து சேர்ந்தனர். நடேசன் என்று சொல்லிக்கொண்ட மனிதனும் அந்தப் பல கலப்பு கும்பலில் காணப்பட்டான்.

திடீரென்று அத்தனை மனிதர்களும் வந்து தமது ஹாலில் நுழைந்ததைக் காண, வக்கீலும், அவரைச் சேர்ந்தவர்களும் முன்னிலும் பன்மடங்கு அதிகமான வியப்பும், திகைப்பும் அடைந்தனர்.

அப்போது ஸப்-இன்ஸ்பெக்டர் வக்கீலைப் பார்த்து, "ஏன் இப்படி ஆச்சரியத்தோடு பார்க்கிறீர்கள்? உங்கள் வீட்டில் திருடிய ஆசாமி அகப்பட்டுவிட்டான்" என்ருர்.

வக்கீல்:—(அபாரமான வியப்போடு) எங்கே?

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அவனுடைய வேஷத்திலிருந்து இதோ வெளியில் வரப்போகிருன் பாருங்கள்.

வக்கீல்:—(கட்சிக்காரர் போல் நடித்தவரைக் காட்டி) இந்த மனிதரா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அடாடா! இவர் துப்பறியும் மீனுட்சிசுந்தரம் பிள்ளையல்லவா. இவர் திகம்பர சாமியாருடைய முக்கிய சீடராயிற்றே.

வக்கீல்:—இதோ இருக்கும் சுந்தரம் தாமல்லவா திகம்பரசாமியாருடைய முக்கிய சீடர் என்று சொன்னுர்.

மீனுட்சிசுந்தரம்:—இவர் உங்களுடைய இளைய மாமனுர் என்றீர்களே? இவரைப்பற்றிய உண்மை உங்களுக்குத் தெரியாதோ?

வக்கீல்:—இவர், தாம் துப்பறிவரென்றும், தன் வீட்டில் நடந்த திருட்டில் சம்பந்தப்பட்ட திருடனைக் கண்டு பிடிக்க தம்மை திகம்பர சாமியார் அனுப்பி இருப்பதாகவும் சொன்னுர்; மற்றவர் சந்தேகிக்காதிருப்பதற்காக என் இளைய மாமனுர் என்று சொல்லச் சொன்னுர்.

மீனுட்சிசுந்தரம் :—(ஜெவான்களை நோக்கி) இந்த சுந்தரத்தின் சட்டை, நிஜார், தாடி முதலியவைகளை நீக்குங்கள்—என்ருர்.

உடனே அவருடைய தாடியை ஒருவன் இழுத்தான். அது கையோடு வந்துவிட்டது. இன்னொருவன் அவனுடைய சட்டையையும், நிஜாரையும், தொப்பியையும் விலக்கினன். உள் புறத்தில் இடுப்பில் ஒரு துணி காணப்பட்டது. அவன் அதிக வயதாகாதவனுய்க் காணப்பட்டான்.

அவனை உற்றுப் பார்த்த வக்கீல் வியப்போடு, "என்னையும், என் சம்சாரத்தையும் கட்டி போட்டுவிட்டு, என் சொத்துக்களை எடுத்துக்கொண்டு போனவன்போல் இருக்கிருனே இவன்" என்ருர்.

மீனுட்சிசுந்தரம் :—இன்னம் கூடவா சந்தேகம்! இவன்தான் திருடியவன்; இவன்தான் சோமசுந்தரம்.

வக்கீல் :—ஆம், ஆம், இவன்தான் சோமசுந்தரம். இவனை என் மாமனர் அம்மன் கோவில் சந்து 14-வது வீட்டிலுள்ள தமது நண்பரோடு இருந்ததாகச் சொன்னரே!

மீனுட்சிசுந்தரம் :—இந்த அயோக்கியக் கிழவனை இன்னமும் நீங்கள் உங்கள் மாமனர் என்று குறிக்கிறீர்களே? இவன் இந்த சோமசுந்தரத்தின் தகப்பனர். அப்பனும், மகனும் ஏதோ கெட்ட எண்ணத்தோடு இங்கே வந்து வேறு வேஷத்தில் ஒளிந்துகொண்டிருக்கிருர்கள்.

வக்கீல்:—(ஆச்சரியத்தோடு) இந்த அத்தாட்சிப் பத்திரம் இவனுக்கு எப்படிக் கிடைத்தது?

மீனுட்சிசுந்தரம் :—இது என்னுடையது. நான் இந்த ஊருக்கு வந்ததற்கு மறுநாள் அது என் சட்டைப் பையிலிருந்து காணுமல் போய்விட்டது. அதுவே இப்போது அகப்பட்டது. மீனுட்சி என்ற பெயரை அடித்து

விட்டு சுந்தரம் என்பதை வைத்துக்கொண்டு, தன் பெயரை அதற்கநுசரணையாக சுந்தரம் என்று சுருக்கி வைத்துக்கொண்டிருக்கிறான்.

வக்கீல் :—ஓகோ, அப்படியா! என் வீட்டிலும் கந்த சாமி செட்டியார் வீட்டிலும் திருட்டு நடந்தபோது இவன் தன் வீட்டில் இருந்ததாக தக்க சாட்சிகளைக் கொண்டு மெய்ப்பித்தானே! அந்த சாட்சியும் திருப்திகரமாய்த் தானே இருந்தது.

மீனாட்சிசுந்தரம் :—அதுதான் இவனுடைய வேலைத் திறம். இரண்டு சமயங்களிலும் இவன் 15-வது நெம்பர் வீட்டில் இருந்திருக்கிறான். அந்த வீட்டில் பின் பக்கத்தில் வழி இல்லை. ஆனால் அங்கே ஒரு கிணறு இருக்கிறது. அதற் குப் பக்கத்தில் பம்பாய் கக்கூஸ் இருக்கிறது. இரண்டு சந்தர்ப்பங்களிலும், இவன் பின்னாலுள்ள கக்கூஸுக்குப் போய் வந்ததாகச் சொல்லுகிறார்கள். பின் பக்கத்தில் வழியில்லை யாகையால், இவன் வீட்டைவிட்டு வெளியில் போகவில்லை யென்று போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியோரும், விருந்தாளிகளும் நினைத்து அப்படிச் சொல்லிவிட்டனர்.

வக்கீல் :—பின் பக்கத்தில் கக்கூஸுக்குப் போனவன் எப்படி வெளியில் போனான்?

மீனாட்சிசுந்தரம் :—கிணற்றின் வழியாகப் போனான்!

வக்கீல் :—(வியப்போடு) என்ன ஆச்சரியம்! கிணற் றின் வழியாக எப்படிப் போகிறது?

மீனாட்சிசுந்தரம் :—15-வது நெம்பர் வீடும், அதற்கடுத்த 14-வது நெம்பர் வீடும் இவனுக்குச் சொந்தமானவை. 15-வது நெம்பர் வீட்டில் பின்னால் உள்ள கிணற்றில், ஒரு மார்பளவுதான் தண்ணீர் இருக்கிறது. தண்ணீருக்குள் ஒரு பக்கத்தில் சுவரில் பெரியவழி இருக்கிறது. அந்தச் சுவரின் அகலம் 1½ அடி. அந்த வழியால் போனால், சுவருக்கு அப்

பால் அது ஒரு தொட்டிபோல திறப்பாயிருக்கிறது கிணற்றில் தண்ணீர் எந்த மட்டத்திற்கு நிற்கிறதோ, அதே மட்டத்திற்கு அந்தத் தொட்டியிலும் எப்போதும் தண்ணீரை விட்டு வைத்திருக்கிறார்கள். அந்தத் தொட்டி 14-வது நெம்பர் வீட்டின் ஓர் அறைக்குள் இருக்கிறது. ஒருவன் 15-வது நெம்பர் வீட்டிலுள்ள கிணற்றில் முழுகினால், ஒரே விநாடியில் 14-வது நெம்பர் வீட்டிலுள்ள தண்ணீர் தொட்டிக்குப் போய்விடலாம். அங்கிருந்து படிகளின் வழியாக ஏறி வெளியில் போய், மறுபடி அதே வழியாக மேலே வந்து 15-வது நெம்பர் வீட்டின் பின் பக்கத்திற்கு வந்து விடலாம்.

வக்கீல் :—உடம்பும் உடையும் நனையாமல் இருக்க வேண்டுமே?

மீனாட்சிசுந்தரம் :—அதற்கு இவன் வாட்டர் புரூப் (Water Proof) அங்கியைப் போட்டுக் கொண்டு போய் வந்திருக்கிறான். அதுவும் இவனுடைய பெட்டியில் இருந்து கண்டு எடுக்கப் பட்டிருக்கிறது.

வக்கீல் :—அப்படியானால், என் வீட்டிலும், கந்தசாமி செட்டியார் வீட்டிலும் திருடப்பட்ட சொத்துக்கள் 15, 14-வது நெம்பர் வீடுகளில் இருந்து அகப்பட்டனவா?

மீனாட்சிசுந்தரம் :—இல்லை. வேண்டுமென்றே இவர்கள் அந்த இரண்டு வீடுகளிலும், சொத்துகளை வைப்பதில்லை. இவர்களுக்கு இவைகளைப் போல செட்டித் தெருவு 99, 100-வது நெம்பர் வீடுகள் இரண்டும் சொந்தமானவை. 99-வது நெம்பர் வீட்டில் இதே போல ஒரு கிணறும், 100-வது நெம்பர் வீட்டில் தண்ணீர்த் தொட்டியும் இருக்கின்றன. அங்கே இந்த சோமசுந்தரம் ராமநாதம் செட்டியார் என்று பெயர் வைத்துக்கொண்டு வேறுவிதமான வேஷத்துடன் இருப்பான். 100-வது நெம்பர் வீடு எப்போதும் பூட்டப்பட்டிருக்கும் அதில்தான் திருட்டு சொத்துக்கள் யாவும் இருந்து எடுக்கப்பட்டன.

வக்கீல் :—கிணற்றின் மர்மத்தை நீங்களா கண்டு பிடித்தீர்கள் ?

மீனாட்சிசுந்தரம் :—இல்லே. வேதாரணியத்தி லிருந்து நடேசன் என்று ஒருவன் வந்திருக்கிருன். அவன் சில விஷயங்களைத் தன் யூகத்தினுல் கண்டு பிடித்தான் ; இவர்களோடு கூட்டாகச் சேர்ந்து வேலை செய்வதாகச் சொல்லி, இவர்களோடு சேர்ந்துகொண்டிருந்தே சில தகவல்களைக் கண்டுபிடித்தான்.

வக்கீல் :—அவன் ஏன் இந்த மர்மத்தை யெல்லாம் உங்களிடம் வெளியிட்டுவிட்டான் ?

மீனாட்சிசுந்தரம் :—அவனுக்கு இவர்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பாகத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டதாகச் சொல்லுகிருன். அவனைப் மன்னிப்பதாகப் போலீஸார் எழுதிக் கொடுத்ததன்மேல், அவன் உண்மையை வெளியிட்டான் !—என்ருர்.

அந்த ஆச்சரியமான வரலாற்றைக் கேட்டு எல்லோரும் அபாரமான வியப்படைந்து மூக்கின்மேல் விரலை வைத்தனர்.

வக்கீல் :—இந்த ராமசாமிபிள்ளைக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம் ?

மீனாட்சிசுந்தரம் :—உங்கள் மாமனர் என்று நடித்தவனுடைய தம்பியே ராமசாமி பிள்ளை. இவருடைய பிள்ளை தான் பாலசுந்தரம் என்பவன். ராமசாமி பிள்ளையின் உண்மையான பெயர் பழனியப்ப முதலியார். அவருடைய தமயனுருடைய பெயர் பொன்னம்பலம். இருவரும் பகையின் காரணமாய் முப்பது வருஷங்களுக்குமுன் பிரிந்தவர்கள். தம்பி பெருச்சாளிப் பட்டியில் இருந்தார். அண்ணன் நரியூரில் இருந்தார். இந்த சோமசுந்தரம் பார்வைக்கு இருபத்தைந்து வயதுடையவனுய்க் காணப்பட்டாலும் இவனுக்கு வயது சுமார் முப்பத்தைந்து ஆகிறது.

இவன் தன்னுடைய சிற்றப்பனுடைய பொருளை யெல்லாம் அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், அவரைக் கூட்டாக வைத்துக்கொண்டு ஜவுளி வியாபாரம் நடத்தினன். இவனை பழனியப்பர் ஐந்து வயதில் பார்த்தவராதலால் இவனுடைய இருபதாவது வயதில் அடையாளத்தைக் கண்டு கொள்ளாமல், யாரோ அன்னிய மனிதன் என்று எண்ணி இவனோடு கூட்டாக வியாபாரம் நடத்தினர். அப்போது இவன் சுந்தரமூர்த்தி என்று பெயர் வைத்துக்கொண் டிருந்தான். இவன் பல வகைகளில் சிறிய தகப்பனுரை ஏமாற்றி, அவர் பேரில் சில போர்ஜரிக் குற்றங்களில் சுமத்தி அவருக்கு பதினலு வருஷம் சிறைவாசம் கிடைக்கும்படி செய்து, அவருடைய சொத்துக்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு வியாபாரத்தை நிறுத்திவிட்டான். அவருடைய மனைவி அந்த விசனத்தைத் தாங்கமாட்டாமல் சித்த சுவாதீனத்தை இழந்து, ஊரூராய் அலைந்து, இன்ன இடத்திற்குப் போனுள் என்பது தெரியாதபடி மறைந்து போய்விட்டாள்.

வக்கீல்:—இந்தப் பழைய வரலாறெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது.

மீனுட்சிசுந்தரம்:—அதையும் கேடி நடேசனே கண்டு பிடித்தான். இவன் பழனியப்பருடைய பெட்டியில் இருந்து இரண்டு உறைகளை எடுத்துக்கொண்டு வந்து பார்த்ததில், பழைய வரலாறு முழுதும் தெரிந்தது.

வக்கீல்:—அப்படியானல் கேடி நடேசன்தான் இவர்களைப் பற்றிய சங்கதிகளை யெல்லாம் வெளியிட்டு விட்டான்போல் இருக்கிறதே!

மீனுட்சிசுந்தரம்:—ஆம். அவன் பெரிய திருடனல்லவா. அவனையே இவர்கள் ஏமாற்றினல், அவன் சும்மா விட்டு விடுவான! இந்த சோமசுந்தரம் மறுபடி கந்தசாமி செட்டி

யாருடைய வீட்டில் திருடும்பொருட்டு, அவருடைய குமாஸ்தா தெண்டபாணியை இரகசியமாய் வரவழைத்து, நூறு ரூபாய் கொடுத்து, இரும்புப் பெட்டியின் பூட்டு வாயில் மெழுகை ஒற்றிக் கொடுக்கச் செய்து பெற்றுக் கொண்டு, கடைசியில் அவனை ஏமாற்றிவிட்டான். அதை நடேசன் எப்படியோ தெரிந்து கொண்டு, அவனோடு தொடர்ந்து ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய், அவனையும் ஆதாரத்தோடு கைதியாக்க உதவி செய்தான். பழனியப்ப ருடைய மகனான பாலசுந்தரம் தான் வருவதாக எழுதின தால், இவன், அவனால் தங்களுக்கு ஏதாவது கெடுதல் நேருமென்று தந்திரம் செய்து, அவனிடம் ஒரு பெட்டியில் திருட்டு நகையை வைத்துக் கொடுத்தனுப்பி போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு டெலிபோன் மூலம் சொல்லி, அவனைப் பிடித்துக்கொள்ளும்படி செய்துவிட்டான். அதையும் நடேசனே கண்டுபிடித்து வெளிப்படுத்தினான்.

வக்கீல்:—ஏதேது! நடேசனுடைய வேலை முள்ளைக் கொண்டு முள்ளை எடுப்பதுபோல் இருக்கிறதே!

மீனாட்சிசுந்தரம்:—இது மாத்திரமா! இவர்கள் இருவரும் இங்கே வந்திருப்பதைத் தெரிந்துகொண்டு நடேசன் உங்களை எச்சரிப்பதற்கு ஒரு கடிதம் எழுதி அதை நேரில் உங்களிடம் கொடுப்பதற்கு இங்கு வந்தபோது, அதை இந்த சுந்தரம் பெற்றுக்கொண்டு உங்களிடம் கொடுக்காமல், அதைப் பிரித்து, உள்ளே இருந்ததை எடுத்துக் கொண்டு, வேறே ஒரு கடிதத்தை வைத்து உங்களிடம் கொடுத்திருக்கிறான்.

வக்கீல்:—ஓகோகோ! ஆசாமிகள் பெரிய பாதாள ஜோகிகளா யிருக்கிறார்கள்! நல்ல வேளை நான் தப்பினேன்! அப்படியானால், மலேரியா இன்ஸ்பெக்டராக வந்ததுகூடப் பகல் வேஷந்தானோ?

மீனாட்சிசுந்தரம்:—ஆம். நான்தான் அப்படி வந்தேன். என்னோடு சேவகன் மாதிரி வந்தவன் நடேசன். மற்றவர்

போலீஸார். கிணற்றைப்பற்றிய உண்மையை சோமசுந்தரமே எழுத்து மூலமாய் ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும் என்று நடேசன் அந்த மாதிரி செய்தான்— என்றார்.

அதுவரையில் மீனுட்சிசுந்தரம் பிள்ளை கூறிய விபரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் வக்கீலைப்போலவே மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷப் பூரிப்பும் அடைந்து நடேசன் இருந்த இடத்தைப் பார்க்க, அவன் திடீரென்று ஏதோ ஓர் உடையை எடுத்துத் தன் தலையில் மாட்டிக்கொள்ள முயன்றது தெரிந்தது.

அதன் பிறகு அவனுடைய தலை முதலிய உறுப்புகள் எல்லாம் மறைந்துகொண்டே போயின. முடிவில் அவனுடைய உடம்பு முழுதும் அடியோடு மறைந்துபோய்விட்டது. அதைக் கண்டு எல்லோரும் திகைத்து, அது என்ன மாயமோ என்று நினைத்து மதிமயக்கம் அடைந்தனர்.

அப்போது அங்கு வெறு வெளியிலிருந்து ஒருவர் பேசிய குரலோசை உண்டாயிற்று. "மிஸ்டர் இன்ஸ்பெக்டர் ஸார்! நான் உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன். நான் செய்த குற்றங்களை மன்னித்ததாக நீங்கள் எனக்கு எழுதிக் கொடுத்தது அர்த்தமில்லாமல் போய்விட்டது. உண்மையில் நான் கேடியுமல்ல; நடேசனுமல்ல. வேதாரணியத்தில் அந்த மாதிரி திருடன் எவனுமில்லை. திருடன் என்று சொல்லிக்கொண்டு திருடர்களோடு பழகினுல் உண்மையை சுலபத்தில் கண்டு பிடிக்கலாம் என்பதே என் கருத்து. அதனுல் நான் இந்தப் பொய் வேஷத்தில் வந்தேன். இந்த மாதிரி உங்களை நான் ஏமாற்றியதை மன்னிப்பீர்களென்று நம்புகிறேன். நமஸ்காரம். நான் போய் வருகிறேன்" என்று யாரோ கூறிய சொற்கள் கணீர் கணீரென்று உண்டாயின. ஆனுல் அந்த இடம் வெறு வெளியாயிருந்தது.

உடனே இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்துடன், "நீங்கள் யார், ஸார்?" என்றார். அதற்கு மறுமொழி உண்டாக வில்லை.

அப்போது மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "அவர்கள் இன்னாரென்பது தெரியவில்லையா! அவர்கள் தான் எங்கள் குருவான திகம்பர சாமியார். அவர்களுடைய கண்ணாடி உறையைப் போட்டுக்கொண்டு மறைந்துவிட்டார்கள்!" என்றார்.

அதைக் கேட்ட எல்லோருக்கும் உரோமம் சிலிர்த்தது. எல்லோரும் திடுக்கிட்டு, "ஆ! திகம்பர சாமியாரா கேடி நடேசனாய் வந்தது! அடாடா! என்ன வேடிக்கை செய்கிறார் அந்த மனிதர்! ஆச்சரியம்! ஆச்சரியம்! இது எவரும் கனவில்கூட நினைக்காத விநோதம்!" என்று கூறி சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

The Rajan Electric Press, Madras:---1---'46

## நேரு ஹிந்தி முதல் பாடம், இரண்டாம் பாடம்

தமிழ் மூலமாய் ஹிந்தி உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், கூட்டு எழுத்துக்கள், சிறு வார்த்தைகள், எண்கள் முதலியவை சுலபமாய்க் கற்றுக் கொள்ளலாம். **64-பக்கங்கள் கொண்டது;** விலே அணு 6. ஒரு காபி அனுப்ப அணு 0-7-0 மணியார்டர் செய்யக் கோருகின்றோம். **[நேரு ஹிந்தி ஆசான் வாங்குபவர்கள் ஷ புத்தகத்தை வாங்க வேண்டியதில்லை.]**

Nehru Hindi-Telugu I & II Reader. Price Six Annas

---

## நேரு ஹிந்தி ஆசான்

அல்லது

## ஹிந்துஸ்தானி ஸ்வபோதினி

உபாத்தியாயர் உதவியின்றித் தமிழைக் கொண்டு நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையைச் சப்ததோஷ மில்லாமல் சுலபமாய்ப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக் கூடிய **அரிய பெரிய புத்தகம்.** ஹிந்திப் படங்களையே பெரிதும் விரும்பும் சினிமா நேயர்களுக்கு இது மிகவும் **இன்றியமையாத புத்தகமாகும்.** இது 22 - பெரிய அத்தியாயங்களாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. **விலை ரூபா ஒன்று.** ரூபா 1-2-0-க்கு மணியாடர் அனுப்பினால் ஒரு காபி அனுப்பி வைக்கப்படும். வி. பி. யில் அனுப்பப்படுவதில்லை.

---

## புதிய ஸங்கீத புத்தகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ராமுலு ஸ்ங்கீத சிந்தாமணி | ... | 3 | 0 | 0 |
| 2. | ராமுலு திராவிட கானம் | ... | 3 | 0 | 0 |
| 3. | ராமுலு ஸங்கீத சில்லரைக் கோவை | ... | 3 | 0 | 0 |

**குறிப்பு:** எட்டு ரூபாய் முன்பணமாக மணி ஆர்டர் செய்தால் ஷ மூன்று புத்தகங்களையும் தபால் செலவின்றி ரிஜிஸ்தர் மூலம் அனுப்பப்படும். விபரமான கேட்லாக்கு வேண்டுவோருக்கு இனாம்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்**

# ராமுலு ஒப்பற்ற நவீன பிரசுரங்களான முற்கால தற்காலப் பெரியார்களது வாழ்க்கைச் சரித்திரங்கள்

உலகின் நியதியை மாற்றியமைத்து மாண்பு பெறவைத்த—ஜன சமுதாயத்தைத் திருத்தியமைத்து சிறந்து ஒளிரச் செய்த—தாங்கள் பிறந்த தேசங்களுக்கு அழியாப் புகழை யுண்டாக்கிச் செழித்தோங்கச் செய்த பிரபல பிரமுகர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை, எளிய நடையில் பிரபல ஆசிரியர்களைக்கொண்டு தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறோம். பரம ஏழை மக்களும் வாங்கிப் படித்து பயன் பெற வேண்டி, சிறப்பு பொருந்திய 'இந்த **ராமுலு ஒப்பற்ற நவீன பிரசுரங்கள்**' ஒவ்வொன்றுக்கும் **இரண்டு அணு** விலையே வைத்திருக்கின்றோம்.

**ஒவ்வொன்றும் படத்துடன் 32 பக்கங்கள் கொண்டது:**

1. மகாத்மா காந்தி
2. கஸ்தூரிபாய் காந்தி
3. ஜவஹர்லால் நேரு
4. சுபாஷ் சந்திர போஸ்
5. தேசபந்து தாஸ்
6. ரவீந்திரநாத தாகூர்
7. ஜகதீஸ் சந்திர போஸ்
8. மகாதேவ கோவிந்தரானடே
9. கோபாலகிருஷ்ண கோகலே
10. இராஜா ராம்மோகன் ராய்
11. சுப்பிரமணிய பாரதியார்
12. அப்துல்கலாம் அஜாத்
13. முகம்மது அலி ஜின்னு
14. அன்னி பெஸண்டு அம்மை
15. கவி அரசி சரோஜனி தேவி
16. சியாங் கே ஷேக்
17. முஸ்தபா கமால் பாஷா
18. பிரான்கிலின் ரூஸ்வெல்டு
19. வின்ஸ்டன் சர்ச்சில்
20. ஜோஸப் ஸ்டாலின்
21. அடால்ப் ஹிட்லர்
22. எமன் டிவாலரா
23. நெப்போலியன்
24. ஸ்ரீ புத்தர் பெருமான்
25. பகவான் அரவிந்தர்
26. ஸ்ரீ ஸாயி பாபா
27. ஸ்ரீ ரமண மகரிஷி
28. ஸ்வாமி ராமதீர்த்தர்
29. ஸ்வாமி விவேகானந்தர்
30. ஸ்ரீ ராமகிஷ்ண பரமஹம்சர்
31. ஸ்ரீ சாரதாமணி தேவியார்
32. ஸ்ரீமத் பகவத்கீதை வசனம்
33. ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகள்
34. ஸ்ரீ திருவள்ளுவ நாயனர்
35. ஸ்ரீ ராமாநுஜாசாரியார்
36. ஸ்ரீ சங்கராசாரியார்

எந்த 5, 10, 20 தினுசுகளுக்காவது தபால்செலவு முறையே 0-2-0, 0-3-0, 0-6-0; ரிஜிஸ்தர் செலவு 0-3-0 ஆக சேர்த்து மணிஆர்டர் அனுப்பவும். புத்தகங்களை **வி. பி. யில் அனுப்புவதில்லை.** ஸ்டாம்புகள் பெற்றுக் கொள்வதில்லை. ஒரு ஆர்டர் 5-தினுசுகளுக்கு குறைந்து அனுப்ப இயலாது. ஆர்டர் செய்தவைகளில் ஏதாவது கைவசம் இல்லாமலிருந்தால் அதற்குப் பதில் வேறு தினுசு அனுப்பப்படும்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்**

# வடுவூர்-K. துரைசாமி அய்யங்கார் எழுதிய நாவல்கள்

1. திகம்பர சாமியார்
2. துரைக்கண்ணம்மாள்
3. கனகாம்புஜம்
4. திரிபுர சுந்தரி
5. இராஜேந்திரமோகன
6. மருங்காபுரி மாயகொலை

இவை கிடையாது

| | ரூ. | அ. |
|---|---|---|
| 7. புஸ்பாங்கி | 3 | 8 |
| 8. மிஸிஸ்லேலாமோகினி | 3 | 0 |
| 9. மன்மதபுரி மந்திரம் | 2 | 12 |
| 10. தில்லைநாயகி | 2 | 4 |
| 11. சதானந்த சாமியார் | 2 | 4 |
| 12. பன்னியூர் சர்மா | 2 | 4 |
| 13. லக்ஷ்மிகாந்தம் | 2 | 0 |
| 14. முத்துலக்ஷ்மி | 1 | 12 |
| 15. நீலமேலாசனி | 1 | 8 |
| 16. சோமசுந்தரம் | 1 | 8 |
| 17. நங்கைமடவன்னம் | 1 | 8 |
| 18. பச்சைக்காளி | 1 | 8 |
| 19. சொக்கன் செட்டி | 1 | 8 |
| 20. பூஞ்சோலையம்மாள் | 1 | 8 |
| 21. துரைராஜா | 1 | 8 |
| 22. சிங்கார சூர்யோதயம் | 1 | 8 |
| 23. பூச்சாண்டி எம்மே! | 1 | 8 |
| 24. சிவராம கிருஷ்ணன் | 1 | 8 |
| 25. பிச்சுமுத்துகோனான் | 1 | 8 |
| 26 பாவடைச் சாமியார் | 1 | 8 |
| 27. நவநீதம் | 1 | 8 |
| 28. டாக்டர் சோணசலம் | 1 | 8 |
| 29. தங்கம்மாள் | 1 | 8 |
| 30. வசந்த கோகிலம் | 1 | 4 |
| 31. சமயசஞ்சீவி | 1 | 8 |
| 32. கலியாணசுந்திரம் | 1 | 8 |
| 33. மாயசுந்தரி | 1 | 0 |

குறிப்பு: உங்களுக்குத் தேவையான நாவல்களுக்கு அதன் கிரயமும் தபால் செலவும் (ஒரு புத்தகத்திற்கு அணா 0-4-0 விகிதம்) சேர்த்து முன்பணமாக மணி ஆர்டர் மூலம் அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் புத்தகங்கள் **வி. பி. யில் அனுப்பப்படுவதில்லை.**

---

மேலே குறித்த நாவல்கள் தவிர வேறு தினுசு நாவல்கள் எம்மிடம் கிடைக்காது; எம்மால் அவைகளை வாங்கி அனுப்பவும் இயலாது.

---

**செய்யூர்—S. சாரநாயகி அம்மாள், எஸ். எஸ். அருணகிரிநாதர்**— இவர்களால் எழுதப்பட்ட எமது நாவல்கள் இப்போது கிடைக்காது.

---

**வசீகரண தந்த்ரம்**—தமிழ்ப் பதிப்பு—தற்சமயம் கிடைக்காது

**எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்**

A Great Problem Solved By Prof. Emesor!

No More Fear Of Language Difficulty!!

# RAMULU'S PRACTICAL GUIDE

— TO —

## THREE POPULAR LANGUAGES

[Through the Medium of English]

This handy 'Three-in-one' book is a God send to those who wish to acquire of their own accord a working knowledge of three of the Principal languages of India—**Hindusthani** the predominent language of North, **Tamil and Telugu** the prominent tongues of the South—through the medium of English.

**PRICE: RS. 2**

A copy will be sent on receipt of Rs. 2-4-0 by Money Order. Books will not be sent by V. P. P.

## Ramulu's Ready Reckoner

Contains Interest Tables, Table of Wages and Rent, with other useful Tables. The Book will be **Ready** in **April 1946.** Price: **Rs. 1-8-0.** Please remit Rs. 1-10-0 by Money Order.

**M. S. RAMULU & Co., 286, Esplanade, Madras**

B-1
10-20

Mesmerise The World To Bow At Your Feet

# VASIKARANA TANTRA

—OR—

## THE ART OF CONTROLLING OTHERS

has been published embodying the knowledge gained after strenuous efforts of many years by the famous *Swami Premananda Yogi.* Intended mainly to benefit the world, this wonderful book deserves to be purchased and read by one and all forthwith. The practical knowledge gained after a perusal of the book would enable even the most ordinary person to achieve wonders! He could marry the maiden he may desire to marry. One will be able to secure the power to make a man who is rich to do as one pleased, the power to exorcise devils and evil spirits, the power to cure madness in men and women, the power to control the will of others, the power to win over the love of women, powers of witchcraft, the power to restore tran. quility and so on too numerous to mention can be had by young and old, men and women from a knowledge of the contents of this valuable book of Nature's many mysterious powers revealed.

**Price—English Edition Rs. Three Each** } **Postage 0—6—0 Each**
**Price—Telugu Edition Rs. Two Each** }

**Tamil Edition......No Stock.**

Please remit the amount by M. O. and state in what language you require. No. V. P. P.

**SEND US YOUR ORDER NOW!**

YOU OWE IT TO YOURSELF TO SECURE A COPY OF THIS REMARKABLE BOOK AND TO READ IT CAREFULLY

M. S. RAMULU & Co., 286, ESPLANADE, MADRAS